நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**வெற்றி ரகசியம்**

துப்பாக்கி குண்டு துரத்தி அடிப்பதற்குத்
தப்பாமல் சைக்கிள்ச் செயினோடு - எப்போதும்
சண்டைக்குத் தயாரான சகாவும் இருந்துவிடின்
வெண்டிடலாம் தேர்தலிலே வெற்றி!

— ஈழமோகம்



இதழ் 163

ஜனவரி 14, ஜனவரி 27, 1999

விலை ரூபா 10.00


## வடமேல் மாகாண தேர்தல் களம்: போர்க்களம்?



## இக்பால் நகர்: அகதி வாழ்வு!


## பிக்குணிகள் சாசனம்: ஆணாதிக்கத்திற்கு ஒரு சவால்!





## மலையகம் மீது ஆக்கிரமிப்பு!

## தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்: 25 வருட நினைவு!



நன்றி - நூலகத்திட்டம்



# சிலைக்கு விலைபேசும் இயக்கங்கள்!

ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் போராளி சிவகுமாரனின் தலைக்கு விலை பத்து லட்சம் ரூபா பேசியது அரசு. அந்தளவுக்கு அரசுக்கு அவர் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார்.

பின்னர் ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்றதும் அவ்வாயுதக் குழுக்கள் எல்லாம் சிவகுமாரனை முதற் தியாகியாக வரித்துக் கொண்டதும் வரலாறு.

உரும்பிராய்ச் சந்தியில் அவனது நினைவாக நிறுவப்பட்டிருந்த சிலை கூட இலங்கை அரசுக்கும் , அமைதி காக்க வந்த இந்தியப் படைக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவரவர் பங்கிற்கு அதனை இடித்து வைத்திருந்தனர்.

இறுதியாக றிவிரச இராணுவ நடவடிக்கைக்கும் சிவகுமாரனின் சிலை தப்பவில்லை.

அன்று சிவகுமாரனை தமது முதல் தியாகியாக வரித்துக் கொண்ட தமிழ்க் குழுக்கள் பல இன்று சிவகுமாரன் யாரைத் தனது முதல் எதிரியாகக் கொண்டிருந்தானோ அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்றன.

இப்போது இந்தக் குழுக்களிடையே சிவகுமாரனுக்குச் சிலை வைப்பதில் இழுபறி ஏற்பட்டிருக்கிறது.

சிவகுமாரன் இறந்த தினமான ஜுன் 5ம் திகதி புளொட்டும், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் சேர்ந்து உரும்பிராய்ச் சந்தியில் சிலை எழுப்புவதற்கான அடிக்கல்லை நாட்டின.

அதற்குப் பிறகு உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை. உரும்பிராய்ப் பிரதேசம் நீர்வேலிப்பிரதேச சபையின் கீழ் வருகிறது. நீர்வேலிப் பிரதேச சபை ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. ஈ.பி.டி.பியினரோ அவ்விடத்தில் சிலை வைக்க அனுமதி தராமல் இழுத்தடிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

ஏற்கெனவே நாட்டப்பட்ட அடிக்கல் அப்படியே இருக்க ஜனவரி 10ம் திகதி உரும்பிராய் சந்தியில் அதே இடத்தில் ஈ.பி.டி.பி யினரும் சிவகுமாரனின் சிலைக்காக அடிக்கல் ஒன்றை நாட்டியிருக்கிறார்கள்.

அவ்வைபத்தில் பேசிய ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவதாசன் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சிவகுமாரனின் சிலையை வெண்கலத்தில் வடித்துத் தருவதாக வாக்களித்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

புளொட்டும் ஈபிஆர்.எல்.எப்பும் முன்னர் நாட்டிய அடிக்கல்லைப் பற்றி அவர் மறந்தும் பேசவில்லை.

சிவகுமாரன் உயிருடன் இருந்த போது விலை பேசியது இலங்கை அரசாங்கம். இப்போதோ சிலை வைப்பதையே வியாபாரமாக்குகின்றன இந்தத் தமிழ்க் கட்சிகள்.

உண்மை தான் சிவகுமாரன் தனக்கு வெண்கலத்தில் சிலை வைக்கச் சொல்லி இவர்களிடம் சொல்லி விட்டா சயனைட்டைக் கடித்தான்?

இதற்றிடையே நடந்தது இன்னொரு சுவாரசியமான சம்பவம். இந்த அடிக்கல் நாட்டு வைபவத்திற்கு ஈ.பி.டி.பி பிரமுகர்கள் போக பாதுகாப்பு வழங்கினர் படையினர். அங்கு இடம்பெற்ற கூட்டத்தின் அப்பிரமுகர் பேசும் போது சற்று உணர்ச்சி வசப்பட்டு சிவகுமாரனின் சாவுக்கு படையினரே காரணமெனக் கூறி படையினரைத் தாக்கிப் பேசினார்.

கோபமுற்ற படையினர் பாதுகாப்பு வழங்குவதை இடையில் நிறுத்தி-விட்டுத் திரும்பி விட்டதாகவும் ஒரு தகவல் சொல்கிறது.

கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் கேட்கிறார்:

படையின் பாதுகாப்பும் வேண்டும் பழுதில்லாமல் அடுத்த தேர்தலில் வாக்கும் வேண்டும் என்றால் என்ன செய்ய முடியும்?

# சேற்றை வாரியிறைக்கும் முயற்சி !

அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி புனித பிரதேசத் திட்டம் அங்கு வாழும் முஸ்லிம், பௌத்த மக்களிடையே இனமோதல்களை உருவாக்குமளவுக்கு வளர்ந்து செல்கிறது.

பௌத்த சின்னங்கள் கிடைக்கப்பெறும் பிரதேசம் எனக்கூறி ஏக்கர் கணக்கான காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிங்கள மக்களைக் குடியேற்றியாயிற்று. அவ்வத்துமீறிய குடியேற்றங்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் இனவிகிதாரத்தில் இரண்டாம் இடத்துக்குத் தள்ளி விட்டுள்ளது.

ஐ.தே.க. அரசு காலத்திலேயே கிழக்கின் பல ஊர்களில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்தமை குறிப்பிடத்தகது. அதில் முக்கிய பங்கு வகித்தவர் அம்பாறை மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் தயாரட்னவே என்று அம்பாறை மாவட்ட முஸ்லிம்களால் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சியும் அதன் பிரதிநிதித்துவமும் ஐ.தே.க. பிரதிநிதித்துவத்தில் அச்சத்தை வளர்த்தன. முஸ்லிம் வாக்குகளால் கிடைத்த பிரதித்துவம் அண்மையு தேர்தல்களில் இல்லாமல் போனது. எனவே, சிங்கள வாக்குகளைத் தக்க வைக்கும் எண்ணம் வலுப்பட குடியேற்ற மோகமும் அதற்காக அப்பிரதேசத்தை புனித பிரதேசமாக்கும் வேகமும், முன்னெப்போதுமில்லாவாறு அதிகரித்தன.

இப்போக்கில் மிக அண்மையில், புனித பிரதேசமாக்கல் திட்டத்தின் கை படர்ந்திருப்பது அட்டாளைச் சேனை பிரதேசத்திற்கு உட்பட்ட ஒலுவில், ஆலிஞ்சேனைக் குடியிருப்பிலாகும்.

இந்நிலையில் கடந்த டிச28ம் திகதி அங்குள்ள மக்களை உடனே முற்றாக வெளியேறி விடும்படி அக்கரைப்பற்று பொலிசார் பணித்துள்ளனர். இதற்கு காரணமாய் அமைந்தது அப்பிரதேசத்தில் புத்தர் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டமையே. இச் சம்பவத்தின் பிறகு பௌத்த மதகுருமார்கள் இனவாத கோஷமெழுப்பி முஸ்லிம்களை வெளியேறச் சொல்லி ஆர்ப்பாட்ட மொன்றைச் (ஜன -2) செய்துள்ளனர். அதனை திகாமடுல்ல பௌத்த இளைஞர் அமைப்பும், அம்பாறையும் மாவட்ட பௌத்த காங்கிரசும் இணைந்தே ஏற்பாடு செய்திருந்தன. எனினும், இது அவர்களுக்கு வெற்றியாக அமையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்டவிகாராதிபதிகளில் ஒருவரான கிருந்திவெல சோமரட்ன அஷ்ரஃப்புக்கு சேற்றை வாரியிறைக்கும் முயற்சி இதுஎன்று தெரிவித்திருக்கிறார்.

# ஒருகட்சிஆட்சி சர்வாதிகாரம்!

ஒரு கட்சி ஆட்சி நடக்கும் சர்வாதிகார நாடுகளில் உள்ளது போன்ற ஒரு கட்சி ஆதிக்க அரசியல் நிலை வட மேல் மாகாணத்தில் நிலவுகின்றது' என்று தெரிவிக்கின்றார் மோ்ஜ் இயக்கத்தின் பதில் தலைவரும் மோ்ஜ் இயக்கத்தின் அரசியல் வன்முறைகளுக்கெதிரான பெண்கள் கூட்டமைப்பின் தீவிர செயற்பாட்டாளருமான நிமால்கா பெர்ணாண்டோ தெரிவிக்கிறார்.

ஜனவரி 5ம் திகதியன்று புத்தளத்தில் நடை பெற்ற ஜனநாயக மக்கள் இயக்கத்தால் வட மேல் மாகாண தேர்தல் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்த நிமால்கா பெர்ணாண்டோ, தாம் அம் மாவட்டத்துனுள் பிரவேசிக்கும் போது

அது பூராவும் நீல நிறக் கொடிகளால் நிறைந்திருந்ததாகவும், ஒரு சில ஐ.தே.கட்சி சுவரொட்டிகள் மட்டுமே சிலாபத்தில் காணப்'பட்டதாகவும் , ஒரு சில பச்சை நிறக் கொடிகள் கட்சிக் காரியாலயத்தில் மட்டும் காணப்பட்டன என்றும்,

நீலக் கொடிகளுக்கு அடுத்ததாக திருமதி. டீ.எம் திசாநாயக்கவின் சுவரொட்டிகளே மேவிக் காணப்பட்டன என்றும் அவற்றிக்கி-டையே ஸ்ரீ.ல.சு.க.யின் ஏனைய வேட்பாளர்களின் சுவரொட்டி-கலே அதிகம் காணப்பட்டன. என்றும் தெரிவித்தார். அவர், சிலாபத்திலிருந்து புத்தளம் வரையும் அனுராதபுர வீதியிலுள்ள புத்தளத்துக்கு 10மைல் அப்பாலுள்ள கறுவலகஸ்வவவுக்குச் செல்லும் வழி 'வரை பச்சைக் கொடிகள் எதனையும் தான் காணவில்லை என்றார். அங்கே பச்சை நிறக் கொடிகளோ அன்றி எதிர்க்ககட்சி வேட்பாளர்களது சுவரொட்டிகள் எதுவுமோ காணப்படவில்லை. ல.ச.ச.க, இ.க.க.யின் சிவப்பு நிறக் கொடிகள் கூடக் காணப்படவில்லை. சிலாபத்துக்கும், புத்தளத்துக்கும் இடையில் ம.வி.மு (ஜே.வி.பி.) யின் சிறு கூட்டமொன்றிலேயே சிவப்பு நிறக் கொடியைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

"நான் ஒரு ஐ.தே.கட்சியை சோர்ந்தவரோ அன்றி ஜே.வி.பி.யினை சேர்ந்தவரோ அல்லவென்றாலும் ஜனநாயகத்தின் பொருட்டு அரசியல் வன்முறை பற்றிக் கேள்விப்பட்டபின்பு ஏனைய நிறங்களின் பிரசன்னத்தை ஆவது ஆகக் குறைந்தது காண விரும்புகிறேன்". என்றும் அவர் கருத்தரங்கில் தெரிவித்தார்.

புத்தளம் நகருக்கு வந்த ஒரு பொ.ஐ.முன்னணி வேட்பாளருக்குப் பிரச்சாரம் மேற்கொள்ளும் அவரது கணவரான திரு. டீ.எம். திசாநாயக்க அங்குள்ள எல்லா முச் சக்கர வண்டிகளிலும் நீல நிறக் கொடிகளையும் அவரது மனைவியின் சுவரொட்டிகளையும் தாங்கிச் செல்ல வேண்டும் என நிர்ப்பந்தித்ததாக நிமால்கா மேலும் குற்றஞ்சாடினார்.

"அவர்கள் மறுதலித்த போது, அவர் அவர்களை பலாத்காரமாக அச்சுறுத்தி சென்றுள்ளதாயும் அதைத் தொடர்ந்து அம் மாவட்டத்தின் முஸ்லீம் பா.உ.ஒருவர் அந் நிலமையைத் தணிப்பதற்காகத் தலையிட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு சில தினங்களுக்கு முன்பு குறிப்பிட்ட பொ.ஐ.மு. வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள், ஐ.தே.க. வேட்பாளரொருவரின் பிள்ளைகளை நிர்வாணமாக்கி, சேற்றை உண்ணுமாறு பலவந்தப்படுத்தியுள்ளனர். என்றும் இவ் வேட்பாளரின் பிரச்சார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆயுதங்களாவது உள்ளதாகவும் நிமல்கா பர்ணாந்து குற்றஞ்சாட்டியுள்ளார்.

இங்குள்ள ஒரு கட்சி ஆதிக்கத்தினையும் அதன் வன்முறை நடவடிக்கைகளையும் குறித்து நான் முழுமையாகவே அதிர்ச்சியடைந்துள்ளேன். இந் நடவபடிக்கைகள் எதனையும் கண்டிக்காது பெண் வேட்பாளர் ஒருவர் தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடர்கிறார். வெளிப்படையாகவே அவர் இவ் அரசியலை மன்னித்து விட்டாரா?

"ஐ.தே.க.யினரின் கைகளில் முன் இதேபோன்ற வன்முறைகளுக்கு ஸ்ரீ.ல.க.யினர் முகங்கொடுத்துள்ளனர்.. ஆனால் எமது சமூகத்தின் பிள்ளைகளை சேறு தின்ன வைத்துப் பொது இடமொன்றில் அவமானப்படுத்தியது எந்த மனித நாகரிகத்தின் கீழ் நியாமானது என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

## வெற்றி தீர்மானிக்கப்பட்டுவிட்டது!

வடமேல் மாகாண சபைத் தேர்தலின் பிரச்சார வேகத்தை முந்திக் கொண்டு அடிதடி, துப்பாக்கிச்சூடு, கிரனைட் வீச்சு நடவடிக்கைகளும் வேகமாக நடக்கின்றன.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐ.தே.கவினருக்கு புலத்த அச்சுறுத்தல்கள் ஆளுங்கட்சித் தரப்பினரால் விடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

தேர்தலில் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது பொ.ஐ.மு.

கள்ளவாக்குகளும், முன்கூட்டியே பெட்டிகளை நிரப்பி விடல் அல்லது வாக்களிப்பு முடிந்த பின்னர் நிரப்பிக் கொள்ளல் என்ற தேர்தல் வெற்றி இரகசியங்களை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு அரசாங்கத் தரப்பாருக்கே உள்ளதால், எதிர்க்கட்சியினர் மிகவும் அச்சத்துடனேயே தேர்தலில் இறங்கியுள்ளனர். அரசு தரப்பாளர்களின் அட்டகாசத்துக்கு அளவு கணக்கில்லாமல் போய் விட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது முதலாவது கூட்டத்தில் பேசிய பொ.ஐ.முவின் முதலமைச்சர் வேட்பாளர் எஸ்.பி. நாவின்ன 'வேட்புமனுத் தாக்கல் செய்த அன்றே எமது வெற்றி தீர்மானிக்கப்பட்டு விட்டது' என்று பேசியதாக பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருந்தது.

அதைப் படித்த போது விளங்காத அர்த்தம், நடந்து வரும் வன்முறைச் சம்பவங்களின் வேகத்தைப் பார்க்கும் போது தெளிவாகப் புரிகிறது.

ஆம், தேர்தல் வெற்றிக்கான சகல வேலைகளையும் செய்து விட முடியும் என்ற நம்பிக்கையில் தான் அவர் அப்படிப் பேசியுள்ளார் போலும்!

பொ.ஐ.மு அரசாங்கம் தேர்தல் வைக்கப் போவதாக அறிவித்த போதே, வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டே அறிவித்ததாகச் சொல்லியிருந்தால் இன்னும் உண்மைக்குச் சார்பான ஒரு பேச்சாக அது இருந்திருக்கும்.

கிழக்கில் தேர்தல் வைத்தால், பொ.ஐ.முவின் வெற்றியை உறுதி செய்யும் விதத்தில் எப்படிப் பெட்டிகளை நிரப்பலாம் என்ற ஆலோசனை ஒன்று முன்னர் ஆட்சியிலிருந்த தமிழ்க் கட்சி ஒன்றுடன் நடத்தப்பட்டதாகவும் அந்தக் கட்சி தமக்குக் குறைந்தது இரண்டு பாராளுமன்ற பதவிகளாவது தந்தால் தான் தமது ஆட்களைக் கொண்டு பெட்டி நிரப்பித் தர முடியும் என்று பேரம் பேசியதாகவும் நம்பகரமாக தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

ஆக, நாவின்னவின் பேச்சுக்கு புதுப்பொழிப்புரை தேவையா என்ன?

## அவனுக்குப் புரிந்த மொழி!

பாதையில் தடை முகாமிட்டு சோதனைக்காக நிற்கும் சிப்பாய்க்கு உள்ள அதிகாரம் என்ன?

உங்களை அவன் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் அவமானப்படுத்தலாம்.

ஏனென்றால், அவனது கையில் துப்பாக்கி இருக்கிறது. அவன் இராணுவ சீருடை தரித்திருக்கிறான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் ஒரு தமிழராக இருக்கிறீர்கள்.

நீங்கள் போகும் வாகனத்தைச் சோதிக்கவும், உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய ஆதாரங்களைக் கேட்கவும் அவனுக்கு சட்டரீதியான உரிமை இருக்கிறது. ஆனால், உங்களைத் திட்டவோ அவமானப்படுத்தவோ, மிரட்டவோ அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

அண்மையில் திருமலைக்குச் சென்றிருந்த போது ஒரு சம்பவம் நடந்தது. அடையாள அட்டையையும் பார்த்து வாகனத்தையும் பயணப் பொதியையும் பரிசோதித்த பின்னரும் அவனுக்கு என்மீதான சந்தேகம் போகவில்லை.

'பொலிஸ் பதிவு இருக்கா?' என்று கேட்டான் அவன்.

'இல்லை...'

'ஏன்?'

'நான் தங்கியிருக்கும் விடுதியில் எனது பெயர் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விபரங்களை பொலிசிடம் ஒப்படைப்பதற்காக என்று விடுதி அலுவலகத்திற்கு வழங்கினேன். அதனால், என்னிடம் பதிவு செய்த பதிவுத் துண்டு இல்லை: தவிரம் அதைக் கொண்டுவர வேண்டும் என்று எனக்கு யாரும் சொல்லவில்லை'

'உனக்கு அது தெரிந்திருக்க வேண்டும்.' என்றான் அவன் . அவன், கைகளை முகத்துக்கு நேரே நீட்டி பேசுவது போன்ற தொனியில் - அவன் பாவித்த சொல் 'தமுச'.

'நீர் பேசும் முறை எனக்குப் பிடிக்கவில்லை. நீர் உப்படிப் பேசுவதற்கு உமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? 'என்று கேட்டேன் நான் (உள்ளூரப் பயத்துடன்) 'எனக்கு அதே மொழியில் பேச முடியும்'.

'நீ கனக்கக் கதைக்கிறாய்..' என்று கறுவினான் அவன். ஆயினும், 'தமுச', 'ஒயா' வாக மாறியிருந்தது.

'திருமலைக்கு வரும் வழியில் ஐந்து தடை நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றிலாவது அப்படி ஒரு அறிவிப்பை எழுதி வையுங்கள். அதற்குப் பிறகு மனிதர்களுடன் எப்படிப் பேசுவதென்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் உங்கள் கடமையை நீங்கள் செய்ய முடியும். உங்களது கடமை சோதனை என்பதே ஒழிய மனிதர்களை மிரட்டுவதல்ல'.

-நான் சொன்ன போது அவனுக்குக் கோபம் அளவுக்கு மீறி விட்டது. வாகனத்தில் என்னுடன் வந்தவர்களும் இறங்கிக் குழுமிக் கொண்டனர். ஒரு பொலிஸ் அதிகாரி வந்து எங்களைப் போகச் சொன்னார்.

அதிகாரம் செய்வது தான் தமது கடமை என்று நினைப்பவர்களுக்கு அதல்ல தமது வேலை என்று அறிவுறுத்த ஒரிரு சந்தர்ப்பமாவது இவ்வாறான வேளைகளில் வாய்க்கக் கூடும். அதைச் செய்யும் சந்தர்ப்பத்தை விட்டு விடாதீர்கள்.

ஆனாலும் ஒரு ஆலோசனை.

உங்கள் பல் பத்திரம்: புலிப்பட்டம் வாங்கும் ஆபத்தும் இதில் இருக்கிறது. நிலைமையை உணர்ந்து செய்யுங்கள்.

பணிந்து போனால், தலைக்கு மேல் ஏறிவிடுவார்கள். அவர்களுக்கு விளங்கும் ஒரே மொழி அதிகாரம் தான். அதை நாமும் பிரயோகித்துப் பார்க்கலாம். ஒரு கணமாவது அவனுக்கு யார் பெரியவர் என்ற சந்தேகம் வரக்கூடும் அல்லவா?

ஆனால், தனியாகப் போகும் போது இது வேண்டாம்!

விஷப்பரீட்சை!

நன்றி - நூலகத்திட்டம்



# அகதி வாழ்க்கையில் திருமலை இக்பால் நகர மக்கள்:

## " அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தது வேதனைக்குரியது"

"எங்களுக்கு இந்த அகதிவாழ்க்கை போதும். தினம் தினம் வெதும்பிச் செத்துக்கொண்டிருக்க முடியாது. எங்களை எங்கள் கிராமத்தில் குடியேற அனுமதி தாருங்கள்" இப்படிக் குமுறுகிறார்கள் திருகோணமலை இக்பால் நகர் மக்கள்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கையையடுத்து 1995 ஒகஸ்ட் 8ல் தங்கள் அமைதியான வாழ்வைக் கைவிட்டு வந்தவர்கள் இன்று வரை தவிப்புடனே காலந்தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். 'நாங்கள் விடுதலைப்புலிகளின் போராட்டத்துக்கு எக்காலத்திலும் இடைஞ்சல் செய்தவர்கள் அல்லர். எங்களால் பங்களிப்புக்கள் எதனையும் செய்யமுடியாவிட்டாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் என்ற வகையில் அப்போராட்டத்தின் நியாயங்களை மனதார ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள். இப்படியிருக்க எங்களை அவர்கள் சந்தேகக்கண் கொண்டு பார்த்தது வேதனைக்குரியது என்று பொருமுகிறார் தன் பெயரைச் சொல்ல விரும்பாத ஒருவர்.

திருகோணமலை நிலாவெளி வீதியில் ஏழாவது மைல் கல்லில் அமைந்துள்ளது இக்பால் நகர். இருபுறமும் தமிழ் மக்களுடன் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் சுகதுக்கங்களில் உரிமையோடு பங்கு கொண்டு வாழ்ந்தவர்கள் இக்பால் நகரைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள். நாட்டு நிலவரம் இவர்களைப் பாதித்ததால் நகரை அண்மித்த 'லவ்லேன்' என்ற பகுதிக்கு அகதிகளாக வந்து சேர்ந்து மூன்றரை ஆண்டுகள் கழிந்து விட்டன. அதேவீதியில் ஐந்து மைல் நகர்ப்புறம் நோக்கி நகர்ந்து அகதி என்ற பெயருடன் காலந்தள்ளுவது இவர்கள் மனதை வாட்டுகிற விடயம்.

லவ்லேன் முகாமில் 263 குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு சிலர் பக்கத்திலுள்ள ஜமாலியா நகரை அண்டி உறவினர்கள்



-விவேகி-

வீடுகளில் ஒட்டிக் கொண்டாலும் பெருவாரியானோர் முகாம் கொட்டில்களிலேயே வாழ்கின்றனர். நீளமாகத் தொடராக அமைக்கப்பட்ட அக்கொட்டில்களுக்கு பௌர்ணமி நாட்களில் விளக்கே தேவையில்லை. அந்த அளவுக்கு வானம் பார்த்துப் போய்க் கிடக்கிறது இந்த முகாம். இவற்றில் சுமார் ஆயிரத்து இருநூறு ஜீவன்கள் காலந்தள்ளுகின்றனர். இந்த முகாம் வாழ்க்கையில் சுமார் நாற்பத்தைந்து புதிய உயிர்களும் தோன்றியிருக்கின்றன. இருபத்தைந்து ஜோடிகள் புதிய வாழ்க்கையும் தொடக்கியிருக்கிறார்கள்.

இக்பால் நகர் அகதிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பு இவர்கள் நலனுக்காகக் குரல்கொடுத்து வருகிறது. அதன் தலைவராக எம்.கச்சி முகம்மது செயலாளராக, என்.பி.அப்துல்லா பொருளாளராக, ஏ.செ.அப்துல் ஹலாம் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். இவ்வமைப்பின் ஆலோசகர் எஸ். அப்துல் சமது முகாம் நிலைபற்றி விரல்நுனியில் வைத்துக்கொண்டு விபரங்களைச் சொன்னார், "எப்படி உங்களால் உடனடியாகச் சொல்லமுடிகிறது?" என்று கேட்ட போது சிரித்துக் கொண்டே "அரச அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும் அடிக்கடி ஒப்புவித்ததால் மனப்பாடம் ஆகிவிட்டது" என்றார்.

அப்துல் சமதுவின் தகவலின்படி இந்த 263 குடும்பங்களில் 42 குடும்பங்கள் அரச திணைக்களங்களிலோ, கூட்டுத்தாபனங்களிலோ பணிபுரியும் குடும்பத்தலைவர்களைக் கொண்டுள்ளன. ஏனையவை விறகு வெட்டுதல், விவசாயம், மீன்பிடி என்பவற்றை நம்பி வாழ்ந்த குடும்பங்கள். அகதி வாழ்க்கை ஆரம்பத்துடன் இத்தொழில்களும் கைவிட்டுப் போய்விட்டன. ஊருக்குள் சென்று கூலிவேலை செய்தே தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். சொந்தத் தொழிலால் பிழைத்துக்கொண்டவர்களுக்கு கூலி வேலை செய்வது மாத்திரமல்ல, அவ்வேலைகூட கிடைப்பது பெரும் பிரயத்தனத்தின் பின்னரே என்பதால் வாழ்க்கையில் ஒருவித விரக்தி நிலையே காணப்படுகிறது.

இவர்கள் அகதிகளாகி ஒரு சில மாதங்களில் வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பும் முயற்சியில் அரசாங்க அதிபர் நேரடியாகவே ஈடுபட்டிருக்கிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவே உடனடியாக உலர் உணவு நிவாரணத்தை வழங்க விடாமல் தடைவிதித்திருக்கிறார். எனினும், பலத்த போராட்டத்தின் மத்தியில் ஐந்து மாதகாலமாக நிறுத்தப்பட்டிருந்த நிவாரண உதவிகளை இவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

11.03.98அன்று இராணுவ அதிகாரி ஒருவருடன் முகாமுக்கு விஜயம் செய்த குச்சவெளிப் பிரதேசச் செயலாளர் உடனடியாக இக்பால் நகருக்கு அனைவரும் திரும்பிவிட வேண்டும் என்றும், இல்லையேல் காணிகளில் வேறு யாரையாவது குடியமர்த்துவோம் என்றும் எச்சரித்துள்ளனர். இராணுவ அதிகாரியோ 'உங்களை ஒரே நாளில் லொறிகளில் அள்ளிக்கொண்டு போய் இக்பால் நகரில் கொட்டிவிட முடியும் என்று வேறு மிரட்டியிருக்கிறார்.

வீடு, பாடசாலை, நீர், மின்சாரம், பாதை ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து தந்தால் நாங்கள் இப்பொழுது கூடப்போகத் தயார்" என்று மக்கள் ஒருமித்த குரலில் கூறவே அவர்கள் திரும்பிப் போய் விட்டார்கள். பலன் எட்டு மாதங்களாக உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டது.

தமீம்பிபி என்ற குடும்பப்பெண் ஒருவரிடம் அகதிமுகாம் நிலை பற்றிக் கேட்டபோது "எங்கள்

-20

# கிண்ணியா - வான்எல:

## மான் வேட்டையும் மக்கள் வேட்டையும் !

கிண்ணியா பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 'வான்எல' என்ற முஸ்லிம் கிராமத்தில் 09.01.1999 அன்று வான்எல பொலிசாருக்கும், அக்கிராம முஸ்லிம்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டு நான்கு முஸ்லிம்கள் காயமுற்றனர்.

இதற்குக் காரணமாக அமைந்தது பின்வரும் சம்பவமே:

08.01.1999 வெள்ளிக்கிழமை மாலை பொலிசார் காட்டுமான் வேட்டையிலீடுபட்டிருந்த போது (மான் வேட்டையாடுவது இலங்கை அரசால் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பது வேறு விடயம்,) அவர்களின் சூட்டுக்கு காயமுற்ற மான் ஒன்று முஸ்லிம் கிராமத்திற்குள் நுழைந்து மரணத்தருவாயில் இருந்தது. அதனை அக்கிராம பள்ளிவாசல் மௌலவி சிலரின் துணையுடன் அறுத்தார்.

இதனைக் கேள்வியுற்ற பொலிசார் மௌலவி உட்பட ஆறுபேரைக் கைதுசெய்து தாக்கி தடுப்புக்காவலில் வைத்தனர். இவர்கள் நோன்பாளிகள் என்பதால் பள்ளி ஜமா அத்தினர் நோன்பு திறக்க பொலிஸ் நிலையத்திற்கு உணவு கொண்டு சென்ற போது பிரதான வாயிலை மூடி உணவையும் ஏற்க மறுத்துவிட்டனர். அவர்கள் நோன்பு திறக்க நீர், உணவு கேட்ட போது பொலிசார் பன்றி இறைச்சியைச் சாப்பிடுங்கள் என்று இம்சைக்குள்ளாக்கியுள்ளனர்.

இரவு 7.00 மணியளவில் பொலிசார் பள்ளிவாசல் கதீப் மௌலவி லாபிர் அவர்களை மாத்திரம் விடுதலை செய்தனர். இவருடன் கைதுசெய்யப்பட்ட ஏனைய ஐவர் (1) காஸிம் கடாபி, (2) ஸலாம் மனாப், (3) அப்துல் ஸமது நவ்பர், (4) முஹம்மது உவைஸ், (5) இஸ்மாயில் ஸபருல்லா ஆகியோர் தொடர்ந்தும் காவலிலேயே வைக்கப்பட்டனர்

மறுநாள் (09.1.99) பொலிசாரின் இந்த அட்டகாசத்துக்கெதிராகவும், அநியாயமாகக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவும் ஊர்ப்பொதுமக்கள் அனைவரும் பள்ளிவாசலில் ஒன்று திரண்டு சுலோகங்களை ஏந்தியவண்ணம் ஊர்வலம் செல்ல ஆயத்தமாக இருக்கும் போது எஞ்சிய ஐவரையும் விடுதலை செய்து விட்டு திரண்டிருந்த பொதுமக்களின் மீது தங்கள் காட்டுமிராண்டித்தனத்தைப் பிரயோகித்தனர். இதன் போது பெண்களையும், சிறுவர்களையும் பொலிசார் இழுத்தெறிந்ததோடு, கண்ணீர்ப்புகை, கைக்குண்டுப்பிரயோகம், தடியடி, நடாத்தியதோடு எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்தனர். மக்களை வெறித்தனமாகத் தாக்கினர். இந்நிகழ்வில் அப்துல் ஹஸன் மௌஸூக் (24), அப்துல் ஸாலி அபூபக்கர் (28) ஆகியோர் காயமடைந்தனர்..

இதே நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் மறைவாக இருந்த வீடொன்றினுள் சில பொலிசார் நுழைந்து அங்கிருந்த முஹம்மது ஜாபிர் (18) என்ற மாணவனை வெறித்தனமாகத் தாக்கியுள்ளனர். இதனைக்கேள்வியுற்ற அவரது சகோதரன் முஹம்மது சித்தீக் (40) என்பவர் அவரைக் காப்பாற்ற அவ்விடத்தை நோக்கிச் சென்ற போது அவரையும் அங்கிருந்த பொலிசார் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் ஈடுபட்ட 8 பொலிசார்களில் மூவரை இனங்காட்ட முடியும் எனத் தாக்குதலுக்கு இலக்கான முஹம்மது சித்தீக் என்பவர் தெரிவித்து அம்மூவரின் பெயர்களையும் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட பெயர்கள் வருமாறு: 1. குணதிலக (ஓ.ஐ.சி), 2. வெலிகமன, 3. ஜெயசிரி (சார்ஜன்ட்)

இச்சம்பவத்தின் பின் காயமடைந்த நால்வரும் பிற்பகல் 12 மணியளவில் கிண்ணியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களிடம் வாய்மூல அறிக்கையைப் பெறுவதற்கு சீனன்குடா பொலிசார் அதற்கும் மறுநாளான 10ம் திகதி 12 மணியளவிலேயே வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு சம்பவங்களும் நடைபெற்றும் இம்மாவட்ட பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதிகள் எவரும் தம்மை இது வரை கவனிக்கவில்லை என்றும் அக்கிராம மக்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தனர்.

ஊர் மக்கள் தொடர்ந்தும் பொலிசார் தாக்குவார்கள் என்ற அச்சத்திலேயே வாழ்வதனால் தீர்வுக்காக பின்வரும் கோரிக்கைகளைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் , அரசியல்வாதிகளிடம் முன்வைக்கின்றனர்.

1. தற்போதுள்ள பொலிசார், அதிகாரிகள் உட்பட அனைவரும் வேறு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

2. பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள பொலிஸ் காவலரண பள்ளிவாசலில் இருந்து ஒரு கி.மீற்றருக்கப்பால் கொண்டு செல்ல வேண்டும்.

3. பொலிசார் பொது மக்கள்மீது இதுவரை காலமும் செய்து வந்த அடாவடித்தனமான செயல்களை நிறுத்த வேண்டும்.

4. மேற்கூறிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் அங்கு வாழும் 650 முஸ்லிம் குடும்பங்களும்,கிண்ணியாவுக்கு அகதிகளாக இடம்பெயரவும் தீர்மானித்துள்ளனர்.

தகவல் எம்.எஸ்.

- கிண்ணியாவிலிருந்து


எம்.எம்.என்.

நன்றி - நூலகத்திட்டம்



# அசமத்துவத்தை மேலும் ஆழப்படுத்தும் இலங்கை-இந்திய சு-தந்திர வர்த்தக ஒப்பந்தம்!

"பலமான நாட்டுக்கும் பலவீனமான நாட்டுக்கும் இடையில் சமத்துவமான ஒப்பந்தம் ஏற்பட ஒத்துப்போகும் அளவுக்கு இந்தியா ஒன்றும் இன்னமும் முக்தி பெற்றுவிடவில்லை என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம் மட்டுமே"



அன்று

"இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தால் எந்தவித பாதகமும் இலங்கைக்கு ஏற்படப்படப் போவதில்லை. அதையிட்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவ் ஒப்பந்தம் இந்தியாவின் நாலாயிரம் கோடி ரூபா பெறுமதியான சந்தைக்குள் நுழையும் வாய்ப்பினை இலங்கைக்கு பெற்றுத் தருகிறது."

இவ்வாறு இந்தியத் தூதுவர் சிவசங்கர் மேனன் பேசியதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரால் கடந்த மாதம் 28ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் உண்மையில் ஒரு சுதந்திர வர்த்தக சூழல் உருவாவதற்கான வாய்ப்பைத் தருமா? என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்தியாவுடனான அரசியல் பொருளாதார உறவுகளைப் பொறுத்த வரையில் கடந்த காலம் முழுவதிலும் இலங்கையின் அனுபவம் இத்தகைய ஓர் அச்சத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படைகளைக் கொண்டதாகவே இருந்து வந்திருக்கிறது. இதற்கு ஒரு சிறப்பான அண்மைக்கால உதாரணம் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக என்று கூறி உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தம் இலங்கை அரசாங்கத்தை அதன் இனப்பிரச்சினை நெருக்கடியில் இருந்து விடுவிப்பதற்கு ஒரு அயல் நாடு என்ற முறையில் உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்படுவதற்கு பதில் தனது பூகோள அரசியல் நோக்கங்களுக்கு இசைவாக இலங்கை இனப்பிரச்சினையை பயன்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டது என்று பரவாலாக விமர்சிக்கப்பட்டது தெரிந்ததே.

வர்த்தக உறவினைப் பொறுத்தளவிலும் கூட இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையிலான உறவு இந்தியப் பொருட்களை இலங்கை வாங்குவதற்கு ஏற்ற விதத்திலேயே அமைந்திருந்தன. காலத்துக்குக் காலம் இரு அரசாங்கங்களுக்கிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளும் உடன்பாடுகளும் இலங்கைக்கு இந்தியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதற்குத் தான் பெருமளவிற்கு உதவினவேயொழிய இலங்கைப் பொருட்கள் இந்தியாவை நோக்கிப் போவதற்கு உதவவில்லை. கடந்த வருடம் நடந்த ஏற்றுமதி இறக்குமதி பரிவர்த்தனையின் போது இலங்கை 560 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்திருந்தது. இலங்கையில் இருந்து இந்தியா இறக்குமதி செய்த பொருட்களின் பெறுமதி 42மில்லியன் மட்டுமே. அதாவது இலங்கையின் இறக்குமதி பெறுமதியில் பத்து வீதத்திற்கும் குறைவான அளவு பெறுமதியுள்ள பொருட்களையே இலங்கையில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

சார்க் நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் பற்றி நிறையவே பேசப்பட்டாலும் கூட இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவு பெருமளவிற்கு ஒருவழிப்பாதையாகவே அதாவது இந்தியாவை நோக்கிய ஒரு வழிப்பாதையாகவே இருந்து வந்தது.

இப்போது இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்டுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க உடன்படிக்கை என்று கூறப்படும் இந்தச் சுதந்திர வர்த்தக உடன் படிக்கை உருவாக்கப்படல் வேண்டும் என்று இலங்கை தரப்பில் கூறப்பட்டு வந்ததற்கான ஒரு காரணம் இந்த ஒரு வழிப்பாதை நிலைமையே. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்தில் அசமத்துவ நிலை நிலவுவதை கடந்த கால புள்ளி விபரங்களோடு பல பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். ஆனால் இலங்கை அரசாங்கம் தேர்தல் காலத்தில் குறிப்பிட்ட வெளிப்படைத் தன்மையைத் தூக்கி எறிந்து விட்டு ஒப்பந்தத்தில் உள்ளடங்க வேண்டிய விடங்கள் தொடர்பாக எந்த கலந்துரையாடல்களையும் செய்யாமல் இந்திய அரசுடன் இரகசியமாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு வந்துள்ளது. இவ்வாறு தான் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் கூட சம்பந்தப்பட்ட யாருடனும் கலந்தாலோசிக்கப்படாமல் கைச்சாத்தானது என்பதும் அது பின்னர் பயனற்றுப்போனது என்பதும் தெரிந்ததே.

இன்று கைச்சாத்தாகியுள்ள இந்த ஒப்பந்தம் இலங்கை இந்திய வர்த்தகப் பரிவர்த்தனையில் சமத்துவத்தைக் கொண்டு வருமா குறைந்த பட்சம் இருக்கும் அசமத்துவத்தையாவது குறைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது.

பல சரத்துக்கள் இலங்கைக்கு பாதகமானவையாகவும் இந்தியாவிற்கு சாதகமானவையாகவும் அமைந்துள்ளன என்று இலங்கையின் பல பொருளாதார நிபுணர்களும் வர்த்தக சமூகத்தினரும் சுட்டிக் காட்டுகின்றனர். இலங்கை இந்தியாவின் சந்தைக்குள் நுழைய முடியும் என்று இந்திய தரப்பில் கூறப்பட்ட போதும் இலங்கையின் தொழிற்துறை வளர்ச்சி இந்தியாவின் தொழிற்துறை வளர்ச்சியுடன் கொஞ்சமும் ஒப்பிடப்படக் கூடிய நிலையில் இன்று இல்லை. இராட்சத இந்திய நிறுவனங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு இலங்கைப் பொருட்கள் இந்தியச் சந்தையில் இடம் பிடிப்பது என்பது மிகவும் கடினம். தவிரவும் ஏற்கெனவே பல நாட்டுப் பொருட்களால் குவிந்துள்ள இலங்கைச் சந்தையில் மூச்சுத் திணறிக்கொண்டு இருக்கும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் சந்தை வாய்ப்பு இந்தியப் பொருட்களின் வருகையால் மேலும் பலவீனம் அடையவே செய்யும்.



இன்று

இலங்கையில் பெறுமதி அதிகரிப்புச் செய்யப்படும் (VALUE ADDITION) முறையிலான உற்பத்திப் பொருட்கள் குறிப்பாக தைத்த ஆடைகள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் படி அதில் உள்ள ஒரு சரத்து 25 வீத பெறுமதி அதிகரிப்பிற்கு அதிகமாகப் பெறுமதி அதிகரிப்பு செய்ப்பட்டால் மட்டுமே பொருட்கள் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட முடியும் என்று தெரிவிக்கின்றது. இது தைத்த ஆடைகளை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பை முற்றாக இல்லாமல் ஆக்கி விடுகிறது. இதைத் தவிர வெளிநாட்டில் இருந்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்து உற்பத்தி செய்யும் பொருட்களான பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவைகளின் ஏற்றுமதியும் ஒப்பந்தத்தின் இன்னொரு சரத்தின் மூலம் தடைசெய்யப்படுகிறது. அதாவது உற்பத்திப் பொருட்களுக்கான மூலப் பொருட்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு நாடுகளும் அல்லாத பட்சத்தில் அவ்வுற்பத்தி பொருட்களின் பெறுமதியில் 65 வீதத்தை விட அதிகமாக மூலப்பொருட்களின் பெறுமதி இருக்கக் கூடாது என்று அந்த விதி கூறுகின்றது. இது உண்மையில் இந்தியாவிற்கே பெருமளவு நன்மையைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்திக்கான மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடாக இந்தியா இருப்பதால் தவிர்க்க முடியாமல் ஏற்றுமதி செய்வதற்கான பொருட்களை தயாரிப்பதற்காக அங்கிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்தியா தனது விலையை நிர்ணயிப்பதிலும் விற்பனையைப் பெருக்குவதிலும் பெருமளவு ஒரு தலைப்பட்ச வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும். வேறு நாடுகளில் இருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத ஒரு நிலையை அது இலங்கைக்கு உருவாக்குதன் மூலம் இலங்கையை தெரிவுகள் அற்ற ஒரு நிலைக்குத் தள்ளி விடும். ஆக இது இந்தியாவிற்கு உதவும் விதத்தில் உருவாக்கபட்ட ஒரு விதியாக இருக்கிறதே அன்றி இலங்கைக்கு இதனால் எத்தகைய நன்மைகளும் இல்லை. மாறாக நெருக்கடியையே இது உருவாக்கும்.

இதுமட்டுமல்லாமல் ஒப்பந்தம் பரஸ்பர ஏற்றுமதி இறக்குமதி உறவைப் பேண வேண்டும் என்றும், ஏதாவது உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதை தேவையில்லை என ஒரு நாடு கருதும் பட்சத்தில் அதைத் தடை செய்ய தமது நாட்டில் சட்டம் கொண்டுவர முடியும் என்றும் கூறுவதன் மூலம் இலங்கையை முழுக்க முழுக்க இந்தியச் சந்தையில் மட்டும் பொருட்களை வாங்கும் ஒரு நாடாக மாற்ற இவ்வொப்பந்தம் முனைந்துள்ளது.

வர்ர்தக அசமத்துவத்தை நீக்க 'சுதந்திர' வாத்தக உடன்படிக்கை செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட போதும், இலங்கை கட்டுப்பாடுகள் நிறைந்த இந்திய வர்த்தகத்திற்கு வாய்ப்பான ஒரு ஒப்பந்தத்துக்கு ஒத்துப் போயுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

இலங்கையை, சுய பொருளாதார உற்பத்தியில் அக்கறையற்று வெறும் இறக்குமதியை நம்பிவாழும் ஒரு நாடாக சீரழிய வைத்துக் கொண்டிருக்கும் அதன் திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற பொருத்தமற்ற பொருளாதாரக் கோட்பாடு, இந்தியாவின் இராட்சத நிறுவனங்களால் போதுமானளவுக்கு சுரண்டப்படுவதற்கு இவ்வொப்பந்தம் வசதியான ஒரு களத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

சுருக்கமாகச் சொல்வதானால் ஒப்பந்தம் பெயரளவில் இரு நாடுகளதும் சுதந்திர வர்த்தகம் பற்றிப் பேசினாலும், அது இந்தியாவின் சுதந்திரம் பற்றியே பேசுகிறது என்பதுதான் உண்மை.

பலமான நாட்டுக்கும் பலவீனமான நாட்டுக்கும் இடையில் சமத்துவமான ஒப்பந்தம் ஏற்பட ஒத்துப்போகும் அளவுக்கு இந்தியா ஒன்றும் இன்னமும் முக்தி பெற்றுவிடவில்லை என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம் மட்டுமே!

□

-அரவு

நன்றி - நூலகத்திட்டம்



# வடமேல் மாகாண சபைத் தேர்தல்:
## மீறிய வாக்குறுதிகளுடன் பொ.ஐ.மு! மீண்டும் சந்தர்ப்பமளிக்கும்படி ஐ.தே.க!

-ஜென்னி

பிறந்துள்ள இவ்வருடம் தேர்தல் வருடம். மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றப் பொதுத் தேர்தல் போன்றவற்றிற்கு சகல கட்சிகளும் முகம் கொடுக்க வேண்டிய வருடம் இது.

எதிர்வரும் ஜனவரி 25ஆம் திகதி இடம்பெறவிருக்கின்ற வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் இன்று பதட்டம் நிறைந்ததாகவும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், எதிர்பார்ப்புகள் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இத் தேர்தலின் பிரதிபலன் எதிர்வரும் தேர்தல்களுக்கான எதிர்வுகூறலாகவும், இருக்குமென அரசியல் விமர்சகர்கள் மாத்திரமல்ல பிரதான கட்சிகளும் கூட எதிர்பார்க்கின்றன. எனவே முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி இத்தேர்தலில் ஜெயிப்பது என்று களத்தில் குதித்துள்ளன. எனவே இத்தேர்தலில் முன்னெப்போதுமில்லாதவாறு குறுகிய காலத்தில் பல தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் வடமேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளன. பதிவாகி வருகின்றன. பெரும்பாலான வன்முறைகளில் ஆளும் பொ.ஐ.மு கட்சியினரே ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதிப் பதவியும், அரசாங்கமும் பொது ஜன ஐக்கிய முன்னணியிடம் இருக்கின்ற நிலையில் ஒட்டு மொத்தமாக அனைத்து பலத்தையும் ஒன்று திரட்டி இத்தேர்தலில் வெற்றிபெற களத்தில் குதித்துள்ளது. என்ன விலை கொடுத்தும் இதில் ஜெயித்தே தீருவோம் என தேர்தலில் குதித்துள்ள பொ.ஐ.மு. பாதாள உலகத்தைச் சேர்ந்த சண்டியர்களையும், அரச படையினரையும் தமது கட்சியின் முன்னணி அரசியற் தலைவர்களையும் ஈடுபடுத்தியுள்ளது. பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போரை அதிலிருந்து விலக்கி இத்தேர்தலில் வேட்பாளர்களாக இறக்கியுள்ளது.

ஐ.தே.க.வும் பொல்லுக்கு பொல்லு என்று தனது குண்டர் படைகளையும், அரசியற் தலைவர்களையும், முன்னாள் பொலிஸ், இராணுவத்தினரையும் இறக்கியுள்ளது.

### நிர்ணயம் மிக்க தேர்தல்

குருநாகலில் 35உம், புத்தளத்தில் 15உம் போனசாக இரண்டு பேருமாக மொத்தம் 52 பேரை தெரிவு செய்வதற்கான வட மேல் மாகாண சபைக்கான தேர்தலில் மொத்தம் ஏழு குழுக்கள் போட்டியிடுகின்றன. 13,59,295 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1160 வாக்களிப்பு நிலையங்களில் அன்றைய தினம் வாக்களிப்பு இடம்பெறும். 12,500 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களாக பாடசாலைகள் பயன்படுத்தவிருப்பதால் அன்றைய தினம் வட மேல் மாகாணத்திலுள்ள 1300 பாடசாலைகள் மூடப்படுகின்றன. தபால் மூலமான வாக்களிப்பு கடந்த 8ஆம் திகதி முடிந்து விட்டது. இத்தேர்தலுக்காக பாதுகாப்புக்கென ஏறத்தாழ 3000-4000 வரையிலான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்த வேண்டிவரும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

### ஆளுங்கட்சியே அதிக வன்முறைகளில்

நிர்ணயம் மிக்கதான இத் தேர்தலில் ஆளுங்கட்சியான பொ.ஐ.மு. தனது பாதாள உலக குண்டர்களை வேறு பிரதேசங்களில் இருந்து களத்தில் இறக்கியுள்ளது.

கடந்த காலங்களில் ஜே.வி.பி. மீதான அழித்தொழிப்பின் போது ஐ.தே.க. கையாண்ட இலக்கத்தகடு இல்லாத வாகனங்கள் பாவிப்பை பொ.ஐ.மு.வின் கண்டனமாகவும், தேர்தல் பிரச்சாரமாகவும் பாவிக்கப்பட்டது. இன்று இலக்கத்தகடு இல்லாத வாகனங்களைப் பெருமளவில் ஆளுங்கட்சி பாவித்து வருகிறது. ஆரம்பத்தில் இச் செய்தி அவ்வளவு பெரிதாக உலுப்பவில்லை. ஆனால் ராவய உள்ளிட்ட இன்னும் சில சிங்கள பத்திரிகைகள் புகைப்படங்களுடன் பிரசுரித்ததும் அரசாங்கத்துக்கு எரிச்சலைக் கிளப்பியுள்ளன. மேலும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகியவற்றின் குற்றச்சாட்டின்படி பொ.ஐ.மு. தமது கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 215 அரசாங்க வாகனங்கள் பாவிக்கப்பட்டு வருகின்றன. இத்தேர்தலில் பொ.ஐ.மு.வுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதி நேரடியாகவே தேர்தல் பிரச்சார கூட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டு வருகிறார். அவருடன் பிரசாரத்துக்கு வராத காரணத்திற்காக வடமேல் மாகாண சபையின் ஆளுனர் ஹெக்டெர் அருவ்வாவில பதவி விலக கோரப்பட்டு உடனடியாக பதவி விலத்தப்பட்டுள்ளார். "அம்மையார் உத்தியோகபூர்வ விஜயம் போவதாயிருந்தால் நான் வருவதில் ஒன்றும் இல்லை. ஆனால் இப்படி தேர்தல் பிரச்சார வேலைக்குபோகத் தேவையில்லையல்லவா" என்று கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதிச் செயலாளர் பாலபட்டபந்திக்கூடாக ஆளுனர் சந்திரிகாவுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்தே அவர் பதவி விலக கோரப்பட்டுள்ளார்.

பிரதான கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களாக பொஐ.முவின் எஸ்பீ.நாவின்ன, ஐ.தே.க.வின் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் நிறுத்தப்பட்டுள்ளனர். ஜே.வி.பி.யின் பிரதான வேட்பாளராக பிமல் ரத்நாயக்க, மற்றும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் குழுத் தலைவராக எம்.எல்.கலீல் ரஹ்மான் ஆகியோர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மஹகும்புக்கடவல பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நடந்த பொ.ஐ.மு கூட்டத்தின் போது அங்கிருந்த இலக்கத்தகடு மறைக்கப்பட்ட வாகனமும். இலக்கங்கள் அகற்றப்பட்ட டலஸ் அலஹப்பெருமவின் எம்.பியின் டபள் கெப் வாகனமும்.






அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஆனமடுவுக்கு வந்திருந்த டபள் கெப் வாகனத்தில் இறுதி இலக்கம் அகற்றப்பட்டிருக்கிறது.

### நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் மீண்டும்!

எதிர்வரும் 22ஆம் திகதியன்று இரவு 12.00 மணிக்கு சகல தேர்தல் பிரச்சாரங்களும் நிறுத்தப்பட வேண்டும். ஆளுங்கட்சியான பொ.ஐ.மு. சகல அமைச்சுகளையும், திணைக்களையும் பயன்படுத்தி வடமேல் மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகளை செய்து காட்ட முனைகிறது. குறிப்பாக மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 4ஆம் திகதி தொடங்கஸ்லந்தை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றிய போது குழுமியிருந்த மக்களிலிருந்து "எங்களுக்கு மின்சாரம் இல்லை..." என்று கத்தியபோது "எங்கள் அரசாங்கம் மின்சாரம் வழங்கவே இல்லையா..?" என ஜனாதிபதி வினவ "சில பகுதிகளுக்கு கிடைத்தது ஆனாலும் எங்களுக்கு இல்லை..." என்று ஒருவர் கூற "தொடங்கஸ்லந்தையிலிருந்து இருவரைத் தெரிவு செய்யுங்கள் உங்களுக்கு கிடைக்கும்" என்று ஜனாதிபதியும் கூறினார்.

இப்படி மீண்டும் நம்பிக்கைகள், வாக்குறுதிகள், வன்முறைகள், என இம்முறையும் மக்கள் மத்தியில் வாக்கு வேட்டையாடலை ஆரம்பித்துள்ளனர்.

உண்மையைச் சொல்லப்போனால் அரசாங்கத்துக்கு இந்தத் தேர்தலை வைப்பதில் கொஞ்சமும் விருப்பமிருக்கவில்லை என்றே கூறலாம். அரசாங்கம் நினைத்தபடி சாதகமான சூழல் இல்லையென்பதை ஏற்கெனவே கணித்திருந்தது. எனவே தான், தேர்தலை ஒத்தி போட்டுக் கொண்டே போனது. ஆனால் நாளுக்கு நாள் இவ் ஒத்திவைப்புக்கெதிராக அரசாங்கத்தை எதிர்த்து தொடரப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதானது அரசாங்கத்துக்கு தேர்தலை வைப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. ஆனால் இன்னமும் இத்தேர்தல் ஒத்தி வைப்புக்கு கூறிவருகின்ற காரணம், நாட்டில் தேர்தல் வைப்பதற்கான பாதுகாப்பான சூழல் இல்லையென்பதும் தொடர்ச்சியான தொலைதொடர்பு கோபுரங்கள், மின்சார மாற்றிகள் தாக்குதல் என்பவையும் தான். ஆனால் அரசாங்கம் ஏனைய மாகாணங்களுக்கான தேர்தல் ஒத்திவைப்பை நீடித்துவரும் நிலையில் வடமேல் மாகாண சபைத் தேர்தலை மட்டும் நடத்துவது முன் கூறிய காரணங்களை கேள்வி எழுப்ப வைத்துள்ளது. வடமேல் மாகாண சபை யுத்தப் பிரதேசங்களை அண்டிய எல்லைகளைக் கொண்டது. புலிகளின் நடமாட்டங்கள், புலிகளின் சிறு முகாம்கள் அடங்கிய இப் பிரதேசங்களில் தேர்தல் வைக்க முடியுமென்றால் ஏன் ஏனைய பிரதேசங்களில் வைக்க முடியாது என்ற கேள்வி எழாமலில்லை.

### சக வேட்பாளர்களுக்கும் வேட்டு!

இத் தேர்தலைப் பொறுத்தவரை இன்று முக்கியமாகப் பேசப்படும் விடயம் அங்கு அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களே. ஐ.தே.க.வுக்கு எதிராக பொ.ஐ.மு.வினால் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. வாகனங்கள், கட்சிக் காரியாலயங்கள், வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், என மாறி மாறி தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இது வரை பதிவாகியிருக்கிற 200க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் பெரும்பாலானவை பொ.ஐ.மு.வாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்ததாக ஐ.தே.க. உள்ளது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் தமது கட்சியிலேயே போட்டியிடும் வேட்பாளர்களையும் சக வேட்பாளர்களே தாக்கியுள்ளனர். விருப்பு வாக்குகளை அதிகம் பெறும் நோக்கில் சக வேட்பாளரை போஸ்டர் அடிக்க விடாதது, காரியாலயம் நடத்த விடாதது, கொடிகள் போட விடாதது என்பவை எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல தனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் தான்.

ஒரே ஒரு சம்பவத்தில் ஜே.வி.பி. ஈடுபட்டதாக பதிவாகியுள்ளது. அதே வேளை ஜே.வி.பி. வேட்பாளர்களின் மீது ஐ.தே.க. மற்றும் ஆளும் பொ.ஐ.மு ஆகியவை மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. ஜே.வி.பி.யினர். எதிர்த்துத் தாக்கவோ பழிவாங்கல்களிலோ ஈடுபடாமல் அத்தனை சம்பவங்களையும் அம்பலப்படுத்தி தமது தேர்தல் பிரச்சாரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். ஜே.வி.பி. மீதான தாக்குதல் சம்பவங்களை எதிர்த்து கடந்த வாரம் ஆனமடுவ பிரதேசத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக பத்திரிகைகள் தகவல்கள் தெரிவித்தன. இவ் ஆர்ப்பாட்டம் பொ.ஐ.மு.வின் முக்கிய பிரமுகரின் வீட்டின் அருகில் நடத்தப்பட்டது, ஆர்ப்பாட்டத்தை குழப்ப பொ.ஐ.மு.வினர் குழப்பலாம், தாக்கலாம் என்று பல பத்திரிகை நிருபர்கள் அங்கு காத்திருந்தனர். ஆனால் பல வாகனங்களில் கத்திக் கொண்டே வந்த பொ.ஐ.மு.வினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கையையும் நிலைமைகளையும் பார்த்து அமைதியாக திரும்பி விட்டனர். இது குறித்து ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவித்த போது "அப்படித் தாக்கியிருந்தால் திருப்பி தாக்கியிருக்கவே மாட்டோம். அப்படித் தாக்குதலுக்குள்ளாவோம் என்று எதிர்பார்த்துத் தான் போனோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. அப்படி நடந்திருந்தால் அது எங்களுக்குப் போதும்." என்று தெரிவித்தார்.

ஜே.வி.பி.யினர் மீதான தாக்குதல்களை எதிர்த்து பல சிங்களப் பத்திரிகைகள் தங்களின் ஆசிரியர் தலையங்கங்களிலும் கண்டனம் தெரிவித்திருந்தன. ஜே.வி.பி.யினரை வன்முறைக்கு துாண்டி அவர்களை அடக்கி அழித்தொழிக்கும் தந்திரோபாயமென்றும், இது தான் கடந்த காலங்களிலும் நடந்தேறின என்றும் ராவய பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருந்தது.

### கட்சிகளின் நிலை

வட மேல் மாகாணத்தில் கடந்த 1994 பொதுத் தேர்தலில் பொ.ஐ.மு 5,13,402 வாக்குகளைப் (52.04 வீதம்) பெற்றுக் கொண்டது. அதே வருடம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் 5,69,632 (61 வீதம்) வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. 1997 உள்ளூராட்சித் தேர்தலில் 5,10,095 (55.08 வீதம்) வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. அத் தேர்தலில் பொ.ஐ.மு. செய்த வன்முறைகள், கள்ள வாக்குகளிப்பு, என்பன அதிகளவில் இடம் பெற்றமையை தேர்தல் கண்காணிப்புக் குழு அம்பலப்படுத்தியிருந்தது. மேலும் குண்டர்களைப் பாவித்து ஒரு இளைஞரை பொ.ஐ.மு.வினர் கொலை செய்ததும், வாக்குப் பெட்டியொன்றை கடத்திச்சென்று எரித்த சம்பவமும் குருநாகல் மாவட்டத்திலேயே நடந்திருந்தது. இதன் படி கடந்த ஜனாதிபதித் தேர்தலைவிட 1997 தேர்தலில் 59,537 வாக்குகள் குறைந்து விட்டிருந்தது.

வடமேல் மாகணத்தில் ஐ.தே.க. கடந்த 1994 பொதுத் தேர்தலில் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகள் 4,60,218 (46.25). 1997 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அது பெற்றுக் கொண்ட வாக்குகள் 3,81,477 (39.58). அதாவது மூன்று வருடங்களில் 78,741 வாக்குகளை இது இழந்து விட்டிருந்தது. இதன்படி இன்றைய நிலையில் ஐ.தே.க. ஆட்சியைக் கைப்பற்றுவதாயின் ஏறத்தாழ 5 லட்சம் வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அதாவது 1997இல் பெற்ற வாக்குகளை விட 1,20,000 வாக்குகளைப் பெற்றாக வேண்டும். ஐ.தே.க.வின் இன்றைய நிலையில் இது கனவாகத் தான் இருக்க முடியும்.

இம்முறை ஜே.வி.பி. மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. ஜே.வி.பி. கடந்த 97ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் 11 உறுப்பினர்களைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமேல் மாகாண சபையில் ஜே.வி.பி. 1994 பொதுத் தேர்தலின் போது 6,605 (0.65) வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டது. 1997 உள்ளூராட்சித் தேர்தலில் (புத்தளம் மாட்டத்தில் 4, நகர சபைகள் 2இனதும் வாக்காளர் பட்டியல் நிராகரிக்கப்பட்ட நிலையில்) 24,485 (2.17) வாக்குகள் பெற்றுக் கொண்டது. அதாவது 17,880 வாக்குகள் மேலதிகமாக பெற்றுக் கொண்டது. இன்றைய நிலையில் ஜே.வி.பி.யின் பலம் அதைவிடக் கூடியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

### ஜே.வி.பி.யின் பாராளுமன்றப் பாதை

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி.யின் 101 உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். இவர்களின் இது நாள் வரையான சம்பளத்தையும், ஜே.வி.பி.யின் ஆற்றல் மிகுந்த மனித வளங்களையும் கொண்டு நூலகங்கள், மருத்துவமனைகள், சமூக நிலையங்கள், நீர்ப்பாசனம், பாலங்கள் என பலவற்றை செய்து காட்டியுள்ளனர். இது வரை காலம் ஏனைய கட்சிகளின் சகல உறுப்பினர்களும் மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதிகளை கையாடல், மற்றும் கொமிஷன்களின் மூலம் சிறு, சிறு பணிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் தங்களுக்குக் கிடைக்கின்ற சம்பளத்தையும் வளங்களையும் மக்கள் சேவைக்காக வழங்குகின்ற கட்சியை இலங்கையின் வரலாற்றில் எங்கும் பார்க்க முடியாது. ஜே.வி.பி. தமது கட்சிப் பத்திரிகையொன்றில் இது குறித்து இவ்வாறு தெரிவிக்கிறது.

"இன்று மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 11,865, அவருக்கென மூன்று ஊழியர்களுக்குமாக 12,000ரூபாவும் சேர்த்து மாதமொன்றுக்கு 23,865 ரூபா வழங்கப்படுகிறது. வட மேல்மாகாண சபையில் மொத்தம் 52 உறுப்பினர்களுக்கும் (மொத்தம் 12,40,980.00 ரூபா) 12 லட்சத்துக்கு கிட்டிய பணம் வழங்கப்படுகிறது. இது அவ்வளவும் தனியாக அனுபவிக்கப்பட்டவை. நாங்கள் இது வரை எப்படி இக்கொடுப்பனவுகளை மக்களின் நலன்புரிக்கு செலவிட்டு வந்தோமோ அது போல இம்முறை போட்டியிடும் கட்சிகளும் செய்வதாக உறுதி கூறமுடியுமா?

ஒரு மாகாண சபை உறுப்பினருக்கு சம்பளம், ஊழியர் கொடுப்பனவு, மற்றும் ஏனைய வசதிகள்: இதோ

1. அடிப்படைச் சம்பளம், சாரதி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு -11,865.00
2. அமர்வொன்றில் கலந்துகொள்வதற்கான கொடுப்பனவு -100.00
3. சாதாரண தொலைபேசி பாவனைக்கான மாதமொன்றுக்கான கொடுப்பனவு 8,000.00
4. மொபைல் தொலைபேசி பாவனைக்கான மாதமொன்றுக்கான கொடுப்பனவு,8,000
5. வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கான வரிச்சலுகை-15 லட்சம்
6. 50,000 பெறுமதியான புதிய தட்டச்சு இயந்திரம்
7. 30,000 பெறுமதியான பக்ஸ் இயந்திரம்"

அமைப்பைப் பலப்படுத்தும் வேலையை மிகவும் பொறுமையாக செய்து வரும் ஜே.வி.பி. இந்த தேர்தல்களைப் பெருமளவுக்கு தங்களின் ஜனநாயக செயற்பாடுகளுக்காகவும், பொது நலன்களுக்காகவும் பயன்படுத்தி வருவது முன்னெப்போதும் இடதுசாரி வரலாற்றில் இல்லாத ஒன்றாகவே இருக்கிறது. ஆனால் பாராளுமன்ற வழிமுறை அதன் இலக்கை விழுங்கி விடாததாக இருப்பது அவசியம்.

### நாளை உங்களுக்கு புண்ணாக்கு!

முடிவாக வடமேல் மாகாண சபைத் தேர்தலில் கள்ள வோட்டு போட்டேனும், உச்ச அளவில் குண்டர்களையும், படையையும் பயன்படுத்தியேனும் ஆளுங்கட்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவே தெரிகிறது.

இறக்குமதி செய்யப்பட்டு சந்தையில் விற்கப்பட்ட பருப்பு குதிரைகளுக்கு தின்னக் கொடுக்கும் தீவனம் என்பது பற்றி பத்திரிகைகளிலெல்லாம் செய்தி வெளிவந்தது. இறுதியாக இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு மாத்திரமே அகப்பட்டது. அதாவது அதுவரை காலம் இலங்கை மக்கள் சாப்பிட்டு வந்தது குதிரைக்கு கொடுக்கும் தீவனத்தையே. இதனைத் தொடர்ந்து

-19

நன்றி - நூலகத்திட்டம்

# முல்லோயா கோவிந்தன்: மலையகத்திலிருந்து முதல் தியாகி!

மலையகத் தோட்டப்பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களின் போது உயிர்நீத்த தியாகிகளின் பட்டியலில் முதன் முதலாக இடம்பெற்றவர் கோவிந்தன். அடுத்த வருடம் ஜனவரி 15 அவரின் 60வது நினைவு தினம். இவ்வருடம் 59ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு கண்டியில் கோவிந்தனுக்கு சிலை எழுப்புவதற்கான முயற்சிகளில் தொழிலாளர்களும் சில தொண்டர் நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

முல்லோயா போராட்டம் சரித்திரத்தில் இடம்பெற்றது கோவிந்தனின் கொலையோடு தான்.

1939 தோட்டப் பகுதிகளில் ஆங்காங்கு வேலை நிறுத்தம் இடம்பெற்று வந்தது. காலனித்துவத்தின் கீழ் தோட்ட நிர்வாகம் தோட்டத் தொழிலாளிகளை அடிமைகளாக அடக்கி வைத்திருந்தது. இலங்கையின் முதலாவது அரசியற் கட்சியாக 1935இல் லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதன் பின் நாடெங்கிலும் தொழிற்சங்கக் கிளைகளை ஆரம்பித்து வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டது. ல.ச.ச.க. 1939 டிசம்பர் 28ஆம் திகதியன்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியனை மலையகத்தில் ஆரம்பித்தது. ஏற்கெனவே அங்கு தொழிலாளர்களை அணி திரட்டிக் கொண்டிருந்தது ல.ச.ச.க.

இப்படிப்பட்ட நிலையில் தான் முல்லோயா வேலை நிறுத்தப் போராட்டம் மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேலை நிறுத்தத்திற்கு பல்வேறு காரணிகள் தொழிற்பட்டிருந்த போதும் இதன் ஆரம்பம் ஒரு பாடசாலை ஆசிரியரான ஜெகநாதன் என்பவரை தோட்ட நிர்வாகம் பழிதீர்க்கும் முகமாக மேல் நிலையிலிருந்து கீழ்நிலைக்கு மாற்றியதைத் தொடர்ந்தே ஆரம்பமானது. தொழிற்சங்கத்தை ஆரம்பிப்பதில் இவர் பங்கெடுத்ததே இவரின் மீதான பழிவாங்கலுக்குக் காரணமானது.

மலையகமெங்கும் ஏற்கெனவே ஆரம்பமாகியிருந்த சம்பள குறைவு, நலன்புரி குறைப்பு, வேலை அதிகரிப்பு, என்பவற்றை எதிர்த்து இடம்பெற்ற போராட்டங்களை அடக்கவென ஆங்கிலேய அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்களை கட்டவிழ்த்து விட்டிருந்தது. இந் நிலையில் ல.ச.ச.க.வின் தொழிற் சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னின்ற வேல்சாமியுடன் சேர்ந்து அக்கடமைகளில் இவ் ஆசிரியரான ஜெகநாதன் ஈடுபட்டிருந்தார். இவ்ரின் மீது நிர்வாகம் மேற்கொண்ட பழிதீர்ப்பை எதிர்த்தே ஆரம்பத்தில் வேலை நிறுத்தம் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து வேல்சாமி கைது செய்யப்பட்டார். ஜெகநாதனை மீண்டும் பழையபடி மேல் நிலைக்கு மாற்றும்படி கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பின்னர் வேல்சாமியை விடுதலை செய்! என்ற கோரிக்கையும் சேர்ந்து கொண்டது. இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிக்கு முகமாக தோட்டத்தைச் சூழ இருந்த சிங்களத் தொழிலாளர்களைக் கொண்டு வந்து வேலையில் ஈடுபடுத்த நிர்வாகம் முயற்சித்தது. இதனை தொழிலாளர்கள் முறியடித்தனர். தோட்ட நிர்வாகத்தின் நண்பரான அரச சபையின் நுவரெலியா உறுப்பினர் டபிள்யு.ஈ.அபேகுணசேகர இதனை சிங்கள-தமிழ் வன்முறையாக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பிரச்சாரம் செய்தார். ல.ச.ச.க. தோட்டப் பகுதிகளில் சிறு சிறு கூட்டங்களை இரகசியமாகவும், பகிரங்கமாகவும் நடத்தி போராட்டத்துக்கு ஆதரவு கோரியது.

இப்போராட்டத்தில் ரொபர்ட் குணவர்தன, ரெஜி பெரேரா, ரெஜி சேனநாயக்க, ஜே.சி.டி.கொத்தலாவல போன்ற தலைவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டது. டபிள்யு.ஈ.அபேகுணசேகர இக்கூட்டங்களைத் தடை செய்யும்படி பொலிஸ் அதிகாரிகளுக்குத் தந்தி அனுப்பினார். அத் தந்திகளில் "ல.ச.ச.க.வின் தலைமையில் அங்கு இடம்பெற்றுவரும் வேலை நிறுத்தத்தினால் இரத்தக்களரி இடம்பெற வாய்ப்புண்டு. அவர்களின் கூட்டம் பிரசாரப்படுத்தப்பட்டிருப்பதன் படி இரவு 7.00 மணிக்கு இடம்பெறாது மாறாக 5.00 மணிக்கு இடம்பெறவிருக்கிறது. புலனாய்வுப் பிரிவினரையும் பொலிஸாரையும் இந்த நேரத்துக்கு அனுப்புங்கள்.." எனக் கோரியிருந்தார்.

இக்கூட்டம் தடை செய்யப்பட்டாலும் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடந்தது. இதற்கிடையில் வேல்சாமி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து முன்னைய கோரிக்கைகளோடு சம்பள உயர்வுக் கோரிக்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலைமையில் நிர்வாகம் பொலிஸ் காவல் நிலையம் ஒன்றை தொழிற்சாலையில் அமைத்துக் கொண்டது. வெளியிடங்களிலிருந்து சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி ஒரு கலவரத்துக்கான முயற்சியில் டபிள்யு.ஈ.அபேகுணசேகர ஈடுபட்டார். தொழிலாளர்கள் இம்முயற்சிகளை எதிர்த்து நின்றனர்.

இப்போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிர்வாகம் இறுதியில் பேச்சுவார்த்தைக்கு இணங்கியது. 1939 ஜனவரி 9ஆம் திகதியன்று நிர்வாகத்துக்கும் தொழிற்சங்கத்துக்குமிடையில் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது. அதன்படி 16 சதம் சம்பள உயர்வு வழங்குவது, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களை பழி வாங்காதிருப்பது, தொழிலாளர்கள் தாங்கள் விரும்பிய தொழிற்சங்கத்தில் சேருவதற்கு உரிமையை உறுதி செய்வது என உடன்பாடு காணப்பட்டது. அதன்படி வேலை நிறுத்தமும் கைவிடத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் பிரச்சினை உக்கிரமடைந்தது டபிள்யு.ஈ.அபேகுணசேகரவாலேயே அன்றைய ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்த அறிக்கையில் சமசமாஜிகள் அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்வதாகவும், அவர்களை உடனே கைது செய்யும்படியும் அதில் குறிப்பிட்டிருந்தார். இது போன்று அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நிர்வாகத்துக்கு தெம்பைத் தந்ததுடன், பொலிஸாரையும் தூண்டி விட்டிருந்தன.



15ஆம் திகதி 12.00மணியளவில் தொழிலாளர்கள் மதிய உணவுக்காக வீடுகளை அடைந்து கொண்டிருந்த நேரம். வேகமாக இரண்டு பொலிஸ் ஜீப்புகள் வந்து நின்றன. ஜீப்பிலிருந்து இறங்கிய பொலிஸார் கண்டவர்களையெல்லாம் திட்கொண்டே தாக்க ஆரம்பித்தனர். துப்பாக்கிகளுடன் லயத்தை நோக்கிச் சென்ற பொலிஸார் "தோட்டத்தில் சங்கம் சேர்த்து குழப்புபவன் யார்டா? எங்கே அந்தத் தலைவன்?" என்று கூறிக்கொண்டே எதிர்ப்பட்ட தொழிலாளர்களை தாக்கினர். அல்லோல கல்லோலப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று திரண்டனர். பெரியசாமி அனைவரையும் விலத்திக் கொண்டு முன்னே வந்தார். ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் ஜீப்புகளுக்குக் கல்லெறிந்தனர்.

அவரையும் விலத்திக்கொண்டு கோவிந்தன் முன்னே வந்தார். பொலிஸாரும் தொழிலாளர்களும் நேருக்கு நேர் நின்று வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். சுரவீர எனும் பொலிஸ் சார்ஜன்ட் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு முன்னே வந்து கோலிந்தனை நோக்கி சுட்டான். கோவிந்தன் அப்படியே நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கீழே சாய்ந்து மடிந்தார். நடந்த களேபரத்தில் வாகனத்துக்குள் சிக்கிய பெரியசாமி படுகாயமுற்றார்.

ஐந்து தொழிலாளர்களைப் பிடித்து ஜீப்பில் ஏற்கொண்டு பொலிஸார் பறந்தனர்.

இந்தச் சம்பவத்திற்கு நிர்வாகத்தின் பங்களிப்பை விட டபிள்யு.ஈ.அபேகுணசேகரவின் பங்களிப்பே அதிகமானதென இது தொடர்பான விசாரணைகளில் வெளிவந்தன. நீதிமன்ற விசாரணை நடந்த போதும் அதன் தீர்ப்பில் சார்ஜன்ட் சுரவீர செய்தது நியாயமானதென தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சம்பவம் குறித்து முறையாக விசாரணைக் கொமிஷன் நியமிக்கும்படி அரசாங்க சபையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கொண்டு வந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு விசாரணை நடந்தது. இவ்விசாரணைக்குழுவின் தலைவராக சீ.குமாரசுவாமி நியமிக்கப்பட்டார். கோவிந்தனுக்காக வாதாடியவர் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா.

இதற்கிடையில் இன்னுமொரு சம்பவம் இடம்பெற்றது. முல்லோயா சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட 6 தொழிலாளர்களின் மீது வழக்கு தொரப்பட்டது. இவை குறித்து விசாரணை கொமிஷன் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கை நீக்கும்படி அரசாங்க சபை வரை கோரிக்கை சென்றது. பொலிஸார் இதற்கு இணங்காத நிலையில் நாடு முழுவதும் இதனை எதிர்த்து ல.ச.ச.க. கூட்டம் நடத்தியது. கொழும்பு ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்ற இக்கூட்டமொன்றில் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார். இடது சாரிக் கட்சித் தலைவர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர். 1940இலேயே இவ் ஆணைக்குழுவின் முடிவு அறிவிக்கப்பட்டாலும் கூட ஆணைக்குழுவின் முடிவின் படி சுரவீர துப்பாக்கிச் சூடு நடத்தியது அநியாயம் என்று மட்டுமே தீர்ப்பாகியது. வேறு ஒன்றும் நடக்கவில்லை.

முல்லோயா போராட்டம் மலையகத்தில் ஊவா போன்ற பகுதிகளுக்கும் பரவியது. அது போல ஏனைய இடங்களுக்கும் துரிதமாகப் பரவிய போது பதுளையில் ஒரு தோட்டமொன்றில் அடக்குமுறைக்கு வந்திருந்த பொலிஸாரிடமிருந்து துப்பாக்கிகளைப் பறித்தெடுத்துவிட்டு பின்னர் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதை பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொண்டு விட்டு திருப்பி அதனை கொடுத்து அனுப்பினர். இவ்வேலை நிறுத்தங்களின் பின் ல.ச.ச.க. தடை செய்யப்பட்டது. தலைவர்கள் தலைமறைவாகப் போனார்கள். 1940 ஜூன் 18இல் கைது செய்யப்பட்டு போகம்பர சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் அங்கிருந்து தப்பி இந்தியாவுக்கு தப்பிச் சென்று தலைமறைவாக அரசியல் செய்தனர்.

இப்படி முல்லோயாப் போராட்டத்துக்கு சரித்திரத்தில் முக்கிய இடம் உண்டு. கோவிந்தனில் தொடங்கிய உக்கிர அடக்குமுறை இன்று வரை நீள்கிறது. அடிமைத்தனம் இன்னும் ஒழியவில்லை மலையகத்தில். அவ் அடிமைத் தளையை ஒழிக்க இன்று எத்தனையோ கோவிந்தன்கள் தன்னிச்சையாகவே தயாரானாலும் அதற்கு தலைமை கொடுக்க எந்த தலைமையும் மலையகத்தில் இல்லை. அதற்கு கடந்தகால வேலை நிறுத்தங்கள் நல்ல உதாரணங்கள்.

இப்படிப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தொழிலாளர்களின் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து வரும் தொண்டமான் அவ்வப்போது கூட்டியும் கொடுப்பாராம் (சம்பளத்தை).

அந்த வகையில் கோவிந்தனின் தியாகம் என்றென்றும் மலையகத்தில் நிலைக்கும். தனது உயிரைப் பலிகொடுத்து உரிமைப் போராட்டத்தின் பலத்தை உலகறியச் செய்துவிட்டு தியாக வரலாற்றை தொடக்கி வைத்தவர் கோவிந்தன்.

**...அவரையும் விலத்திக்கொண்டு கோவிந்தன் முன்னே வந்தார். பொலிஸாரும் தொழிலாளர்களும் நேருக்கு நேர் நின்று வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். சுரவீர எனும் பொலிஸ் சார்ஜன்ட் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு முன்னே வந்து கோவிந்தனை நோக்கி சுட்டான். கோவிந்தன் அப்படியே நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கீழே சாய்ந்து மடிந்தார்...**

–தலைக்கி

# வவுனியா- தேசிய இளைஞர் சேவை மன்றம்: ஊழல்களின் கோட்டை?

வவுனியாவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உயரதிகாரிக்ள் சர்வாதிகாரிகள் நடந்து கொள்வது போல நடந்து கொள்வதாகக் கூறப்படுகின்றது.

பல்வேறு ஊழல்களின் கோட்டையாக இந்த அலுவலகங்கள் விளங்குவதை ஏனோ தெரியாது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமையக அதிகாரிகளும் கண்டும் காணாததும் போல நடந்து கொள்கின்றார்களாம்.

இளைஞர் சேவை அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு, ஒரு தொடர் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே பதவி உயர்வு வழங்குவது இந்த மன்றத்தின் நடைமுறையாகும். அவ்வாறு பதவி உயர்வு பெற்ற ஒருவருடைய பதவி முன்னேற்றத்தைக் கூட, தடுத்து நிறுத்தும் அளவுக்கு வவுனியாவிலுள்ள மாகாணப் பணிப்பாளரும் மாவட்ட உதவிப் பணிப்பாளரும் இந்த அதிகாரிகள் அதிகார பலமும், செல்வாக்கும் உடையவர்களாக இருப்பது தான் பலருக்கும் ஆச்சரியமாகவும், அதிர்ச்சி தரும் விடயமாகவும் உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பிரதேச பிரிவுகளிலும் கலாசாரப் பயிற்சிகள் நடத்துவதற்கென தேசிய சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்த நிதியில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒரு தொகைப்பணம் பயன்படுத்தாத நிலையில் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு இந்த இரண்டு உயர் அதிகாரிகளின் அசமந்தமான செயற்பாடே காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 1997 ஆம் ஆண்டு இம்மாவட்டத்தின் இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் தேவைக்கென வழங்கப்பட்ட கேரம் போட் இன்னும் களஞ்சிய அறையிலேயே கவனிப்பார் எவருமின்றி கிடக்கின்றது.

அதேபோல, வவுனியா மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் நூலகங்களுக்கென கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட நூல்களின் தொகுதியும்

–19

நன்றி - நூலகத்திட்டம்





1974ல் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கொல்லப்பட்ட ஒன்பது பேர்

1974 உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் 25 வருட நினைவு...

# சுதந்திரக் கட்சி அன்றும் இன்றும் அப்படித்தான்!

1974 ஜனவரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் முடிவுற்று இந்த ஜனவரியுடன் இருபத்தைந்து வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் மட்டும் அந்த மாறாத வடுக்கள் இன்னமும் துருத்திக் கொண்டிருக்கின்றன.

பல தடவைகள் அழிக்கப்பட்ட போதும் மீண்டும் முளைத்த அழிவின் நினைவுச் சின்னங்கள் இன்றும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் மக்களுக்கு அன்றைய பயங்கர நிகழ்வுகளை மீட்டிக் கொண்டிக்கின்றன.

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் 1960களின் நடுப்பகுதிகளில் அருட்திரு தனிநாயகம் அடிகளின் முயற்சியினால், தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றமே உலகம் தழுவிய வகையில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தி வந்தது. முதலாவது 1966இல் மலேசிய அரசாங்கத்தின் ஆதரவில் அதன் தலைநகரான கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாட்டை 1968இல இந்திய தமிழக அரசாங்கத்தின் ஆதரவில், சென்னையிலும், மூன்றாவது மாநாட்டை 1971இல் பல்வேறு தமிழ் அமைப்புகளினதும், அரசாங்கத்தினதும் ஆதரவில் பிரான்சின் தலைநகரான பாரிஸிலும் நடத்தியது. மூன்றாவது மாநாடு பாரிஸில் நடக்கும் போதே அருட் தந்தை தனிநாயக அடிகளதும் இலங்கைத் தமிழாராய்ச்சி மன்றக் கிளையினதும் வேண்டுதலின் பேரிலும் 1974ல் ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அன்றைய சிறிமா தலைமையிலான ஸ்ரீ.ல.சு.கட்சி - இடதுசாரி கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் விரும்பவில்லை. கொழும்பில் நடாத்துவதாக இருந்தால், அரசாங்க ஆதரவையும் தருவதாக ஆட்சியாளர் கூறினர். தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் அதனை மறுத்து யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மாநாட்டுக்கென விழாக்குழு அமைக்கப்பட்டது. நிதிக்குழு வரவேற்புக்குழு எனப் பல்வேறு உப குழுக்களும் அமைக்கப்பட்டன. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் விழாவுக்கென நிதி சேகரிக்கப்பட்டது. தங்கள் பிரதேசத்தில் நடைபெறும் விழாவென்பதற்காக மக்கள் நிதியினைத் தாராளமாக அளித்தனர்.

அரசாங்கம் தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகளைப் போடத் தொடங்கியது. கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் யாழ். நகர மேயரும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பாவினூடாகவும் முட்டுக்கட்டைகள் போடப்பட்டன.

கொழும்பில் மாநாட்டில் கலந்துகொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் விழா நடத்துவதற்கு மாநகர சபைக்குச் சொந்தமான அரங்குகள் மறுக்கப்பட்டன. நகரின் முக்கிய அரங்குகளான வீரசிங்கம் மண்டபத்தையும், முற்றவெளி மண்டபத்தையும் பயன்படுத்த கடைசி நேரம் வரை அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இம்மறுப்பு நடவடிக்கை அதிகரிக்க அதிகரிக்க இதனை எவ்வாறாவது சிறப்பாக நடாத்த வேண்டும் என்ற உத்வேகம் அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் வலுப்பெறத் தொடங்கியது. அமைப்பாளர்கள் மாற்று ஏற்பாடுகளைத் தேடத் தொடங்கினர். யாழ்ப்பாணம் திறந்தவெளி மண்டபம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி போன்றன தெரிவு செய்யப்பட்டன. குடாநாடெங்கும் மக்கள் அலை அலையாக மாநாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். விழா மாபெரும் மக்கள் விழாவாக பரிணமிக்கத் தொடங்கியது.

விழா தொடர்பான மக்களின் ஈடுபாட்டையும், அரசின் பால் ஏற்பட்ட பாரிய வெறுப்பையும் கண்ட அரசு கடைசி நேரத்தில் சற்றுக் கீழ் இறங்கியது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கப்பட்டது. வீரசிங்கம் மண்டபம், யாழ். திறந்த வெளி அரங்கு போன்ற யாழ் மாநகர சபையின் அரங்குகள் பயன் படுத்தப்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.


மாநாட்டு விழா ஜனவரி 3ம் திகதி ஆரம்பமாகி 10 திகதி வரை நடைபெற்றது. யாழ் நகரம் தேவலோகம் போலக் காட்சியளித்தது. மக்கள் தாங்களாகவே முன்வந்து வீதிகளை அலங்கரித்தார்கள். நகர வீதிகள் மட்டுமல்ல குடாநாடெங்கும் உள்ள பிரதான வீதிகள் மக்களால் அலங்கரிக்கப்பட்டன. வீதிகளெல்லாம் ஒலிபெருக்கியில் தமிழர் முழக்கம் எழுப்பப்பட்டது. இலட்சக் கணக்கான மக்கள் யாழ் நகரை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடு கூட இதுபோல சிறப்பாகவும், உற்சாகமாவும், உணர்வோடும், நடத்தப்படவில்லையென வெளிநாட்டு அறிஞர்கள் கூறும் அளவிற்கு குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது. சிவகுமாரன், முத்துக்குமார சுவாமி, வரராஜப் பெருமாள் போன்ற இளைஞர்கள் தொண்டர் படை அமைத்து மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டனர்.

மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் வீரசிங்க மண்டபத்திலும், கலை நிகழ்ச்சிகள் திறந்தவெளி அரங்கிலும் கண்காட்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றன. கண்காட்சியில் அமெரிக்கா வரை கப்பலோட்டிய யாழ். தமிழரின் அன்னபூரணி கப்பலின் மாதிரி வடிவ்ம் வைக்கப்பட்டிருந்தமை அனைவரையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது.

மாநாட்டு ஏழாம் நாள் விழாக்களின் பண்பாட்டை வலியுறுத்தும் அலங்கார ஊர்திகளின் பவனி பல்லாயிரக்கணக்கான மக்களுடன் நடைபெற்றது. அதில் பண்டாரவன்னியனை ஆங்கிலேயர் விலங்குடன் கைது செய்யும் காட்சியும் சித்திரிக்கப்பட்டிருந்தது. விடுதலைப் போராளி உரும்பிராய் சிவகுமாரன் அதில் பண்டாரவன்னியனாக வந்திருந்தார். ஊர்திகள் பவனி முத்திரைச் சந்தைச் சந்தையில் வைத்து பொலிசாரால் வழிமறிக்கப்பட்டது. பண்டாரவன்னியன் ஊர்தியை விலக்கிவிட்டு பவனியை நடத்துமாறு ஊர்வலத்தினர் கேட்கப்பட்டனர். சிவகுமாரன் உட்பட ஊர்வலத்தில் வந்த இளைஞர்களும், மக்களும் அதனை மறுத்து, நடுவீதியில் சத்தியாக்கிரகம் இருந்தனர். சில மணிநேரப் போராட்டத்தின் பின்னர் பொலிசார் பவனியை அனுமதித்தனர். ஊர்வலம் யாழ் நகருக்கு வந்து சேர இரவாகியது.

நகர் முழுவதும் ஒரே மக்கள் கூட்டம். அதே நேரம் ஒரே அடை மழை. மழையில் தோய்ந்து கொண்டும் மக்கள் விழாவைக் கண்டு கழித்தனர்.

விழாவின் எட்டாம் நாள் இறுதி நாளாகவும் கொண்டாடப்பட்டது. விழா முதலில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்த போதும் 50,000 க்கு மேற்பட்ட மக்கள் விழாவைப் பார்க்க குழுமியிருந்ததால் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மண்டபத்தின் முன்னால் உள்ள வெளிக்கு மாற்றப்பட்டது.



பல்வேறு தமிழ் அறிஞர்கள், தமிழரின் பெருமையை, பண்பாட்டின் பெருமையைப் பேசினர். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாக தமிழகப் பேராசிரியர் நைனா முகம்மது அவர்கள் பேசிக் கொண்டிருந்தார். அப்போது தான் அக்கொடிய சம்பவம் நடைபெற்றது.

யாழ் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையிலான பொலிஸ் படையினர் மக்களுக்குள் நுழைந்தனர். மக்களை ஈவிரக்கமின்றித் தாக்கத் தொடங்கினர். துப்பாக்கிச் சூடுகளையும் மேற்கொண்டனர். ஆனந்தத்துடன் இருந்த மக்கள் சிதறி ஓடினர். நகர் முழுவதும் ஒரே பதட்டம். தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

ஆனந்த விழா மக்களைப் பொறுத்த வரையில் இறுதியில் துயர விழாவாக மாறிப் போனது. பேரினவாதம் தன் கோரமுகத்தை உலகிற்குப் பறைசாற்றியது. தமிழ் மக்களும் இவ்வரசாங்கத்தில் தாம் வாழ முடியாது என்பதை மீள ஒரு தடவை குறித்துக் கொண்டனர். தமிழ் இளைஞர்கள் ஆயுத வன்முறைக்கு ஆயுதத்தால் பதில் சொல்வோம் எனச் சபதம் எடுத்தனர்.

இவ்வாறு சபதம் எடுத்தவர்களில் ஒருவர் தான் உரும்பிராய் சிவகுமாரன். மக்கள் தாக்குலுக்கு உட்பட்டு சிதறி ஓடிய போது, இதற்கெல்லாம் பழிவாங்கியே தீருவோம் எனச் சபதமெடுத்தனர்.

சிவகுமாரனது குறி இருவரை நோக்கியிருந்தது. ஒருவர் மக்கள் மீதான தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய யாழ் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா, மற்றையவர் தாக்குதலுக்கு ஊக்கமளித்த யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா.

சந்திரசேகராவை சொலை செய்வதற்காக தெல்லிப்பழையிலும், நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலடியிலும் இருமுறை சிவகுமாரன் குழுவினர் முயன்றனர். பலவீனமான ஆயுதங்கள் அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. பொன்னாலைப் பாலத்தில் அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்ய முயற்சித்த போதும் வெற்றி கிடைக்கவில்லை.

இத்தொடர் தாக்குதல் முயற்சிக்காகவே 10,000 ரூபா சன்மானத்தில் சிவகுமாரன் தேடப்பட்டார். இறுதியில் கோப்பாயில் ஒரு சுற்றி வளைப்பின் போது சயனைட் அருந்தி மரணமடைந்தார்.

சிவகுமாரன் குழுவினரிடம் இருந்து தப்பிய அல்பிரட் துரையப்பா 1975 ஜூலை 27 இல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலடியில் வைத்து புதிய தமிழ்ப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அத் தாக்குதலுக்குத் தலைமை வகித்தவர் புலிகளின் தலைவர் பிரபாகரன். சந்திரசேகரா மட்டும் இடம் மாற்றலாகித் தப்பி விட்டார்.

தமிழராய்சி மாநாட்டுப் படுகொலைகள் பற்றி விசாரணை வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். அரசு செவிசாய்க்கவில்லை. இறுதியில் மக்களாகவே ஒரு விசாரணைக் குழுவை அமைத்தனர். முன்னாள் நீதியரசர்கள் இருவரையும், ஆயர் குலேந்திரனையும் உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணையில் நூற்றுக்கணக்கானோர் சாட்சியம் அளித்தனர். முடிவில் பொலிசாரின் செயல்களே கொலைகளுக்குக் காரணம் என விசாரணைக்குழு தீர்ப்பளித்தது.

அரசு தீர்ப்பினை உதாசீனம் செய்தது. ஆனால் மக்கள் மட்டும் விழித்துக் கொண்டனர்.


-பரந்தாமன்

நன்றி - நூலகத்திட்டம்



# "வந்தேமாதரம்" கட்டாயமாக்கப்படுகிறது!

இந்து வெறிக்கும், இந்து தேசியவாத அரசியல் போக்குக்கும் தலைமையேற்று வரும் சமதா கட்சியின் தலைமையிலான பாரதீய ஜனதாக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்பே ஏனைய இந்திய இந்து வெறிக் குழுக்களுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தது புதிய விடயமல்ல. வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய அபகீர்த்திமிக்க ராமர் கோயில் அமைக்கும் திட்டத்திலும், பாபர் மசூதித் தகர்ப்பு நடவடிக்கையிலும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் அதன் இன்றைய அரசாங்க தலைமை-களுக்குமிடையில் இருந்து வரும் சட்டவிரோத தொடர்புகள் நாடறிந்தவை.



பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது

ராமர் கோயில் திட்டம் இந்திய மீயுயர் நீதிமன்றத்தினால் தடை செய்-யப்பட்டிருந்த போதும் இந்த நீதிமன்றத் தீர்ப்பை தம்மைக் கட்டுப்படுத்தும் ஒரு தீர்ப்பல்ல என்று பாரதீய ஜனதாக் கட்சி தலைமைகள் மிகவும் பகிரங்கமாகவே சொல்லி வருகின்றன. இப்போது உத்தரப் பிரதேச அடிப்படைக் கல்வித்துறை அமைச்சரான ரவீந்திர சுக்லா 'வந்தே மாதரம்' என்ற கீதம் அரச சார்பு நிகழ்ச்சிகள் அனைத்திலும் கட்டாயமாகப் பாடப்பட வேண்டிய ஒரு கீதம் என்றும் அது உறுதியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறார். அடிப்படையில் இந்து வெறியையும் முஸ்லிம் எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்துவதாக விமர்சிக்கப்பட்ட இந்தக் கீதத்தை தேசிய அந்தஸ்த்-துள்ள ஒரு கட்டாய கீதமாகப் பாட வேண்டும் என அவர் உத்தர-விட்டிருப்பது பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து வெறி உணர்வை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமான இந்த உத்தரவை அமைச்சர் வெளியிட்டிருப்பது இந்தியாவில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

பங்கிம் சந்தர் சட்டர்ஜி அவர்களால் எழுதப்பட்ட 'ஆனந்த மாதா' நாவலில் (1882) வருகின்ற இந்தப் பாடல் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது பரவலாக பாடப்பட்டு வந்தது. வந்தே மாதரம் என்ற சொல் ஒரு மந்திரச் சொல்லாக வெள்ளையர் அதிகாரத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தச் சொல்லை உச்சரித்ததிற்காக பலர் பொலிஸ் குண்டாந்தடி அடிபட்-டுள்ளனர், பலர் சிறை சென்றனர். ஆயினும் அது இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு மந்திரச் சொல்லாக இருந்து வந்தது.

எவ்வாறாயினும், இந்தப் பாடல் ஆனந்த மாதா நாவலில் வரும் முஸ்லிம் இன எதிர்ப்பு போக்குடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக அமை-வதாலும் அது முஸ்லிம் மக்களை ஒதுக்கிய இந்துத் தாயகத்தையே தாயகமாகக் கருதுவதாலும் அதனை அது வெளிவந்த காலத்திலிருந்தே முஸ்லிம்கள் எதிர்த்து வந்தார்கள். இப்பாடலை இந்திய தேசிய கீதமாக மாற்றலாம் என்ற எண்ணக் கருத்து வந்த போது அதைப் பலமாக மறுத்தார்கள். இந்தப் பாடல் தாய்-நாட்டை சகல சக்திகளும் கொண்ட காளியாக உருவகித்து பாடப்படுவ-தால் அது அடிப்படையில் இந்துத் தத்துவ முறையிலான பெண் தெய்வ வழிபாட்டுத் தன்மையைக் கொண்டதாகவே அமைகிறது. எனவே இது ஒரு தேசிய கீதமாக கொள்ளப்பட முடியாது என்று முஸ்லிம்கள் கருதினர். வங்காள தேசமும், முழு இந்தியாவும் இந்துத் தேவதையான காளியாக உருவகிக்கப்பட்டு நாடு ஒரு வணக்கத்துக்குரிய புனித தாயாகக் காட்டப்படும் இந்தப் பாடல் எப்படி ஒரு மதசார்பற்ற பாடலாக இருக்க முடியும் என்ற கேள்வி அப்போது பலமாக எழுப்பப்பட்டது.

இந்தப் பாடல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர்களில் ஒருவரான கையிற் அலி அவர்கள் 1908 இல் இப்படிக் கூறினார்.

'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவின் மிகவும் முன்னேறிய ஒரு மாநிலம் ஒரு மதச்சார்பான பாடலை தேசிய கீதமாக்குவதற்காக முன்தள்ளியிருப்பதையும் மதவாதியான ராதாகிருஷ்ணனை தேசிய கண்காணிப்பாளராகக் கூறியி-ருப்பதையும் பார்க்கையில் என் மனம் துயரத்தால் நிறைகிறது. இது மிகுந்த அதிருப்தியை எனக்குத் தருகிறது. அத்துடன் இந்திய தேசிய வாதம் என்ற போர்வையின் கீழ் இந்துத் தேசியவாதம் பிரச்சாரம் செய்யப்படுகிறதா என்ற சந்தேகத்தையும் இது எனக்கு ஏற்படுத்துகிறது.

எவ்வாறாயினும் காங்கிரஸின் செயற்கமிட்டி 1937 இல் இது தொடர்பான அறிவித்தல் ஒன்றை விடுத்தது. அந்த அறிவித்தலில் அது 'வந்தே மாதரம்' என்ற பாடல் ஆனந்த மாதா நாவலில் வந்த போதும் நாவல் எழுதப்படுவதற்குப் பல காலங்-களுக்கு முன்னேயே அப்பாடல் எழுதப்பட்டு விட்டது என்றும் பிற்பாடு எழுதப்பட்ட நாவலில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும், எனவே நாவலில் முஸ்லிம் எதிர்ப்புத் தன்மையுடன் இந்தப்பாடலை இணைத்துப் பார்க்கத் தேவையில்லை என்றும் கூறியது. அப்பாடலுக்கும் - குறிப்பாக வந்தே மாதரம் என்ற முதல் வரிக்கும் அதைத் தொடர்ந்து வரும் இரு அடிகளுக்கும் - தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இடையில் உள்ள உறவை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அது கோரியது. பாடலின் ஏனைய பகுதிகள் யாராலும் அவ்வளவாக பாடப்படுவதும் இல்லை - கவனிக்கப்படுவதும் இல்லை என்பதுடன் அந்த முதல் அடிகளில் மத ரீதியிலும் சரி வேறெந்த விதத்திலும் சரி எதிர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் எதுவும் இல்லை என்றும் அது கூறியது. அந்தப் பாடல் 30 கோடி மக்கள் என்று இந்திய மக்களைப் பற்றிச் சொல்லும் போதே அது எல்லா இந்தியர்களையும் உள்ளடக்குவதைக் காட்டுகிறது. அத்துடன் அப்பாடலோ வேறெந்தப் பாடலோ இந்திய காங்கிரஸினால் உத்தியோகபூர்வ கீதமாக அங்கீ-கரிக்கப்பட்டதில்லை. ஆனால் பரவலாக பாவிக்கப்பட்டமை அதற்கு ஒரு தேசிய முக்கியத்துவத்தை வழங்கி உள்ளது என்று தெரிவித்தது.

அதேவேளை காங்கிரஸ் செயல் கமிட்டி இந்தப் பாடலை எதிர்க்கும் முஸ்லிம் நண்பர்களின் வாதத்திலுள்ள நியாயத்தன்மையை ஏற்றுக் கொண்டது. பாடலின் சில பகுதிகளில் அதற்கான தன்மைகள் இருப்பதாக அது ஒப்புக் கொண்டது. இவற்றை-யெல்லாம் கணக்கில் எடுத்த பின் இப்பாடலை தேசிய கூட்டங்களில் முதல் இரண்டு அடிகளை மட்டும் சுதந்திரமாகப் பாட முடியும் என்றும் கூட்ட அமைப்பாளர்கள் எதிர்ப்-புக்குரிய தன்மையற்ற விதத்தில் வேறு வரிகளைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தது.

இந்தப் பாடலின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்த பல முக்கிய காங்கிரஸ் தலைவர்களும் அதைத் தேசிய கீதமாக்குவதற்குப் பதில் 'ஜனகணமண' என்ற பாடலையே பின்நாளில் தேசிய கீதம் ஆக்கினர். ஆயினும் வந்தே மாதரம் என்ற பாடலை ஒரு முக்கியமான தேசிய பாடலாக அங்கீகரித்தனர்.


வந்தே மாதரம் போன்ற தேசிய அளவில் புகழ்பெற்ற ஒரு பாடலை வெட்டி மாற்றுவது அவசியமில்லை என்றும் அதன் அரசியல் முக்கியத்துவத்தை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் காந்தி கூறினார். ஆயினும் அப்பாடல் விருப்பத்தெரிவாக அமைய வேண்டுமே ஒழிய திணிக்-கப்படக்கூடாது என்று குறிப்பிட்டார். இந்தியாவை ஒரு மத சகிப்புத்-தன்மையுள்ள தேசமாக அதேவேளை மதசார்பற்ற ஒரு அரசைக் கொண்டதாக உருவாக்க வேண்டும் என்று கருதிய முன்னைய இந்தியத் தலைவர்கள் அது ஒரு திணிப்பாக அமையக் கூடாது என்று வலியுறுத்தி வந்தனர்.

ஆனால் இந்தியாவை இந்து சாம்ராஜ்ஜமாக்க விரும்பும் இந்து வெறியாளர்கள் அதை எப்படியாவது திணித்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

உத்தர பிரதேச அமைச்சரின் உத்தரவு இந்த உணர்வின் தெளிவான ஒரு வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை.

ராமர் பூமியாக இந்தியாவை மாற்றிவிடத் துடிக்கும் ராம தூது-வர்கள் வால்களில் தீப்பந்தங்களுடன் புறப்பட்டிருக்கிறார்கள். இலங்கை தகனத்துக்கல்ல - இந்திய தகனத்துக்காக. □

## இந்திய தகனத்துக்காக வால்களில் தீப்பந்தங்களுடன் இராம தூதர்கள்...



-சஞ்சித்

நன்றி - நூலகத்திட்டம்



*பௌத்தம் 5000 ஆண்டுகள் நிலைபெற்றிருக்கும் என்றால் இந் நடவடிக்கையால் 2500 வருடங்கள் மட்டுமே பௌத்தம் நிலைபெறும்.*

*- துறவு வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு பிக்குணிகள் அந்தஸ்தை வழங்குமாறு ஆனந்ததேரர் கோரியபோது கௌதம புத்தர் கூறியது.*

*உன்னுடன் கதைக்கும் பெண் மூத்தவரானால் அப்பெண் உனது தாய் போன்றவள். பிற பெண்களை சகோதரியாக நினைத்துப் பழகு. எச்சந்தர்ப்பத்திலும் தனியாக பெண்ணுடன் கதைக்காதே. முடிந்தவரை இன்னொருவரை வைத்துக்கொண்டு பேசு.*

# பிக்குணிகள் சாசனம்: மதமும் பெண்களின் உரிமையும்

-ரத்னா

*- கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடையத் தயாரான வேளை ஆனந்ததேரர், பெண்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய சீலங்கள் எவை எனக் கோரிய போது அவர் கூறிய பதில்.*

தேரவாத பிக்குணிகள் அமைப்பு இலங்கையில் இருந்து மறைந்து சுமார் 1200 வருடங்களாகின்றன. எனினும் இந்த வருட முற்பகுதியிலிருந்து சிங்கள பௌத்த சமூகத்தில் இவ்விடயம் பெரிதும் பேசப்படும் விடயமாகவும் சர்ச்சைகளை ஏற்படுத்திவரும் விடயமாகவும் காணப்படுகின்றது.

பரந்த ஆழமான பௌத்த தத்துவத்தில் 'பிக்குணிகள் சாசனம்' என்பதற்கு இலகு மொழியில் விளக்கம் கொடுப்பது கடினமானது. இருப்பினும், இலகு முறையில் இவ்வாறு கூறிக் கொள்ளலாம்.

பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நான்கு சாரார்களிடம் காணப்படுகின்றது. இவர்கள் உபாசக்க, உபாசக்க தாய்மார்கள், பிக்குகள், பிக்குணிகள்' என்போராவார். (உபாசக்க, உபாசக்க தாய்மார்கள் என்போர் வெள்ளை ஆடை உடுத்தி, போயா தினங்களில் அனுட்டானங்களை மேற்கொள்வோர். போயா தினங்களில் இவர்களைக் காணலாம்) எனினும், பிக்குணிகளுக்கு இதுநாள் வரை மதத்தைப் பாதுகாக்கும் அந்தஸ்து வழங்கப்படவில்லை. இதனை நாம் பிக்குணிகள் சாசனம் (டீமைளாரனெ ழுசனநச) எனக் கூறலாம். சாசனம் என்பது ஒழுக்கம். ஒழுக்கத்துக்கான கோவை. இந்த சாசனத்தை பேணும் அந்தஸ்து பிக்குணிகளுக்கு இல்லை. தசசில் அம்மையார்கள் (பிக்குகள் போன்று காணப்படுபவர்கள் - மஞ்சளாடை உடுத்தி, தலைமயிரை வழித்திருப்பார்கள்.) பிக்குணிகள் என்ற அந்தஸ்தை இவர்களுக்கு வழங்க பிக்குணிகள் சாசனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக தேரவாத பிக்குணிகள் சாசனம் இலங்கையிலிருந்து மறைந்து 900 ஆண்டுகள் ஆகிவிட்டன.

சமீப காலத்தில் பிக்குணிகள் சாசனம், 98.2.21ம் திகதி, 10 தசசில் அம்மையார்களுக்கு இந்தியாவில் வைத்து உபசம்பதா (துறவு) வழங்கப்பட்டதன் மூலமும், பூரணை தினமான 98.03.10 அன்று தம்புள்ளை ரஜமகா விகாரையில் 21 தசசில் அம்மையார்களுக்கு உபசம்பதா வழங்கப்பட்டதன் மூலமும் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு முன்னின்று நடவடிக்கை எடுத்தவர்களுள், இலங்கை பிக்குணிகள் சாசன மண்டல தலைவர் இனாமலுவே சிரிசுமங்கல தேரர் முக்கியமானவர்.

இந்தப் பிக்குணிகள் சாசனம் நிறுவப்பட்டதன் மூலம், பிக்குகளுக்கு சமமான நிலையை பிக்குணிகள் அடைவர். பிக்குகளுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்கள், நலன்கள் என்பன பிக்குணிகளுக்கும் கிடைக்கும். பாங்சகூல எனப்படும் மரணச் சடங்குகளில் பிக்குகளால் ஓதப்படும் மந்திரங்கள் என்பனவற்றை பிக்குணிகளும் ஓதும் வாய்ப்புக் கிடைக்கும்.

பெண் பௌத்த துறவிகளுக்கு சம அந்தஸ்தை தருவிக்கும் இந்த நிகழ்வு, மகாயான தேரவாத பௌத்த மத பிரிவைக் காரணம் காட்டி எதிர்க்கப்பட்டு வருகிறது.

பொதுவாக ஆணாதிக்க மனப்பான்மையின் காரணமாகவே, பிக்குணிகள் சாசனம், பிக்குகளினாலும், மகாநாயக்க தேரர்களாலும் (மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர) முன்பிருந்தே மறுதலிக்கப்பட்டு வந்துள்ளது என்பது தெரிந்ததே.

இதை நாலினி காரியவசம், மாதம்பகம அஸ்ஸஜி தேரர் போன்றோர் பத்திரிகை விவாதங்களில் வன்மையாக வலியுறுத்துகின்றனர்.

எவ்வாறாயினும், ஆதிகாலத்தில் கௌதம புத்தர் பெண்களுக்கு பிக்குணிகள் பதவியை வழங்க மூன்று முறை மறுத்தார் எனத் தெரிய வருகின்றது. ஆனந்த தேரர் எனும் கௌதம புத்தரின் சமகால தேரரின் பிடிவாதமான போக்கினால் பெண்களுக்கு துறவு வாழ்க்கைக்கான அனுமதி வழங்கப்பட்டதாக 'புதுபணவில' குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், பிக்குணிகள் சாசனம் நிறுவப்படின் 2500 ஆண்டுகள் மட்டுமே பௌத்தம் நிலைக்கும் என சூலவம்சவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் மீகொட பஞ்ஞாலோக்க தேரர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"... பிக்குணிகள் சாசனத்தை நிறுவுவதன் மூலம் எதிர்காலத்தில் பாரிய துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என கௌதம புத்தர் முன்னரே அறிந்திருந்தார். ஒரு முறை பிக்குகள், பிக்குணிகள் பாதையில் செல்லும் போது அசுத்த நீரை வீசியெறிந்தனர். பிக்குணிகளும் பிக்குகளுக்கு அவ்வாறே அசுத்த நீரை வீசியடித்து மோசமாக நடந்து கொண்டனர். சில பிக்குணிகள் உதடுகளை நிறப்படுத்தத் துணிந்தனர். விழிகளில் இறுதியில் சித்திரம் வரைந்தனர். ஜன்னலூடாக பராக்கு பார்த்தல், உடலின் அங்கங்களை வெளிக்காட்டல், விற்பனை நிலையங்களை நடாத்தல் போன்ற மோசமான பல காரியங்களில் ஈடுபட்டனர். ஒரு சில பிக்குகள் பிக்குணிகளுடன் நீண்ட நேரத்தை செலவழித்தனர். இது பற்றி வயது முதிர்ந்த பிக்குகள் அறிவுரைவினை மீளக் கொண்டு வருபவர்கள் இவற்றை மீள மீள வாசித்தறிதல் நன்கு" என்கின்றார் இத்தேரர்.

மேலும், பிக்குகளுக்கான ஒழுக்கநீதிகள் 227. அதேவேளை பிக்குணிகள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நீதிகள் 304 என சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிக்குணிகளை துறவு வாழ்க்கையில் பலப்படுத்தவே இவ்வொழுக்க நீதிகள் விதிக்கப்பட்டுள்ளன என மத நூல்கள் தெரிவிக்கின்றன.

அஸ்கிரி, மல்வத்து, அமரபுர நிக்காய தேரர்கள் இந்த பிக்குணிகள் சாசனத்தை ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

*1) பரந்தளவில் நிலவி வரும் கோவாக பிக்குணிகள் கலை-முறை உலகத்தில் எந்தவொரு பிற தேரவாத பௌத்த நாட்டிலும் இல்லை. அவ்வாறான போது பெண்களுக்கு தேரவாத தர்ம சீலத்தில் துறவு வழங்க முடியாது.*

*2) அனுராதபுர யுகத்தின் பின் கலைந்து போன இலங்கையின் பிக்குணிகள் சாசனத்தை மீண்டும் நிறுவுவதற்கான முயற்சி அரச நிர்வாக, நிர்வாகிகள் அல்லது தேரர்கள் என்போரினால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.*

*3) எமது மகா தேரர்களுக்கிடையில் இவ்விடயம் பற்றி வெவ்வேறுபட்ட ரீதியிலான கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதால் தேரர்களின் ஐக்கியத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.*

இதன்படி இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிக்குணிகள் சாசனத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் அறியத் தருகிறோம். என அவர்கள் பத்திரிகை மூலம் அறிவித்தல் விடுத்து தமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தனர்.

இந்தப் பிக்குணிகள் சாசனம் தொடர்பான விவாதங்கள் இவ்வாறிருக்க, தசசில் அம்மையார் சிலரிடம் கருத்துக்கள் கேட்ட போது, பெரும்பாலானோரின் அபிப்பிராயம் தேரவாத பிக்குணிகள் சாசனத்தை மட்டுமே நாம் ஏற்றுக் கொள்வோம் என்பதாகும்.



கோட்டேயைச் சேர்ந்த ஜீவ எனும் தசசில் அம்மையார், "தேரவாத சம்பிரதாயத்தின்படி அல்லாத பிக்குணிகள் சாசனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. மகாயானா பௌத்த சம்பிரதாயம் நிலவும் சீனா, கொரியா, தாய்வான் போன்ற நாட்டைச் சேர்ந்த பிக்குணிகள் லௌகீக துறவு வாழ்க்கை வாழ்பவர்கள். அவ்வாறான சம்பிரதாய பிக்குணிகள் சாசனம் இந்நாட்டுக்கு பொருந்தாது" என்கின்றார்.

புரட்சிகர முறையில் பிக்குணிகள் சாசனத்தின் மூலம்பிக்குணிகள் அந்தஸ்த்தை பெற்றுக்கொண்ட ஒருதொட்ட தமயந்தி பிக்குணி" தேர-வாத முறையற்ற மகாயர்னா முறைக்கு பிக்குணிகள் சாசனத்தை ஏற்படுத்தியுள்ளது பாரிய குற்றச்சாட்டாக உள்ளது. புத்தரின் யுகத்தில் இவ்வாறான பேதங்கள் சாசனத்தில் காணப்படவில்லை. இவையெல்லாம் பிற்பட்ட காலங்களில் ஏற்பட்டவை" என்றார்.

பிக்குணிகள் சாசனத்தை பெற்றுக்கொள்ளாத தசசில் அம்மையார்கள் கூறியபோது அவர்களை எதிர்த்தமையால் புத்தசாசனத்திற்கு இழிவு ஏற்பட்டது. பிக்குணிகள் துற-

**"... பிக்குணிகள் சாசனத்தை நிறுவுவதன் மூலம் எதிர்காலத்தில் பாரிய துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என கௌதம புத்தர் முன்னரே அறிந்திருந்தார். ஒரு முறை பிக்குகள், பிக்குணிகள் பாதையில் செல்லும் போது அசுத்த நீரை வீசியெறிந்தனர். பிக்குணிகளும் பிக்குகளுக்கு அவ்வாறே அசுத்த நீரை வீசியடித்து மோசமாக நடந்து கொண்டனர்.**



ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஒழுங்கு செய்ய வேண்டும். அரசுக்கும், தேரர்களுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பல தரப்பிலிருந்து வந்ததாக ஜீவ அம்மையார் தெரிவித்தார்.

மதம் என்ற நிறுவனம் பெண்களுக்கு வழங்கியுள்ள, விதித்துள்ள அந்தஸ்து, நிலை பற்றி மாற்றுக் கருத்துக்கள் நிலவ முடியாது. இவ்விடயத்தை பெண்ணியக் கோணத்தில் நோக்குபவர்கள் இதை துறவு வாழ்க்கையில் ஈடுபடும் பெண்களுக்கான உரிமை என்றே கருதுகின்றனர். பெண்ணிய கருத்துக்கள், நோக்குகள் ஊடுருவாத துறை என்று ஒன்று இல்லாத இக்காலகட்டத்தில், மதங்களும் விதிவிலக்கில்லை என்பது பலரது அபிப்பிராயம்.

"பெண்கள் என்போர் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். எனினும், இக்காலகட்டத்தில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு வீடுகளிலேயே கிடைக்காத போது, விகாரைகளிலும், ஆராமைகளிலும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாதென்று சில பிக்குகள் நேர்மையாக அபிப்பிராயப்படுகின்ற போதும் , பெண் பிக்குகளுக்கு உரிய உரிமையையும் சமத்துவத்தையும் வழங்க மறுக்கும் ஆணாதிக்கப் போக்கே இங்கு மேலோங்கியிருப்பது வெளிப்படை.

இச்சாசனம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு நிகழ்வு மட்டுமே. இது பெண்பிக்குணிகளுக்கு எல்லா விதத்திலும் சமமான அந்தஸ்தைத் தந்து விடப் போவதில்லை என்றாலும் இது அதற்கான ஒரு ஆரம்பம் என்பதில் ஐயமில்லை" என்கிறார் ஒரு பெண்ணிலைவாதி. □

# மலையகம் மீதான ஆக்கிரமிப்புகளும், வன்முறைகளும்!

-கௌசீகன்

மலையகத் தமிழர்களுக் கெதிராக அதிகரித்துவரும் இனவெறி தாக்குதல்களும் பிரச்சாரமும்

'இந்நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றவர்கள் மலையகத் தமிழர்கள்' என்பதை இனித் துணிந்து கூறமுடியும். ஏனெனில் அண்மையில் துரைமார் சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய நிதி திட்டமிடல் பிரதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நாட்டுக்கு பல வழிகளில் வருமானம் வருகிறது தான். ஆனால், அது நிலையில்லாதது பெருந்தோட்-டதுறை வருமானம் மட்டுமே. நிரந்தரமானது எனவே அதனை பாதுகாக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இனியென்ன, வாழ்வுரிமை மறுக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியடைந்து விட்டதாக அங்கே ஒப்பாரி வைப்பவர்கள் யார்? எமக்கு என்ன தான கிடைக்கவில்லை? பிரஜாவுரிமை, வாக்குரிமை, வேலை-வாய்ப்பு, பாராளுமன்ற பிரதிநிதித்து-வம், அமைச்சர் பதவிகள், உள்ளகக் கட்டமைப்பு அமைச்சு என எல்லாம் கிடைத்தாகி விட்டது. மலையக மக்கள் ஐக்கியமாகி இ.தொ. காவைப் பலப்படுத்த வேண்டுமென கோரும் தொண்டமானின் ஆதரவுடன் மலையக மக்கள் வாழ்விடங்களை அபகரிக்கவும், படிப்படியாக அடித்து விரட்டவும், எதிர்ப்போரை சிறைப்-படுத்தவும் கடந்த 17 ஆண்டுகால ஐ.தே.கவின் ஆட்சியினரும் 5 ஆண்டுகால பொதுஜன முன்ன-ணியினரும் எடுத்து வரும் எத்தனங்-கள் எல்லாம் என்ன பெரிய விடயங்கள்?அவற்றைக் கண்டும் காணாமல் விட்டு விடுவோம்.

1998 செப்டம்பர் மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் இனவெறித் தாக்குதலுக்குள்ளான 4000 தமிழ் மக்கள் இன்றும் நிர்க்கதியாக வீதி மக்களாகியிருக்கிறார்கள், முறையான நிவாரணமோ புனரமைப்பு வசதிகளோ பாதுகாப்போ வழங்கப்படாத நிலை-யில் நடுத்தெருவில் விடப்பட்டி-ருக்கிறார்கள். இதன் பின்னணியில் ஆளும் கட்சியின் அமைச்சரான பவித்ரா வன்னியாரச்சி இருந்த-தாகவும், குண்டர்கள் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் எனவும் பரவலான குற்றம் சாட்டப்பட்டுள்ளபோதும் அவர்களை எவரும் விசாரணைக்காகக் கூட சீண்டவில்லை. இதனைப் புலனாய்வு செய்ய அமைக்கப்பட்ட 5 பொலிஸ் கோஷ்டிகளுக்கும் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லையாம். தமிழ் இளைஞர்களைத் தவிர.... சர்வவல்லமை பொருந்திய இராணுவ, பொலிஸ், புலனாய்வுப் பிரிவுகள் தமிழர் தடுக்கி விழுந்தாலே புலி புலியென கிலிகொண்டு விரட்டும் போது இந்த அற்புதம் எப்படி நடந்தது?

ஆனாலும் இவை என்ன பெரிய விடயங்கள் விட்டு விடுவோம். இதற்கெதிராக திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கவோ, விசாரணை நடத்தவோ, தீவிரத் புனரமைப்பு வேலைகளை தொடக்கவோ நாம் எவரும் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கப் போவதில்லை. ஏனென்றால், எங்களுக்குப் பாராளுமன்றப் பதவி-களும், அமைச்சர் பதவியும் மிகவும் முக்கியம். மக்கள் அல்லவே.

கடந்த மாதம் அமைச்சர் தொண்டமானின் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்த்து ஐ.தே.கட்சியும் வாக்களித்தது. இதை எப்படி விட்டுவிடுவது இது எமது இருப்புக்கு வந்த சவால் அல்லவா? உடனே தோட்டக் கட்டமைப்பு அமைச்சின் கொந்தராத்துக்காரர்களும். இ.தொ.கா அமைப்பாளர்களுமான மக்களைத் திரட்டி ஒரு போராட்டத்தையே நடாத்தி விட்டோம். உண்மையில் ஐ.தே. கட்சியின் இனவெறிக்கு எதிராக மட்டுமல்ல ஆளும் பொ. ஐ. மூவின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்-பினர்களுக்கும் எதிரானதாக ஆற்றுப்படுத்தப்படடிருக்க வேண்டிய போராட்டம் இது. அதற்கு மேலாக தம்மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டு செயல்படுவதாக தம்பட்டமடிக்கும் தொண்டமான் அவர்கள் தமது அமைச்சு மீதான குழுநிலை விவாதத்துக்கு சமூகமளிக்காத தமது பேரனும், இ.தொ. கா. பொதுச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமான் உட்பட ஆறு உறுப்பினர்களை இராஜினாமாச் செய்யக' கோரியிருக்க வேண்டும். தாமும் இராஜினாமாச் செய்து ஆளும் கட்சியையும், எதிர்க்கட்சியையும் பாடம் படிக்கச் செய்துவிட்டு மக்களிடம் வந்திருக்க வேண்டும் என்றெல்லாம் நீங்கள் விமர்சனங்கள் செய்யக்கூடும். ஆனால் அதை எல்லாம் எமது தலைவருக்குச் செய்ய முடியுமா என்ன? மந்திரிப்பதவி இல்லாமல் மலையகத்தில் ஒரு தலைவர் இருக்க முடியுமா?

நயவஞ்சகமான எதிர்ப்புப் போராட்டம் மூலம் மக்களையும் ஏமாற்றி தமது முன்னாள் எஜமானான ஐ. தே. கட்சிக்கு 1977லும் 83லும், 84லும், காவடியெடுத்ததை மறந்து-விட்டு தேசிய இனப்பிரச்சினையைத் தன்னால் மட்டுமே தீர்க்க முடியும்' என 17 ஆண்டுகள் வீண் தம்பட்டம் அடித்துவிட்டு ஒரே மூச்சில் அவர்க-ளை மட்டும் குற்றம் சாட்டி என்ன பயன்?

பசறை வேலை நிறுத்தம் தொழிலாளர்களின் வீராவேசமிக்க போர்க்குணத்தை வெளிக்காட்டிய-போது அதற்கு ஆக்கபூர்வமான தலைமையையோ வழிகாட்டியையோ வழங்காததோடு நிர்வாகத்தையும், அதிகாரவர்க்கத்தையும் காத்து நின்ற மலையகத் தலைமைகள் கேவலமான முறையில் தோட்ட நிர்வாகத்துடனும் பொலிசாருடனும் கூட்டுச் சதிசெய்து போராட்டத்தை முறியடித்ததோடு, 24பேர் கைது செய்யவும்படக் காரணமாகினர்.

உண்மையில், வேவல்வத்தை வன்முறைக்கு எதிராக மலையகம் தழுவிய போராட்டம் குறித்த வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதும், பசறை வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக மலையகம் தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கக் கோரிய போதும் அது அந்தந்த தொழிற்சங்கங்களின் முடிவு. பேரணி அதுபற்றி முடி-வெடுக்காது என்'று தட்டிக்கழித்து பாதிக்கப்பட்டோரை பாதுகாக்கத் தவறியவர்கள் தொண்ட-மான் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்-டுப் பிரச்சினையில் திடீரென ஒன்றுபட்டு ஒரே நாளில் போராளிகள் ஆகிவிட்டனர். பெரும்பான்மையான மக்களுக்கு போராட்டம் பற்றிய உண்மை நிலை எதுவும் தெரியாது. தமது தோட்டக் கமிட்டி தலைவர்கள், மாவட்ட தலைவர்கள், பிரதேச அமைப்பாளர்கள் கூறிய பொய்யை-யும், புரட்டையும் நம்பி வீதியில் இறங்கினார்கள். 1998 பெப்ரவரி வேலை நிறுத்த போராட்ட ஊர்வ-லத்தை தாக்கிய பொலிசார் இம்முறை பாதுகாப்புக் கொடுத்தார்கள். இரத்தினபுரி வன்முறைகளை படம் பிடித்துக் காட்டாத அரச தொலைக்-காட்சியும், வானொலியும் இந்த போராட்டத்தை மட்டும் மணிக்கணக்-கில் காட்டினவே எப்படி?


பசறையில் தொழிலாளரை கைது செய்த பொலிஸ் இந்த ஆர்ப்பாட்டங்களை அனுமதித்தது எவ்வாறு?

ஆளும் கட்சி. அமைச்சர்களும், எம்.பிக்களும் தாமே பாராளுமன்றம் வராமல் மலையக மக்கள் பாலும் தேனும் ஒழுக பேசியது எவ்வாறு?

ஆம், மலையகத் தமிழருக்கு எதிரான இனவெறி தாக்குதல்களையும், ஆக்கிரமிப்பையும், அடக்குமுறைகளையும் மூடி மறைக்க அரசுக்கு இவர்கள் முட்டுக் கொடுப்-பார்கள். அதற்கான லஞ்சமாக தோட்ட கட்டமைப்பு அமைச்சின் நிதி-யும் கிடைக்குமாம். அதனைத் தொண்டமான் தனது ஏகபத்த கோடிகளுக்கு பிச்சையிடுவாராம். மலையக தமிழரின் பிரச்சினை தீர்ந்துபோகும்... என்ன அற்புதமான கனவு இது. அமைச்சர் தொண்டமான் கடந்தாண்டு ஞானப்பால் குடித்தவர் போல இரண்டே தடவை பேசினார். இந்திய தூதரக விருந்துபசாரத்தில் 'இந்திய மத்திய மாநில அரசுகள் மலையகத் தமிழரை அரசியல் பகடைக்காய்களாகவே பயன்-படுத்தியுள்ளனர். தம் பிராந்திய பூகோள நலன்களுக்கு உகந்ததாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டவை என முழங்கினார்.

வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தோற்-கடிக்கப்பட்ட பாராளுமன்ற-த்தில் தன்னிலை விளக்கம் தரு-கையில் 'இருபெ-ரும் கட்சிகளுக்கும் கூறுகிறேன். மலையக மக்களின் நலன்களுக்கு எதிராக செயல்பட்டு அரசியல் லாபம் தேட முயலாதீர்கள் என எச்சரிக்கிறேன்' என முழங்கினார்.

ஐயா, இதை சொன்னதற்காகதான், கேட்டதற்காகத்தான் உங்களைப் போலவே மலைநாடு அமைக்கப் போவதாக குற்றம் சாட்டி நூற்றுக்-கணக்கான மலையக இளைஞர்கள் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களை விடுவிக்குமாறு உங்கள் அரசாங்கத்தைக் கோரினால் என்ன? தமது உரிமைகள் பற்றி கனவு கண்டதே அதிகம் என இளைஞர்கள் சிறையில்



## பொதுஜன முன்னணி அரசாங்கம் பதவியேற்றது முதல் இதுவரை சூறையாடப்பட்ட தோட்டக் காணிகள்

| தோட்டத்தின் பெயர் | மாவட்டம் | பரப் (ஏக்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. நாகஸ்தன | கண்டி | 250 | கைத்தொழில் பேட்டை தமிழ்த் தொழிலாளர்கள் |
| 2. ஆதர்பீல்ட் | கொழும்பு | 360 | 160 குடும்பங்கள் விரட்டப்பட்டன |
| 3. கந்தலான | கண்டி | 980 | விரட்டப்பட்டன |
| 4. நாலந்தா | மாத்தளை | 100 | விரட்டப்பட்டன |
| 5. ரத்வத்தை | மாத்தளை | 700 | குடியேற்றம் |
| 6. ஹபுஸ்பிட்டிய | மாத்தளை | 100 | குடியேற்றம் |
| 7. கரோலினா | நுவரெலியா | | குடியேற்றம் |
| 8. இறக்குவானை | இரத்தினபுரி | 600 | குடும்பங்கள் குடியேற்றம் |
| 9. களுத்துறை | | | 3000 ஏக்கர் பகிர நடவடிக்கை |
| 10. மகியாவ | கண்டி | | நகரசுத்தி தொழிலாளர்களின் குடியிருப்பை பறிக்க முயற்சி |
| 11. சிரான் அல்பியன் | பதுளை | 23 | தொழில்பேட்டை கிராமம் |
| 12. மத்துகம | களுத்துறை | | அத்துமீறிய குடியேற்றம் |
| 13. ஷ்ஹலியகொடை | இரத்தினபுரி | | 200 பேருக்கு குடியேற்றக் காணி |
| 14. லபுகலை | நுவரெலியா | | மயான காணி ஆக்கிரமிப்பு |
| 15. கலபொட | இரத்தினபுரி | | அத்துமீறிய குடியேற்றம் |
| 16. கோணடிக்கா | கண்டி | 25 | மீலாத் மாதிரிக் கிராமம் குடியேற்றம் |
| 17. வேவல்வத்தை | | | தனியார் தோட்டம் விற்பனை |
| 18. மேல் கொத்மலை நீர்த்தேக்கம் | | | பல ஆயிரம் குடும்பம் புலம்பெயர்வும், தலவாக்கொலை பாடசாலை, நகர், சென் கிளையர் டெவன் நீர்வீழ்ச்சி மூடவும், தமிழர் பிரதேசம் துண்டாடவும் திட்டம். |
| 19. கெடகொலை | | 42 | 560 ஏக்கர் தோட்டக்காணியில் குடியேற்றம் |
| 20. எல்பிட்டிய | காலி | 103 | |
| 21. பெந்தோட்டை | " | 56 | |
| 22. மத்தியமாகாணம் | நுவரெலியா கண்டி மாத்தளை | 18,613 + 12,500 | 1994முதல் 97 வரை 18,613 ஏக்கர் காணியில் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. 1997இல் 1000 ஏக்கர் காணியில் குடியேற்றம். எதிர்காலத்தில் 500 எக்டேர் பகிர நடவடிக்கை (விரகேசரி 97.ஜன.25) |
| 23. ஹப்புத்தளை | பதுளை | | 50 ஆண்டுகள் தமிழ்த் தொழிலாளர் பயிரிட்ட காணியை கைவிட தோட்ட நிர்வாகம் பணிப்பு. |
| 24. இரத்தொட்டமலை | மாத்தளை | | காணிப் பகிர்தல் பாரபட்சம். தமிழ் தொழிலாளருக்கு 40 அடி நிலம் மட்டும். |
| 25. நேஸ்பி | நுவரெலியா | | முஸ்லிம் பாடசாலை காணி சுவீகரிப்பு |
| 26. ஸ்கிராப் | நுவரெலியா | | பௌத்த ஆலயத்துக்கு காணி சுவீகரிப்பு. |
| 27. லபுக்கலை | நுவரெலியா | | தோட்டமயான காணியை ஆக்கிரமித்த பெரும்பான்மை இனத்தவர் தமிழர் மீது தாக்குதல் |
| 28. வட்டவளை | நுவரெலியா | | சட்டவிரோத குடியேற்றம் |
| 29. பொகவந்தலாவை | நுவரெலியா | | சிறிபுர அரசகாணி அத்துமீறல் |
| 30. தெரேசியா | வரெலியா | | காணியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவருக்கு 50 வருட குத்தகையால் இத்தினக் காணி |
| 31. தரவனை - அட்டன் | நுவரெலியா | | பெரும்பான்மை இனத்தவர்க்கு பிரித்து கொடுக்கப்பட்ட காணியில் 112 தமிழ்க் குடும்பங்களை வெளியேற உத்தரவு, உறுதி வழங்க மறுப்பு. |
| 32. மாணிக்கவத்தை விடமைப்பு திட்டம் | நுவரெலியா | | 28 தமிழ்க் குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்க மறுத்து வெளியேற உத்தரவு. |
| 33. மகாவலவத்தை குடியேற்றம் | இரத்தினபுரி | | 400 தமிழ்க் குடும்பத்தில் 20 முஸ்லிம் குடும்பத்திற்கும் குடிநீர்வழங்க மறுப்பு. |
| 34. பெல்மதுளை பாத்தகட தவி | இரத்தினபுரி | | இரண்டு தடவை ஒதுக்கப்பட்ட காணி பெரும்பான்மையோர் அத்துமீறி குடியேற்றம். |
| 35. உடப்பொல தெனியாய | கேகாலை | | தொழிலாளர் குடியிருப்புக்கு ஒதுக்கப்பட்ட காணியில் பெரும்பான்மையினர் ஆக்கிரமிப்பு. |

நன்றி - நூலகத்திட்டம்





வாடும்போது, மலையகத் தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பேரினவாத பிரச்சாரப் பீரங்கிகளை முடக்குமாறு உங்கள் சர்வவல்லமை பொருந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தால் என்ன?

அமைச்சர் தர்மசிறி விக்ரமநாயக்க ஒரு கனவு கண்டார். நுவரெலியாவில் சீதாபிரட்டியின் வாழ்விடத்தை புனித பூமியாக்கி கனவு நகர் கிறிஸ்த்து வருடாந்தம் 10 இலட்சம் உல்லாசப் பயணிகளை கவரும் அற்புதமான கனவு அது. பௌத்த பிக்குகளும், சிங்கள வீர விதான அமைப்பும் கொழும்பிலும், கண்டியிலும் கொதித்தெழுந்தார்கள். தொண்டமான் இந்தியத் தமிழருக்கு இராம இராச்சியம் அமைக்கப் போகிறார். மலைநாடு உருவாக்கப் போகிறார் என எக்காளமிட்டனர். உடனே நுவரெலியாவில் மாநாடு கூட்டிய அமைச்சர் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்து விட்டார்.

இக்கால கட்டத்தில் தேசபிரேமி பிக்குகள் சங்கம், பெங்கமுவே நாலக்க, சாந்திபுர விகாராதிபதி, மெதகம சோபித்த தேரோ, கண்டி பிக்குகள் சங்கம், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், நளின் த சில்வா, தேசிய ஒருமைப்பாட்டு அமைப்பு, கண்டி விதாரன அமைப்பு, நுவரெலியா விதாரன அமைப்பு என்பன கலந்து கொண்டு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்களாம். அமைச்சர் உடனே தனது திட்டத்தை மாற்றி விட்டார்.

இப்போதும் இ.தொ.காவும் அமைச்சர் தொண்டமானும் தமது சாணக்கியத்தைப் பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டும். கண்டி பள்ளேகல தோட்டம் மூடப்பட்டு கைத்தொழில் பேட்டை அமைக்கவும், அவிசாவளை சீத்தாவக்க கைத்தொழில் பேட்டை அமைக்கவும் நாலந்த எல்லாவல கைத்தொழில் பேட்டை அமைக்கவும், மலையகத்தை அரசுக்குப் பலிக்கடாவாக்கியதற்கும் பிரேமதாசவின் புடவை தொழில்பேட்டைகளுக்காக தோட்டங்களில் பல ஆயிரம் ஏக்கர் காணிகளை எடுக்கவும் மாவலி திட்டத்திப்குதியில் இருந்து விரட்டவும் துணை போனார்களே அது எவ்வகை சாணக்கியம்? இந்துக் கோவில்களையும், இஸ்லாமியப் பள்ளிகளையும் கட்டுவதை எதிர்ப்பதற்கான பௌத்த சிங்கள இனவெறி அமைப்புகளுக்கு பணிந்துபோகும் அரசு ஒரு மில்லியன் மலையகத் தமிழரின் போர்க்குணத்திற்கு பணியமறுப்பது ஏன்?

மடகும்புரவில், மரேயில், முழு மலையகத்திலும் தமிழ் இளைஞர்களை, தொழிலாளர்களை காட்டிக்கொடுத்ததன் விளைவு அல்லவா இது?

இவ் அரசாங்கம் பதவியேற்றது முதல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிக்கையிடப்பட்ட பத்திரிகைச் செய்திகளின்படி கிட்டத்தட்ட 50 ஆயிரம் ஏக்கர் காணி தோட்டங்களில் இருந்து சுவீகரிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் மட்டும் 23613 ஏக்கர் காணி திட்டமிட்ட குடியேற்றங்களுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன அல்லது பகிரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை நுவரெலியா மாவட்டம் நான்கு தமிழ்ப் பிரதேச செயலாளர்களையும், நான்கு சிங்களப் பிரதேச செயலாளர்களையும் கொண்டியங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் கிராம சேவகர் நியமனங்களையும், பிரதேச செயலாளர், பிறப்பு, இறப்புப் பதிவாளர் நியமனங்களையும் எதிர்த்து பிக்குகள் ஒன்று திரண்டுள்ளனர். தமிழ் கிராம சேவகர்கள் பிறப்பு, இறப்பு பதிவாளர் நியமனம் தொடர்பாக கடந்த 20 வருட பத்திரிகை அறிக்கைகளையும், வாய்வீச்சுக்களையும், சிலவேளை விண்ணப்பம் கோரல்களையும் கேட்டும், கண்டும் வேண்டாம் என்றாகி விட்டது. இனி மலையக இளைஞர்களுக்கு வாக்குறுதிகள் தேவையில்லை. நடைமுறைகளே தேவை.

மலையகத் தமிழர்களுக்கெதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் விட்டுவிட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டு ஆளும் வர்க்க, அதிகாரவர்க்க சக்திகளின் ஏக ஆதரவுடன் நடத்தப்பட்டு வருகின்றன. கிரிக்கெட் போட்டியில் ஏற்பட்ட தகறாறு காரணமாக மஸ்கெலியாவில் பெரும்பான்மை இளைஞர்கள் பஜனைக் கோஷ்டியொன்றை ஆலயத்தில் புகுந்து துரத்தியிருக்கின்றனர். படுகாயமுற்ற இருவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது நடந்தது 1.1.1999இல். ஆக புத்தாண்டே பேரிடியாகத்தான் ஆரம்பமாகியிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து 2.1.1999 நோர்வூட் நகரில் நடந்த ஒரு சம்பவத்தில் நோர்வூட் லேக்ஹவுஸ், வீரகேசரி, பத்திரிகை ஏஜென்டும், கிராம செய்தியாளரும், இராணுவத்தில் இருந்து தப்பியோடி வந்தவரும், தமிழ் இளைஞர்களுக்கு புலிப்பட்டம் சூட்டி காட்டிக் கொடுப்பவருமான ரஞ்சித் என்பவர் அயரபித் தோட்டத் தொழிலாளியான கந்தன் கிருஷ்ணன் என்பரை எவ்விதக் காரணமுமின்றி திட்டமிட்டு பைசிக்கிள் செயினால் தாக்கி படுகாயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து உடனடியாக நோர்வூட், மஸ்கெலியா, பொகவந்தலாவா பொலிசார் விரைந்து ரஞ்சித்தின் கடைக்கு காவல் போட்டுள்ளனர். அம்பகமுவ பிரதேச சபைத் தலைவர் ரவி, ஜெகதீஸ்வரன், காதர்பாய் ஆகியோர் ஆத்திரமுற்ற தொழிலாளர்களை ஆசுவாசப்படுத்தி சமாதானப்படுத்த முயன்றுள்ளனர்.

எனினும் ஆத்தரமுற்ற தொழிலாளர்கள் கல்லெறிந்து தாக்கியதில் ரஞ்சித் காயமுற்றபோது நோர்வூட் வர்த்தகர் சங்கத் தலைவர் கோபியின் வாகனத்தில் கிளங்கள் வைத்தியசாலைக்கு வாகனத்தில் அனுப்பியதோடு ரஞ்சித்தால் தாக்கப்பட்ட கந்தன் கிருஷ்ணனை பொலிஸ் நிலையத்தில் கைது செய்யவும் விசாரிக்கவும், முயன்றுள்ளார். இவ்வேளையில் அங்குவந்த முன்னாள் பிரதேசசபை தலைவர் ஜெகதீஸ்வரன் பொறுப்பதிகாரியுடன் வாக்குவாதப்பட்டதன் விளைவாக மஸ்கெலியா வைத்தியசாலையில் இத்தொழிலாளி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு முன்னர் கந்தன் கிருஷ்ணன் வீட்டை நோர்வூட் பொலிசார் பலதடவை சோதனையிட்டுள்ளதாகவும், இதன் பின்னணியில் ரஞ்சித்தே செயல்பட்டுள்ளதாகவும் அயரபித் தோட்டத் தொழிலாளர்கள் கூறுகின்றனர். மேலும் டிக்கோயா தேவாலயம் ஒன்றின் புதைகுழியில் ஆயுதம் கைப்பற்றப்பட்டதாக சிங்களப் பத்திரிகைகளில் புரளி கிளப்பியதும், பல தடவை தமிழ்த் தொழிலாளர்களை நடுவீதியில் வைத்து தாக்கியதும் இதே ரஞ்சித் என்ற போதும் அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பியூஜி கலர் பிலிம் ரோல், வீடியோ கெசட் புதினத் தாள் விற்பனையில் ஈடுபடும் தமிழ் வர்த்தகர்களை பல தடவை இவன் மிரட்டியுள்ள போதும் பொலிஸ் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்.

இனவாதப் பத்திரிகைகள் செய்தி சேவைகள் அரசாங்க தரப்பு ஆதரவு பொலிஸ், உளவுத்துறையின் ஆதரவோடு திட்டமிட்ட வன்முறையைத் துாண்டப் பலதடவை முயன்ற இவனோடு சமரசம் செய்து கொள்ளுமாறு இப்பகுதி அரசியல்வாதிகள், தொழிலாளர்களை நிர்ப்பந்திப்பதாகத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க 3.1.1999 அன்று 12 மணிக்கு ஆறுமுகம் தொண்டமானும் பொலிஸ் பொறுப்பதிகாரியும் நோர்வூட் இதொ.கா அலுவலகத்தில் சமரச சரசமாடியுள்ளனர்.

இந்த வன்முறை வெறியாட்டங்களுக்கு எதிராகவும் மலையக மக்களுக்கு எதிரான இனவெறிக்கு எதிராகவும் மலையக மக்கள் திரண்டெழாது போனால் 1948இன் இருண்ட நிகழ்வுகள் மீண்டும் உயிர்த்தெழக் கூடும். □

**மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை அரச பெருந்தோட்டக் கூட்டுதாபனம் என்பனவற்றில் 45 தோட்டங்களை மூடிவிட 22.9.1995 முதல் அரசு தீர்மானித்து இதில் 2,75,000 தொழிலாளர் வாழ்வு நிர்க்கதியாகும்.**

### மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை

**நாவலப்பிட்டி**
1. மல்கொல்ல
2. நாகஸ்தன்னை
3. டைஸ்பனே
4. மொன்டேகிறிஸ்ட்
5. கோபத்தன்ன
6. கலபொட
7. போவில்லை

**கலகா**
1. புப்புரஸ்ஸ
2. நூல்கொண்டலா
3. லேவல்லோன்
4. கிரேவெளி
5. கலகா
6. தெல்தொட்ட
7. போபிட்டிய
8. அம்பலமான

**திகன**
1. பல கொடுவ

**பட்டியாந்தோட்டை**
1. கந்தலோயா

**பசறை**
1. மொனறாகலை

**பெல்லேகெட்டுவ**
1. நாகவில்ல

**நிவித்திகல**
1. கலவான

**அட்டன்**
மவுன்ட்ஜீன்
கோறாவாகொட்ட
1. ரகுதுங்கொட
2. ஹோக்வூட்
3. ஹோபே

**கண்டி**
1. ஹந்தானை

### அரச பெருந்தோட்டக் கூட்டுதாபனம்

**பண்விலை**
1. வட்டவலை
2. லைபனொன்
3. மாத்தளை
4. கல்பிஹல்லை
5. கலாபொக்கை
6. அலகொல்லை
7. கோமரை

**மாத்தளை**
1. கம்மடுவம்
2. ஒப்பலாகலை
3. தென்தந்தை
4. நிக்கலோயா
5. மிட்லண்ட்
6. உன்னாசிகிரி
7. கொடகங்கை

**திகனை**
1. ரங்கல்லை
2. வைத்தலாவை
3. பூட்சைட்
4. நெரைபாக்
5. வூட்சைட்

**ஹொரனை**
1. ஹேகல்லை

## சமீப காலத்தில் மலையக தமிழருக்கு எதிராக நடத்தப்பட்டுள்ள வன்முறைகள்

1. பன்விலைத் தோட்ட ... குடி மீதான தாக்குதல்
2. ஹேவாஹெட்டை தமிழர் மீதான தாக்குதல்
3. றைபோரஸ்ட் தமிழ்க் கடைகள் தாக்குதல்
4. மாட்டுவாகலை தோட்டத்தொழிலாளர் மீதான தாக்குதல்
5. பூக்காடு தோட்டத்தொழிலாளர் மீதான தாக்குதல்
6. கால எல்பிட்டிய நாகஸ்தன தோட்டத்தொழிலாளர் மீதான தாக்குதல்
7. வெஞ்சர் தோட்ட தொழிலாளர் மீதான பொலிஸ் தாக்குதல்
8. தென் மதுரைத் தோட்டத் தொழிலாளர்கள் மீதான பொலிஸ் தாக்குதல்
9. அட்டன் தொழிலாளர் ஊர்வலம் மீதான தாக்குதல்
10. மாத்தளை தமிழ்க் கடைகள் மீதான தாக்குதல்
11. இரத்தினபுரி தொழிலாளர் மீதான தாக்குதல்
12. தலவாக்கொலை நகர தமிழ் வர்த்தகர் மீதான தாக்குதல்
13. மஸ்கெலியா நகர பஜனைகுடி மீதான தாக்குதல்
14. நோர்வூட் அப்பாவித் தோட்ட தொழிலாளர் மீதான தாக்குதல்.

நன்றி - நூலகத்திட்டம்



# "நாம் ஆயுதம் ஏந்தும் தீவிரவாதத்தை நம்பினோம்"

## -முன்னாள் நக்சலைட் அமைப்பின் பெண் உறுப்பினரான அஜிதா

அறுபதுகளில் இந்தியா முழுவதுமே ஒரு வித திகிலோடும், பரபரப்போடும் உச்சரிக்கப்பட்ட பெயர் அஜிதா!

'மூன்று ஜமீன்தார்களைக் கொலை செய்து வாசல் கதவில் தலைகளை மாட்டிவிட்டது... பொலிஸ் ஸ்டேசனையே தாக்கி ஆயுதங்களைப் பறிக்க முயன்றது' என்று இந்த இளம் பெண்ணின் மேல் அன்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள்!

காடுகளிலும், மலைகளிலும் மிருகங்களுக்கு மத்தியிலும் ஒளிந்து வாழ்ந்தது... பொலிஸிடம் பிடிபட்டு ஏழரை வருடங்கள் ஜெயில் தண்டனை அனுபவித்தது என்று இவர் தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட அனுபவங்கள் ஏராளம்!

'பஞ்சாக்னி' என்ற பேரில் இவரது வாழ்க்கை வரலாறு படமாக்கப்பட்டு கேரள மக்கள் அதை திகில் அகலாமல் பார்த்து பிரமித்தனர். (தமிழில் கலைஞரின் கதை வசனத்தில் 'நியாயத் தராசு' என்ற பெயரிலும் அது படமாக வந்தது.)

இன்று பல மாநிலங்களில் இருக்கும் பலவகையான நக்ஸலைட் இயக்கங்களின் முன்னோடியாக இருந்தது கேரள நக்ஸலைட் இயக்கம். அது அங்கே ஆரம்பித்த காலத்திலிருந்தே ஒரு முக்கியமான சக்தியாக இருந்தது அஜிதா என்ற இந்தப் பெண் சூறாவளி!

கோழிக்கோட்டில் ஸ்ரீதேவி என்ற பெண், 'ஐஸ்கிரீம் பார்லர்' போர்வையில் பெரிய மனிதர்களுக்கு அப்பாவிப் பெண்களை ஏமாற்றி சப்ளை செய்து வந்த விஷயத்தை மோப்பம் பிடித்து வெளியிட்டு கேரளாவையே பரபரப்பாக்கியது இவர் அமைப்பு! வழக்கு இப்போது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது! சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார் அஜிதா.

தற்போது கேரள அரசின் பெண்களுக்கான அமைப்பான 'ஸ்தீரிவேதி' யோடு சேர்ந்து ஐஸ்கிரீம் பார்லர் பாலியல் துர்நடத்தை போன்றவற்றிற்கு நியாயம் கேட்டு கேரளா முழுவதும் நடைப்பயணம் சென்று கொண்டிருக்கிறார் அஜிதா.



"என் பெண்ணைப் பார்க்க வந்திருக்கீங்களா?" சுருக்கம் விழுந்த முகத்தோடு பெருமை பொங்க கேட்கிறார் எழுபது வயதுக்கு மேலாகிவிட்ட அஜிதாவின் குஜராத்தி தாயார்!

*கேரளத்துக்கேயுரிய சூடான சாயா தந்து உபசரித்து விட்டு பேசத் தொடங்குகிறார் அஜிதா.*

"முப்பது வருஷத்துக்கு முந்தின விஷயம் அது... அப்பா 'குன்னிக்கல்' நாராயணன் மூலந்தான் எனக்கு இந்த இயக்கமெல்லாம் பழக்கமானது. அப்பா ஒரு தீவிர கம்யூனிஸ்ட்! பம்பாயில் துணிகளுக்கு 'டை' போடும் பிரிவின் சூபர்வைஸராக வேலை பார்த்தார். நினைத்ததை சொல்லும் தைரியமிக்கவர். கம்யூனிஸ்டுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்ட போது, அப்பா தீவிரவாத கம்யூனிஸத்தை (மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் நகஸ்லைட் இயக்கம்) நம்பினார்! அதனர்லேயே அவருக்கு சி.பி.எம்மிடமிருந்தும் பொலிசாரிடமிருந்தும் ஏகப்பட்ட எதிர்ப்பு. அப்பாவை அமெரிக்க சி.ஐ.ஏயின் ஏஜெனட் என்று குற்றம்சாட்டி தேவையில்லாத விஷயத்துக்கெல்லாம் சிறைபிடித்து நிறைய கொடுமைப்படுத்தினார்கள்!

அப்பா, வர்கீஸ், பிலிப் எம். பிரகாஷ், கிருஷ்ணன் குட்டி, சாண்டி என்று கம்யூனிஸக் கொள்கையில் திருப்தியில்லாத சிலர் சேர்ந்து ஆரம்பிச்சது தான் இந்த கேரள நக்ஸல்பாரி இயக்கம்!

**அப்போ பெண்கள் யாரும் இதுமாதிரி தீவிரவாத இயக்கத்தில் இல்லையே... ரத்தமும் துப்பாக்கியுமா இருக்கிற ஒரு அமைப்போட சேர உங்களுக்குத் தயக்கமா இல்லையா?**

"பொண்ணுன்னா போராட முடியாதா என்ன? மா சே துங் எழுதிய '4' பிலாஸபிகல் ஆர்ட்டிகல் (நான்கு தத்துவக் கட்டுரைகள்) புத்தகம் தான் என் தலையெழுத்தையே மாற்றியது. உலகத்தை மாத்தணும்னா, தீவிரவாதம் தேவைன்னு சொல்ற புத்தகம் அது!

அப்போ நான் கோழிக்கோடு அச்சுதன் உயர்நிலைப்பள்ளியில் படிச்சுட்டிருந்தேன். மக்களுக்கு ரேஷன் மூலம் தர்ற அரிசியை அரசு திடீரென்று கட் செய்து விட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் பள்ளி மாணவிகளான நாங்களே போராட்டம் நடத்தினோம். அணி திரட்டி நடத்தியது நான் தான்! அது தான் என் முதல் போராட்டம்!

இத்தனைக்கும் நான் அதற்கு முன்பு வரை கூட்டுக் குடும்ப சூழலில் இரண்டு நேரம் கோயிலுக்கு போய்க் கொண்டு, சாமி கும்பிட்டுக் கொண்டு நேரத்தை போக்கிக் கொண்டிருந்தவள் தான். எல்லோருக்கும் ஏதாவது ஒரு வகையில் விழிப்புணர்வு வரும். எனக்கும் மாவோ புத்தகம் மூலமும் அப்பா வழியாகவும் வந்தது!"

**எப்போ நக்ஸல்பாரி இயக்கத்தில் சேர்ந்தீர்கள்?**

நான் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது கேரளாவில் இந்த இயக்கம் தோன்றியது. அது ஆரம்பிக்கப்பட்ட போதிருந்தே நான் அதில் மெம்பர்! ஆயுதங்கள் மூலம் புதிய ராஜ்யம் உருவாக்க வேண்டும் என்பது தான் எங்கள் நக்ஸல்பாரி இயக்கத்தோட நோக்கம். எங்க அமைப்புக்கென்று 'சேனா' என்ற ராணுவமும் கூட வைத்திருந்தோம். தாக்குதலுக்குத் தயாராக இருக்கும் இளைஞர்கள் இதில் இருந்தார்கள்.

அந்தச் சமயம் அதிகபட்சமாய் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்களும் பீடி மற்றும் கைத்தறித் தொழிலாளர்களும் தான்! கூலியே தராமல் வருஷக்கணக்கில் அடிமையாய் வைத்து ஏழைகளை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் மீதான செக்ஸ் வன்முறைகள் அதிகம். குறிப்பாக வயநாடு பகுதியில்! அதனால் தான் எங்கள் இயக்கம் ஆரம்பித்த பின் சில ஜமீன்தா களைக் கொலை செய்ய வேண்டி வந்தது. நான் அதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டதில்லை என்றாலும் பொலிஸ் என்னை முக்கிய குற்றவாளியாகக் கருதி சல்லடை போட்டுத் தேடியது! ஜமீன்தார்களை மட்டுமல்ல... எங்களோடு இருந்து எங்களையே காட்டிக் கொடுத்த ஒருவரையும், மக்களை ஏமாற்றிய இன்னும் இரண்டு பணக்காரர்களையும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கொன்றார்கள்!

**ஒருத்தரைக் கொலை செய்வதாலும், அதிடிரயாய் தாக்குவதாலும் நீங்கள் விரும்பும் சோஷலிசம் வந்து விடுமா என்ன?**

"கொலை செய்யிறது எங்கள் நோக்கமல்ல... ஆனால், ஆயுதம் மற்றும் தீவிரவாதம் மூலம் தான் சில விஷயங்களைச் சரிபடுத்த முடியும் என்று நம்பினோம். இந்த முயற்சியில் எங்கள் இயக்கம் சில இடங்களில் தோல்வி அடைந்திருந்தாலும் கூட எங்கள் போராட்டம் மக்களைச் சிந்திக்க வைத்திருக்கும் என்று திருப்தி இருந்தது! தவிர பொலிசுக்கும் சி.பி.எம்முக்கும் நாங்கள் எதிரியாக இருந்தோமே தவிர, மக்களுக்கு அல்ல. தொழிலாளர்களும், விவசாயிகளும் எங்களுக்கு பெரும் ஆதரவு தந்து கொண்டிருந்தார்கள். அதனால் தான் பொலிஸ் சல்லடை போட்டுத் தேடியும் அவர்களால் எங்களைச் சுலபமாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. முக்கியமாக ஆதிவாசிகள் எங்களைக் காட்டிக் கொடுக்க மறுத்ததால் மத்திய ரிசர்வ் பொலிசின் கொடுமைக்கு ஆளானார்கள்."

**நக்ஸலைட்டாக இருந்த போது உங்கள் வேலை என்னவாக இருந்தது?**

"அங்கேயிருந்த நாங்க எல்லாருமே எல்லாத்துக்கும் தயாராகத் தான் இருக்கணும். என் அப்பாவும் அதே இயக்கத்தில் இருந்ததால் அப்பாவுக்கு துணையாக மாவோவின் ஆங்கில எழுத்துக்களை மலையாளத்தில் மொழி பெயர்த்து நோட்டீஸ் தயார் செய்வோம். நான் பத்திரிகை செய்திகள் தயாரித்து தருவேன்.

நக்ஸலைட் இயக்கத்தில் நான் ஒரே பெண்ணாக இருந்ததாலேயே என்னை மோசமான காரெக்டராக சித்திரிக்க முயற்சி செய்தார்கள். ஆண்களுடன் மாசக்கணக்கில் காடுகளில் தலைமறைவாக இருந்ததால், என் காரெக்டரை விபச்சாரி போல் சித்திரித்தார்கள். புலிப்பள்ளி பொலிஸ் ஸ்டேஷன் தாக்குதலில் என்னைச் சிறையில் பிடித்துப் போட்ட போதும் கூட முதலில் விபச்சாரிகள் செல்லில் தான் அடைத்தார்கள். அப்புறம்தான் ஒரு கட்டத்தில் வேறு வகையான இடம் கிடைத்தது!

பொலிஸ் மற்றும் ஆளும் (சி.பி.எம்.) கட்சியின் வக்கிரபுத்திக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்...

காட்டில் நான் பேண்டும் ஜாக்கெட்டும் அணிந்து மேலே சேலை போட்டுக் கொண்டிருப்பேன். ஆனால், பொலிஸ் என்னைப் பிடித்தவுடன் என் சேலையைக் கழற்றச் சொல்லி விட்டு பேண்ட், ஜாக்கெட்டுடன் தான் பத்திரிகைகளுக்கு போட்டோ தர வைத்தார்கள். 'செக்ஸ் பாம்' என்று கீழ்த்தரமாக பொதுமக்களிடம் என்னை அடையாளம் காட்ட விரும்பியது தான் இதற்குக் காரணம்!



அஜிதா கைதானபோது

நான் நினைத்திருந்தால் மற்ற டீன் ஏஜ் பெண்கள் போல சமையலையும் வீட்டைப் பெருக்குவதையும் கற்றுக் கொண்டு கலியாணம் முடித்துக் கொண்டு கனவுகளோடு வாழ்க்கையை ஆரம்பித்திருப்பேன். ஆனால், நம்மைச் சுற்றியிருக்கும் வாழ்க்கையை நாம் நினைத்த வகையில் சரிப்படுத்த முயன்றேன். அதில் நான் நம்பிய வழி தான் தீவிரவாதம்!

எங்கள் இயக்கத்தை நாடி எத்தனையோ குறைகள் வந்து சரி செய்யப்பட்டிருக்கின்றன. வயநாடு ஏரியாவில் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் தென் கேரளாவில் இருந்து வந்தவர்கள் ஆக்கிரமித்திருந்தார்கள். அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருந்த மலபார் ஸ்பெஷல் பொலிஸ் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அந்தப் பகுதிச் சேரிப் பெண்களிடம் முறைதவறி நடந்துகொண்டிருந்தது. பொதுமக்கள் பொறுக்க முடியாமல் உதவி கேட்டதால் தான் எங்கள் இயக்கம் ஒரே சமயத்தில் புலிப்பள்ளி, தலச்சேரி இரண்டு நிலையங்களையும் தாக்கியது. அந்த முயற்சியில் பொலிசிடம் பிடிபட்டு ஜெயிலுக்கும் அனுப்பப்பட்டேன்.

**எவ்வளவு நாள் ஜெயிலில் இருந்தீர்கள்?**

'ஏழரை வருடம்! கண்ணனூர், கோழிக்கோடு, திருவனந்தபுரம் என்று மூன்று சிறைகளிலும் மாறி மாறி இருந்தேன். ஒரு குறிக்கோளுக்காகத் தான் ஜெயிலில் இருக்கிறோம் என்ற போது அதில் கஷ்டங்களைவிட பெருமையே அதிகம் இருந்தது. குற்றம் சாட்டப்பட்ட நாங்கள் ஏழுபேருமே 77-ல் ரிலீசாகி வெளியே வந்தோம். அடுத்த இரண்டு வருடங்களில் அப்பா இறந்துபோய் விட்டார். இயக்க வேலைகளும் அதோடு நின்று போய்விட்டது."

**உங்கள் குடும்பம் பற்றிச் சொல்லுங்கள்...**

"அப்பாவும் நானும் இயக்க வேலைகளில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த போது அம்மா மந்தாகினியின் டீச்சர் வேலை தான் எங்களுக்குச் சோறு போட்டது!

அம்மாவுங்கூட சிலகாலம் எங்களுக்காக ஜெயிலில் அடைக்கப்பட்டு ரொம்பக் கஷ்டப்பட்டார். அம்மா, அப்பா இருவரும் காதல் திருமணம் செய்து கொண்ட மனமொத்த தம்பதியர்!

என் திருமணம், நான் ஜெயிலிருந்து திரும்பிய இரண்டொரு வருடங்களில் நடந்தது... கணவர் யாகூப் என்னைவிட எட்டு வயது சின்னவர். அவரும் எங்கள் தீவிரவாத இயக்கத்தில் முழுமூச்சாக இருந்தவர் தான்.

இப்போது டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்ட ஒரு பிஸினஸ் செய்கிறார். இரண்டு குழந்தைகள். வேத காலத்து மகரிஷி யாக்ஞவால்கியரை வாதத்தில் தோற்கடித்த புத்திசாலிப் பெண் கார்க்கியின் பெயர் என் பெண்ணுக்கு. ஸ்கூலில் ஃபைனல் படிக்கிறாள்.

பையனின் பெயர் கிளிண்ட் சில வருடங்களுக்கு முன் எர்ணாகுளத்தில் இறந்து போன ஏழுவயது மழலை மேதையின் பெயர் அது. அந்த வயதுக்குள் இருபதாயிரம் படங்களை வரைந்து கண்காட்சியும் வைத்தான். அவன் ஞாபகமாக மகனுக்கு அந்தப் பெயர் வைத்தேன்.

ஐந்து வருடங்களுக்கு முன் இந்த 'அன்வேசி' என்ற பெண்கள் அமைப்பை ஆரம்பித்தேன்... அடக்கப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டுமென்று தான் எங்கள் கேரள நக்ஸல்பாரி இயக்கம் அன்று போராடியது. இன்றும் அதே நோக்கம் தான் - ஆனால், என் வயதுக்கும் காலத்துக்கும் ஏற்றாற் போல் போராட்ட முறை மட்டும் இப்போது மாறியிருக்கிறது.

சொல்லவே வேதனையாக இருக்கிறது... இப்போதெல்லாம் மத்திய அரசு தந்த ஊக்குவிப்பில் டூரிஸத்தை அதிகப்படுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு செக்ஸ் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை அதிகரித்து விட்டார்கள். அதிலும் குழந்தைகளை வைத்துச் செய்யும் குழந்தை விபச்சாரம் அதிகமாகி விட்டது! கேரளவில் கோவளம் போன்ற முக்கியமான பகுதிகளில் போதை மருந்துகளும், பெண்களும் 'கிடைக்கும்' தாராளமான இடங்கள் இருக்கின்றன.

டூரிஸத்தை வெறுமனே லாபம் தரும் ஒரு இண்டஸ்டிரியாக நினைக்க ஆரம்பித்தால், கொஞ்சம் கொஞ்சமாய் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போல் செக்ஸ் கிளப்புகளுக்கும், லைவ் ஷோக்களுக்கும் அனுமதி தரும் நிலை இங்கேயும் கூட வந்து விடும்!"

**நீங்கள் ஏன் அரசியலில் ஈடுபட்டு உங்கள் கொள்கைகளை செயல்படுத்தக் கூடாது?**

"அரசியலா? அப்புறம் இப்போது போல நான் இந்த சமுதாயத்துக்கு செய்யும் இந்த சிறு உதவியைக்கூட செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமே!

ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? பேருக்கு தேர்தல் வைத்து மக்கள் அரசியல்வாதிகளை செலக்ட் செய்தாலும் ஜனநாயக நாட்டில் மக்களுக்கு பவரே இல்லை! திருடர்களைத் தான மாற்றி மாற்றி நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். மனிதர்களை எல்லாம் சமமாய் பார்க்கும் கம்யூனிஸம் தான் வாழ்க்கைக்கு சிறந்த வழிமுறை என்று இப்போதும் கூட நான் நம்புகிறேன. ஆனால், கம்யூனிஸ்ட்கள் பதவிக்கு வந்ததுமே நிறம் மாறி விடுவது தான் பெரிய கொடுமை. கேரளா முதற்கொண்டு எல்லா இடத்திலும் அது தானே நடந்தது!"

நன்றி: அவள்

நன்றி - நூலகத்திட்டம்



துயரத் தாமரை படிந்த முகங்களை
நாம் தாங்கிய காலங்கள்
நாம் தாங்கிய காலங்கள்

தொடரும் எனினும் துணிவே வளரும்
இதயம் நமதாகும்
இதயம் நமதாகும்

கடலின் கரையில் புலரும் பொழுதில்
கவலைகள் அலையாகும் - வரும்
கவலைகள் அலையாகும்
தொடரும் எனினும் துணிவே வளரும்
இதயம் நமதாகும்
இதயம் நமதாகும்

கொடுமைச் சிறைகள் உயிரைக் குடித்த
கதைகள் மறப்போமா - துயர்க்
கதைகள் மறப்போமா

உருகித் திரியில் எரியும் மெழுகின்
ஒளியாய் திகழ்வோமே - நாம்
ஒளியாய் திகழ்வோமே

தீயே பரவும் தேசம் மீது நம்
பாசம் எரிகிறது
உயிர் வீழும் வரையில் வாழும் துடிப்பில்
வாழ்க்கை அலைகிறது
நம் தேசம் மலர்கிறது.

*மண்டபம் நிசப்தமாக இருக்கிறது. நிசப்தத்தை ஊடறுத்து ஒரு குரல். அது வெறுமனே துயரத்தின் குரலல்ல.*
*அல்லது ஆற்றாமையின் குரலுமல்ல. அதுவுமல்லாது வெறுமனே கோஷங்களைப் போடும் அரசியல்வாதியின் குரலுமல்ல.*

*" பொதுவாகவே தமிழ் மக்களின் மனம் பற்றிப் பலரால் பல்வேறு விதமாகப் பேசப்படுகிறது. அவை எவையும் உண்மையானவை அல்ல. தமிழ் மக்கள் உண்மையாகவே என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் எதைச் சொல்ல விரும்புகிறார்கள்? என்பதை வெளிப்படுத்தவே வடக்கு கிழக்கிலிருந்து வந்து இங்கு நாங்கள் கூடியிருக்கிறோம்."*
*அந்தப் பெண்மணி உணர்ச்சி கலந்த குரலுடன் தொடர்கிறார்.*
*"நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். ஒரு பெண் எந்தவித பயமும் இன்றி நள்ளிரவில் தெருவிலே செல்லக் கூடியதாக இருப்பது தான் உண்மையான சுதந்திரம் என்று காந்தி கூறினார். அத்தகைய சுதந்திரத்தை நான் அனுபவித்திருக்கிறேன்.*
*யாழ்ப்பாணம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட முன்னர் அவ்வாறு தான் இருந்தது.*
*நான் வகுப்பு முடிந்து இரவில் நேரம் பிந்தித் தன்னந்தனியே சென்றிருக்கிறேன். கம்பன் விழா, நாடகங்கள் என்று இரவிரவாகத் திரிந்திருக்கிறேன். அன்று பயமென்றால் என்னவென்று எனக்குத் தெரியாது. நான் எதற்காகவும் பயந்ததில்லை. இன்றோ இரவுகள் அச்சம் தருவனவாக இருக்கின்றன என்னுடைய வாழ்க்கை பயத்திலேயே கழிகிறது. எனக்கோ பயமற்ற அந்த வாழ்க்கை வேண்டும். என்னைப் போன்றே அந்தப் பயமற்ற வாழ்க்கை வடக்கு கிழக்கில் வாழும்*




# உருகித் திரியில் எரியும் மெழுகின் ஒளியாய்த் திகழ்வோமே!

*எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும். வடக்கு கிழக்கில் மட்டுமல்ல பயத்துடன் வாழும் எல்லா மக்களுக்கும் பயமின்றிய வாழ்வு வேண்டும். அதற்காகத் தான் நாம் வடக்கு கிழக்கிலிருந்து இங்கு வந்து குரலெழுப்புகிறோம்.*
*அந்தப் பயமின்றிய வாழ்வே "எமக்கு வேண்டும் " என்று உச்சத்தொனியில் தனது பேச்சை முடிக்கிறார். கலந்து கொண்ட பெண்கள் ஆண்கள் எல்லோரும் அந்தப் பயமின்றிய வாழ்வே எமக்கு வேண்டும் என்று மண்டபம் அதிர உரக்கக் கூக்குரலிடுகிறார்கள்.அந்தக் கூக்குரல் மெல்ல மெல்லப் பாடலாகிறது.*

துயரத் தாமரை படிந்த முகங்களை
நாம் தாங்கிய காலங்கள்
நாம் தாங்கிய காலங்கள்

தொடரும் எனினும் துணிவே வளரும்
இதயம் நமதாகும்
இதயம் நமதாகும்

கடலின் கரையில் புலரும் பொழுதில்
கவலைகள் அலையாகும் - வரும்
கவலைகள் அலையாகும்

தொடரும் எனினும் துணிவே வளரும்
இதயம் நமதாகும்
இதயம் நமதாகும்

*பாடல் ஆடல் ஆகிறது. அவர்கள் கவலைகள் அலைஅலையாகக் கரைகின்றன. தாம் கூடிக்களித்திருந்த ஓரிரவில் அவர்கள் கணவனை இழுத்துச் சென்றதன் பின்னர் இற்றை வரை அவனைக் காணாத துயரம், அவள் மடியில் கிடந்து அப்பா என்று அழும் தந்தையின் முகம் காணா மழலையின் முகம் கண்டு பொங்கி வரும் துயரம்.*

*ரியூசன் முடிந்து வருகையில் அவளெதிரே எதிர்ப்பட்டு ஒரு புன்னகையை வீசிவிட்டுச் செல்லும் அவனைக் காணவில்லை என்றிருந்த போது தோப்பின் மணல்கிளறி சுட்டுத் தாட்டு வைத்த உடலை துாக்கி வந்ததாக ஊர் சொன்ன சேதி கேட்டு கலங்கித் தவித்த துயரம்.*

*தோப்பில் அவளுக்காகக் காத்திருந்த போது அவள் தனித்து வருகையிலே அவர்கள் அவளை இழுத்துச் சென்று காட்டுக்குள் சிதைத்த செய்தி கேட்டெழுந்த துயரம்.*
*தந்தையைத் தெருவிலே தொலைத்த துயர், தாயின் செந்நீரும் நெல்லுக்கு உரமான துயர் என்று அவர்கள் இதயங்களில் பாறையாய் கனத்திருந்த துயர். அதனால் ஏற்பட்ட அச்சம். இந்தப் பயம் அது அவர்களுக்கு வேண்டாம். அவர்கள் அதிலிருந்து விடுதலை வேண்டுமென்கிறார்கள்.*

*பாருங்கள்: இன்னொரு பெண் பேசத் தொடங்குகிறாள். அவள் சொல்கிறாள். கிழக்கு மாகாணத்தில் ஒரு சிற்றூர் தனதாம்.*
*தனது ஊரில் கணவனை இழந்த பெண்கள் தான் அதிகமாம். ஆண்களை அவர்கள் காவு கொண்டு போய்விட்டார்களாம். இப்போது அவர்கள் வந்து எந்த நேரமும் அது இரவானாலும் சரி, பகலானாலும் சரி. எந்த வீட்டுப் படலையையும் திறந்து எந்த ஒரு பெண்ணையும் ஓநாய் ஆட்டுக் குட்டியைக் கவ்வுவது போலக் கவ்விச் செல்லலாம். அதைத் தடுக்க அங்கே யாருமில்லை. படலை கிரீச்சிடும் ஒவ்வொரு கணமும் அச்சம் தொண்டையை அடைக்கிறது. நாங்கள் பயத்தினாலேயே பாதி வாழ்க்கையை இழந்து விட்டோம். இனியும் எங்களால் அது முடியாது. ஆம், அந்தப் பயமின்றிய வாழ்க்கை எங்களுக்கு வேண்டும் என்றுயர்கிறது அவளது குரல். பயமின்றிய வாழ்க்கையே வேண்டும் என்று எல்லோரும் குரலை உயர்த்துகிறார்கள்.*
*பாடல் தொடர்கிறது.*

கொடுமைச் சிறைகள் உயிரைக் குடித்த
கதைகள் மறப்போமா - துயர்க்
கதைகள் மறப்போமா

உருகித் திரியில் எரியும் மெழுகின்
ஒளியாய் திகழ்வோமே - நாம்
ஒளியாய் திகழ்வோமே


*ஆம். உருகித்தீயில் ஒளிரும் திரியாய் அவர்கள் கொழும்பு வீதிகளில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நிகழ்த்திக் காட்டினார்கள். தங்கள் துயர்க்கதை சொன்னார்கள். சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி அரங்க செயற்பாட்டுக்குழு ஒழுங்கு செய்திருந்த இந்த பண்பாட்டுப்பவனி கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் முன்றலில் ஆரம்பித்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தை வந்தடைந்தது. தெருவில் எழுச்சியின் குறியீடாக அவர்கள் கொற்றவையைச் சுமந்து வந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த சிவப்பு நிற ஆடைகளுக்குத் தான் எத்தனை அர்த்தங்கள்.*
*வடக்குக் கிழக்கில் எது தேவையோ அதனை அவர்கள் கொழும்பு வீதிகளில் கோரினார்கள்.*
*அவர்கள் தெருக்களில் உருண்டனர்,புரண்டனர். பாடினார்கள் ஆடினார்கள். அவர்கள் துன்பம், துயரம், ஆவேசம், கோபம்எல்லாவற்றையும் வெளிப்படுத்தினர்.*

*கொழும்பு செம்மணிப் படுகொலைகளுக்குக் காரணமான அரசின் நீதி அமைச்சரைப் பிரதம விருந்தினராக அழைத்து மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த அந்த மாலை நேரத்தில் வடக்குக் கிழக்கிலிருந்து வந்த இவர்கள் கவலைக்குரிய முறையில் புறக்கணிக்கப்பட்ட அவர்களது உண்மையான வாழ்வின் பாடுகளை துணிச்சலாக வெளிக் கொணர்ந்தார்கள்.*
*அடக்கப்பட்டுக் கிடந்த அவர்களது நெஞ்சத்தின் குமுறல்களைக் கொட்டினார்கள்.*
*ஆம். அது உண்மையின் குரலாகவிருந்தது. அவர்கள் தேசத்தின் மீது கொண்ட பாசத்தின் குரலாகவிருந்தது.*
*உயிர்வீழும் வரையில் வாழும்துடிப்பில்*
*எழுந்த குரல் அது!*

*தீயே பரவும் தேசம் மீது நம்*
*பாசம் எரிகிறது*
*உயிர் வீழும் வரையில் வாழும் துடிப்பில்*
*வாழ்க்கை அலைகிறது*
*நம் தேசம் மலர்கிறது.*

□

-விசேட நிருபர்



பெர்த்தோல்ட் பிரெக்ட் *(Bertolt Brecht 1898 - 1956) ஜெர்மனியக் கவிஞன். நாடகாசிரியன். அரங்கச் செயற்பாட்டாளன். 1898ல் ஜெர்மன் ஒக்ஸ்பார்க்கில் பிறந்தார். சர்வதேச அளவில் புகழ் பரப்பியவன். இது அவனது நூற்றாண்டுக் காலம் இலக்கிய உலகு அவனைக் கொண்டாடுகிறது. தமிழ் உலகில், தமிழகத்து சிற்றிதழ்காரர்கள், படைப்பாளிகள் இவரை ஓரளவு நன்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். இவரின் பல கவிதைகள் தமிழுக்கு வந்திருக்கின்றன. பிரம்மராஜன் 15 கவிதைகளை தொகுப்பாக்கியுள்ளார். 'நல்லவர் ஒருவர்' நாடகம் பாவண்ணன் மொழிபெயர்ப்பில் தமிழ்ப் புத்தகாலய வெளியீடாக வந்திருக்கிறது. நாடகக்கலை நூலும் ராமசாமியின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளது. இவ்வாறு தமிழுலகுக்கு அறியப்பட்டவரின் நூற்றாண்டை இலங்கையிலுள்ள ஜெர்மன் கலாசார மையம் ஆறு பயிற்சிப்பட்டறையாக நிகழ்த்தவுள்ளது. ஜனவரி 19 தொடங்கி 28 வரை மாலை 5.30 இந்தப் பட்டறை நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. அறிமுக உரையை இலங்கையின் முன்னணி திரைப்பட இயக்குனரான தர்மசிறி பண்டாரநாயக்கா நிகழ்த்தவுள்ளார். இப்பட்டறை 'பிரெக்ட்டும் சினிமாவும்' என்ற தலைப்பை பிரதானப்படுத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அவரின் சில திரைப்பட படைப்புகளும் காட்டப்படவிருக்கின்றன. A Man's Man - 1931, 15 நிமிட மௌனப்படம், The Mysteries of a Lairdresser's Shop - 1923, 24 நிமிட மௌனப்படம், Who owns the World - 1932 75 நிமிட திரைப்படம் என்பவை காட்டப்படவுள்ளவையாகும். இதில் Who owns the World திரைப்படம் ஜெர்மனிய வேலையற்றோர் பற்றியதாகும். இதில் பிரெக்ட் இணை இயக்குனராகவே (பல்கேரிய இயக்குனர் Slatan Dudov உடன்) செயற்பட்டிருக்கிறார்.*

*இத்திரைப்படம் 1932ல் தடை செய்யப்பட்டது. 1933ல் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததும் பல நாடுகளுக்குக் குடிபெயர்ந்து இறுதியில் அமெரிக்காவில் வசித்து போர்க்காலம் முடிவுற்றபின் மீண்டும் ஜெர்மனி வந்து கிழக்கு பெர்லினில் தன் இறுதிக் காலத்தைக் கழித்தார். 'காலக்குறி' சிற்றிதழிலிருந்து அவரின் கவிதை ஒன்று கீழே....*

எப்பொழுதெல்லாம் எங்கள்
மேலாடை கந்தலாகிறதோ,
அப்பொழுதெல்லாம் நீங்கள்
ஓடிவந்து முழங்குகிறீர்கள்....

"இனி இனியும் நீடிக்கக் கூடாது"
முடிகின்ற எல்லா வழிகளிலும்
உதவி செய்வோம்.
நீங்கள் உற்சாகமாக எஜமானரிடம் ஓடுகிறீர்கள்.
நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம்.
நீங்கள் வெற்றிகரமாக
எங்களுக்குப் பெற்று வந்ததைக்
காட்டுகிறீர்கள், ஒரு துண்டுத் துணியை!

நல்லது: துண்டுத் துணி சரிதான்.
ஆனால்,
முழு ஆடை எங்கே?
எப்பொழுதெல்லாம் பசித்தீயால்
கருகிக் கரைகிறோமோ
அப்பொழுதெல்லாம் ஓடி வந்து
முழங்குகிறீர்கள்.

"இது இனியும் நீடிக்கக் கூடாது"
முடிகின்ற எல்லா வழிகளிலும்
உதவி செய்வோம்.
உற்சாகம் நிரம்பியவர்களாய்



## பெர்த்தோல்ட் பிரெக்ட் நூற்றாண்டுக் குறிப்பு

நீங்கள் எஜமானரிடம் ஓடுகிறீர்கள்:
நாங்களோ,
பசித்தீயில் கருகியபடி
காத்துக்கொண்டிருக்கிறோம்.
நீங்கள்,
திரும்பிவந்து வெற்றிகரமாக
எங்களுக்குப் பெற்று வந்ததைக்
காட்டுகிறீர்கள்.
நாலு பருக்கைகள்.

நல்லது: பருக்கைகள் சரிதான்.
ஆனால், முழுச் சாப்பாடு எங்கே?

எங்கள் தேவை
துண்டுத் துணி அல்ல.
முழு ஆடை.
பருக்கைகளல்ல:
முழுச் சாப்பாடு.
ஒரு வேலை மட்டுமல்ல:
முழுத் தொழிற்சாலையும் எங்களுக்குத்
தேவை.
நிலக்கரி, தாதுப்பொருள், உலோகக் கனி
அத்தனையும் எங்களுக்குத் தேவை.

எல்லாவற்றையும்விட மேலாக
நாட்டின் ஆளும் அதிகாரமும்
எங்களுக்குத் தேவை.
நல்லது,
இவ்வளவும் எங்களுக்குத் தேவை
ஆனால்,
நீங்கள் கொடுப்பது என்ன?

நன்றி - நூலகத்திட்டம்



# தர்மச் சக்கரம்

முத்து இராதாகிருஸ்ணன்



கறுப்பாக இருந்த அந்தச் சக்கரங்கள் மெல்ல உருளத்தொடங்கின. அதன் கூரான பல் வெட்டுக்களில் பரந்த சங்கிலிப்படுக்கை அகப்பட்டு இழுபட்டது பற்கள் நறநறுப்பது போல் நறுத்து சத்தம் தெறித்தது. எல்லாக் கரும் சக்கரங்களும் நெறிபட்டு உருளத்தொடங்க வீறிட்ட சத்தம் அப்பகுதி எங்கும் இடியோசைபோல் புறப்பட்டு மோதியது. மரங்களின் பட்டைகள் நடுங்கி வெடித்தன. சருகுகள் பொல பொலத்து எழுந்த சத்தம் கிசுகிசுத்தது.

சமரவின் இருதயம் தெறித்து விடுவதுபோல் அந்த இயந்திரச் சத்தம் இருந்தது. அவனது கால்கள் நிலையற்றுத் தவித்தன. கால்களை மாற்றி மாற்றி வைத்தபடி வெறித்தான். அயலில் அவனது அணியினர் கெக்கலித்து கூச்சலிட்டனர். அவர்களின் உதடுகள் பிளந்து விரிந்து இழுபட்டது. வாயில் இருந்து ஊளைச் சத்தங்களாக கூச்சல்கள் கிளம்பின. முகங்கள் குரூரமாக சந்தோஷித்தன. அவர்களின் மீசையில்லாத மழுங்க வழிக்கப்பட்ட முகங்களும், துருத்திக்கொண்டிருந்த கறுத்த உதடுகளும் தலையில் கவிழ்க்கப்பட்டிருந்த இரும்புத் தொப்பியும் அவனுக்கு குரூரமான மண்டையோடுகளாகக் காட்சியளித்தன.

குண்டும் குழியுமாக பல ஆண்டுகளாக திருத்தப்படாத அந்த வீதி சிதிலமாகி நொருங்கிய கட்டிடங்கள் இருபுறமும் வழிவிடச்சென்றது. ஆங்காங்கே மின்கம்பங்கள் உடைந்து நொருங்கி பரல்களாக பரவிக்கிடந்தன. பிடுங்கி எறியப்பட்ட குடல்கள் போல ஆங்காங்கே அக்கம்பங்களில் இருந்து தொங்கிய வயர்களும், கம்பிகளும் காணப்பட உயிரினம் ஏதுமற்ற உயிரற்ற ஜடமாக நகரம் கிடந்தது. நகரின் வெளியே வடக்காக இருந்தது அந்தக் கல்லறை வனம்.

மேற்குப்பக்க வானம் சிவந்து கொண்டிருந்தது. அடிப்பரப்பு பச்சை மரகதப்படுக்கையில் வெண்முத்துப் பரல்கள் பரப்பியது போல் தேமா மரங்களினாலும் அவை தாங்கிய மலர்களாலும் சிலிர்த்தன. கிழக்குப் பக்கம் கண்ணுக் கெட்டியவரை விரிந்து செல்லும் வாழைத்தோட்டங்களாகவும் கிடந்தது. அந்த வனத்தின் முகப்பில் நெடுந்தோங்கிய தோரணவாயில் பெருமிதமாக பார்த்தது. சிவப்பு நிற செம்பாட்டு மண்சூழ ஆயிரக்கணக்கான கல்லறைகள் காடாக மண்டிக்கிடந்தன. ஆங்காங்கே நடுகற்களும் நடுவே மைதானமுமாக காட்சியளித்தது. மகாபாரதங்களிலும், இராமாயணங்களிலும் இன்னும் எண்ணற்ற காவியங்களிலும் அக் காவியங்களை நகர்த்தியவர்கள் நடுவர்களாகவும் கல்லறைகளாகவும் புதைந்து கிடந்தனர் மைதானத்துக்கு நடுவே உயர்ந்த பீடம் ஒன்றிலே சுடர் விட்டது அணையாத செங்கழல். அந்தக் கல்லறைகளால் நிறைந்த நந்தவனத்தின் ஆன்மாவாக அந்தக் கழல் சுடர் விட்டு எரிந்துகொண்டிருந்தது. எங்கும் அமைதி குடிகொண்டிருக்க அந்த ஆத்மார்த்த அமைதி வரப்போகும் ஊழியின் அறிவிப்பு என்பது புலப்பட்டோ என்னவோ சூழ்ந்திருந்த வாழைகளை அசைக்க முற்பட்டது சோளகக்காற்று.

எங்கும் கூச்சல்களும், மகிழ்ச்சி ஆரவாரங்களும் புறப்பட்டன. முகபடாம் பூட்டிய யானைகள் அசைவது போல் அந்த இயந்திரங்கள் இராட்சத சக்கரங்களுடன் நகர்ந்தன. கந்தகநெடியும், கரும் புகையும் எழுந்து அந்த இயந்திரங்களைச் சூழ்ந்து கொண்டே சென்றன. அவன் ஒன்றுடனும் தொடர்பற்றவனாக ஒதுங்கியபடி அந்த தேமா மரத்தினடியில் நின்றான். மரத்தில் இருந்து மலர் ஒன்று தோளில் விழுந்தது. அதனை எடுத்து கையில் வைத்துப்பார்த்தான். அந்த மலர் வெண்ணிறமாக அழகாக நடுநடுவே மஞ்சள் கோடுகளுடன், நறுமணத்துடன் அந்த சூழ்நிலைக்கு சம்பந்தம் அற்ற ஒன்றாக காட்சி தந்தது. அவ்வாறே அவன் தன்னையும் உணர்ந்தான்.

போதிசத்துவரின் பாதக் கமலத்தில் குவிந்து கிடக்கும் தேமா மலர்கள் நினைவில் வந்தன. கண்கள் மூக்கு நுனியைப் பார்க்க சாந்த சொரூபியாய் சாட்சியளிக்கும் புத்தபகவானிடம் அவனுக்கு விடைகாண வேண்டிய கேள்விகள் எவ்வளவோ கிடந்தன. இந்தக் கரகரப்பான முரட்டு இராணுவ ஆடைகளை அணிவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னமே ஏற்பட்ட கேள்விகள்தான் அவை. அவனது வீட்டிற்கு அருகில் இருக்கும் பன்சாலையில் அம்மா, அப்பா, அக்கா, என எல்லோருமாக போய் தியானிக்கும் போதெல்லாம் அவனுக்குள் தோன்றும் கேள்விகள் தான் அவை. ஒவ்வொரு முறையும் நாட்டில் கலவரங்கள் வெடித்து தீயாய் மூழும் போதெல்லாம் அவனுக்குள் தோன்றும் கேள்விகள் தான் அவை. புத்தரின் முகத்தைப்பார்த்தபடி அமர்ந்திருக்கும் போதெல்லாம் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர் கண்களைத் திறந்து தன்னுடன் அளவளாவமாட்டாரா என்ற ஏக்கம் பீறிடத் தொடங்கும். தலையின் பின் உள்ள ஒளிவட்டம் மெல்ல மெல்ல சுழல ஆரம்பிக்கும். அந்த சுழற்சி காலச் சகதிக்குள் அவனை இழுத்துச் சென்றுவிடும்.

கால்களில் முட்புதர்கள் கீறிக்கிழிக்க யுகம் யுகமாக தேவநம்பியதீஸன் காடுகளில் அலைந்து கொண்டிருந்தான். கையிலே நாணேற்றிய வில்லும், தோளிலே அம்பராத்துணி நிறைந்த அம்புகளுமாக அவன் தேடியலைந்தான். எங்கே மான்கள் அல்லது ஒரு மான். எல்லாம் மரக்கலத்தில் வந்திறங்கிய மகிந்தரைக் காணும் வரைதான். சிக்கல்கள் அற்று தருக்கங்கள் இல்லாது மண்ணின் மடியில் அதன் வளங்களை நம்பியே வாழ்ந்த கூட்டம். நியாய தருக்க நியதித் தழைகளில் சிக்கியது. சுதந்திரமாக திரிந்த மான்கள் இல்லை தேவநம்பியதீஸன்கள். மகிந்த தேரோக்களின் தருக்க நியாய வலைகளில் சிக்கிக்கொண்டன. அவர்களின் இருப்பு, விருப்பு, வேட்கை அனைத்தும் தர்மச்சக்கரத்தினுள் நுழைந்து முடிவில்லாத நனவிலி மனங்களாக சுழலத் தொடங்கிவிட்டன.

சுழன்ற சக்கரங்களுக்குள் நெரிபட்ட சங்கிலிப்படுக்கை தரையைப் பிறாண்டிக்கொண்டு முன்னோக்கிச் சென்றது. சிறியகற்கள், புதர்கள் எல்லாம் பிய்த்தெறிந்தவைபோல் அகப்பட்டு கிளறி எறியப்பட்டன. எஃகுச் சட்டங்கள் உரசி உரசி கிளர்ந்தெழுந்த ஒலி செவிப்பறையை தகர்த்தது. அந்த இரும்பு எருமைகளின் மேலிருந்த வாயகன்ற கரும் குழாய் தீக்கோளங்களாய் உமிழ்ந்தது. கரும் குன்றுகளாக அந்த எஃகு ரதங்கள் அணிவகுத்து நகர அதன் மேல் ஏறிநின்ற இரும்புத் தொப்பியணிந்த படைவீரர்கள் ஆரவாரித்தனர். எங்கும் வெற்றிக்களிப்பு விண்நோக்கி எழுந்தது.

சத்தம் காதைப் பிளந்து நாராசம் போல் நுழைந்து வெளிவர மறுத்தது. வியூகம் வகுத்த எஃகு கரியவாகனங்கள் கல்லறை வனத்தை நெருங்கின கண்கள் சிவக்க, மதனீர் வடிய ஓலம் எழுப்பியபடி கடூரமாக முட்டி மோதவரும் சேற்று எருமைகள் போல் அவை இருந்தன. ஆரவாரம் பேரோசையாக எழுந்தது.

முதலாவது வாகனத்தில் இருந்தவன் கையசைத்தான். அவன் கண்கள் மட்டும் கபாலத்துக்குள்ளால் வெளித்தெரிந்தவன் போல் இருந்தான். வாகனங்கள் வெறிகொண்டு கிளம்பின. சக்கரங்கள் சிலிர்த்து சட்டங்களை இழுத்து முன்னேறின. வாகனங்கள் பதறி குலுங்கி ஒலியலைகளை கிளப்பின. தோரண வாயில் தூண்களில் ஒன்றுடன் எருமை மோதியது. மேல் வளைவு விதானத்தினை நோக்கி வேறொன்று நெருப்பாய் உமிழ்ந்தது. வானளாவ நின்ற தோரணையில் மெல்ல ஆட்டம் கண்டு சரியத் தொடங்கியது. கற்கள் புரளத்தொடங்கின.

தூண்களில் விரிசல் கண்டது. எருமை மேலும் மேலும் முட்டியது. மேற்கு கிழக்காக நின்ற வாயில் தோரணம் சடுதியாக தள்ளாடி நிலம் நோக்கிச் சரிந்தது. பேரோசை எங்கும் எழ நிலம் கிளர்ந்து புழுதியைக் கிழப்பியது. வாழைகளை உலுக்கிய காற்று மைதானத்து அணையாச் சுடரின் தீக்கங்குகளுடன் நர்த்தனமாடத் தொடங்கியது. எங்கும் ஓலங்களின் ஆட்சி விசாலித்தது.

சமர கண்களை மூடிக்கொண்டான். நெஞ்சு பதைபதைத்துக் கொண்டு கிடந்தது. வாய்விட்டு குளறவேண்டும் போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. கால்கள் தளர்ந்தன. கைகள் சில்லிட்டன. ஓ.... முன்பும் இதேபோன்ற நிலை... எல்லாம் இழந்த .. நடைப்பிணமான ஒரு நிலை... ஓ..... அந்த நினைவுகளில் மூழ்க அவனுக்கு திராணி இல்லை... ஆனால், அவை கிளர்ந்து அவனை மூழ்கடித்தன.

அழகிய பெண் ஒருக்களித்து படுத்திருப்பது போன்று அந்தச் சிறிய கிராமம் ஆழ்ந்த துயிலில் இருந்தது. மின்சாரம் செல்லாத மிகப்பின்தங்கிய கிராமம். கிராமத்தின் எல்லையில் வந்து நின்ற அந்த வாகனத்தில் இருந்து தப தப எனப்பலர் இறங்கினர். முரட்டு காக்கி உடைகள் சரசரத்தன. கைகளில் இருந்த எஃகு ஆயுதங்கள் ஆவாவென்று இரைதேடும் பாம்புகள் போல்கிடந்தன. மெல்ல ஊரின் தெருக்களில் நகர்ந்தனர். கூட்டத்தின் முன்பாக சென்றவன் ஒரு வீட்டை சுட்டிக்காட்டி நின்றான்.

சமர திடுக்குற்று கண்களைத் திறந்தான். ஏதோ மேல் கூரையில் இருந்து விழுந்து போல் இருந்தது. லாந்தர் வெளிச்சத்தைத் தூண்டி என்னவென்று பார்த்தான். ஒரு பல்லி ஓடியது.... ஓ.. பல்லிதான் வீழ்ந்துள்ளது ஏதாவது சகுனப்பிழையோ மனம் அங்கலாய்த்தது. அறையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தவர்களை நோக்கினான். ஓ... அம்மா... தங்கை.. அக்கா... எல்லோரும் வறுமையின் விளைவுகள் உடலிலும் முகத்திலும் புலப்ப ஆழ்ந்த துயிலில் இருந்தனர். அவன் வேறு ஏதாவது வேலைக்கு போய்த்தான் குடும்பம் நிமிரவேண்டும். பல வித எண்ணங்களுடன் படுக்கையில் உழன்றான். நித்திரை அகன்றுவிட்டது. அப்போதுதான் அந்தக் காலடியோசைகள் கேட்டது. ரகசியம் பேசுவது போல் இருந்தது. மனதினுள் இனம்புரியாத உணர்வு எழுந்தது. மெல்ல எழுந்து விளக்கை தணித்து வைத்தான். பெட்டகத்தின் மேல் ஏறி கூரையிடுக்குகளுக்கூடாக வெளியே நோக்கினான்.

எங்கும் காரிருள். கண்கள் மெல்ல இருளைப் பழகியபின் புலப்பட்டது. வீதியில் குழுமியபடி அவர்கள்... ஏதோ ஒரு ஆணைக்காக தங்களுடைய வீட்டை நோக்கி காத்திருப்பது அவனுக்குப் புலப்பட்டது. கைகள் குளிர்ந்தன. மூளைக்குள் இரத்தம் பீய்ச்சிப் பாய்ந்தது. படபடவென்று வீட்டாரை எழுப்பினான். கதவு திடீர் என உலுக்குவதுபோல் தட்டப்பட்டது. ஒரு கணத்தில் உதைபட்ட கதவு அகலத் திறந்தது. எதுவும் செய்ய முடியாத தவிப்புடன் தாயின் பின்னால் பதுங்க முயன்றான். அவனது தாயும் சகோதரிகளும் குளறத்தொடங்கினர்.

பரபரவென்று உள்ளே புகுந்த இராணுவ அதிகாரிகளுடன் அவனுடன் சேர்ந்து பயிற்சிபெற்ற இராணுவ வீரன் நிஸங்கவும் நின்றான். இரண்டு நாட்களுக்கு முன்புதான் இராணுவத்தில் இருந்து தப்பிவந்தவர்கள் சரணடைய வழங்கப்பட்டிருந்த ஒன்பதாவது கெடுவும் முடிந்திருந்தது. நான் வர மாட்டேன். நான் வர மாட்டேன்... சமர கூக்குரலிட்டு அலறினான். கொத்தாக அவனது தலைமுடியைப் பற்றிய படையதிகாரி நிலம் புழுதி கிளம்ப இழுத்துச் சென்றான். வேள்விக்கு நேர்ந்த பலியாடுபோல்... குமுறலாக அவனது குரல் அந்த இரவுப் பொழுதை அலைக்கழித்தது. அவனது தாயும் சகோதரிகளும் தலையில் அடித்து ஒப்பாரி வைப்பதுவும் ஏனைய படையினர் அவர்களை மிரட்டுவதும் மங்கலாகத் தெரிந்தது. மூன்று மாத தலைமறைவு வாழ்க்கை அன்றுடன் முடிவடைந்தது.

அந்த வனம் முழுவதும் இரத்தச் சிவப்பாக செம்பட்டுப் புழுதியால் கிளர்ந்தது. சிதிலான தோரணவாயிலுக்கு மேலாக ஏறி உள் நுழைந்தது எஃகு வாகனங்கள். அதன் எஃகுச்சட்டங்கள் சடசடத்தன. அதுவரையில் அமைதியாக துயின்று கொண்டிருந்த கல்லறைகள் அந்த வாகனப் பேய்களின் அசுர வெறியில் அகப்பட்டு பிடுங்கியெறியப்பட்டன. நடுகற்கள் சரிந்தன. சில வாகனங்கள் முன்புறத்தில் கிடந்த ராட்சத கைகளைக் கொண்டு கல்லறைகளை கிளறின. கர்ப்பத்தில் கிடந்த சிசுக்களாக கல்லறையில் துயின்ற உடல்கள் பிடுங்கியெறியப்பட்டன. எங்கும் ஊழிப்புயல் தலைவிரித்தாடியது. செந்நிற மண் பரப்பில் ஆயிரக்கணக்கான உடல்களின் எலும்புகள் மிதந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு கையென்பும், உயிர்பெற்று அசைந்தன. ஆயிரக்கணக்கில் கைகள் மண்ணுக்கு மேல்வந்து அரற்றின. அவற்றின் கைகளில் இருதயங்களும் அவற்றில் இருந்து செங்குழம்பும் வழிவதுபோல் கிடந்தது. எண்ணற்ற கனவுகளும் வழிந்து கொண்டிருந்தது. வனம் ஒரு பிரளயத்துள் ஆழ்ந்து திணறியது. வெறி கொண்ட வாகனங்கள் அங்குமிங்குமாக அலைந்து கல்லறைகளை நொறுக்கி உழுதது. செங்கற்களும், சிதிலங்களும் மலையாக குவிந்தன.

காற்று சூறையாக எழுந்து சுழன்றடித்தது. வனத்தைச் சூழ்ந்திருந்த வாழைகள் வீறிட்டு

→

நன்றி - நூலகத்திட்டம்



அலறி அசைந்தன. தேமா மரங்களின் கொப்புக்கள் சடசடவென்று முறிய மென் மலர்கள் வீழ்ந்து புரண்டன. அடிவானம் இரத்தச் சிவப்பாக மயங்கி மங்கியது. உச்சியில் சூழ்ந்த கார்முகில் உடைந்து நிலம் நோக்கி சரிந்தது. மழைநீர் இரத்தமென கிளைவிட்டு ஓடியது. அணையாத செங்கழல் வானளாவ உயர்ந்து ஒரு கணம் சுடர்விட்டது. அதன் நாக்குகள் படபடத்தன. மூடியபடி காற்று மோதியது. சுடர் சுழன்று அலைக்கழிந்தது. நடுவில் நீலமும் சிவப்புமாக தீக்கங்குகள் தாண்டவமாடின. கரிய வாகனம் தீமேடையை முட்டிமோதியது. பளிங்கு விதானங்கள் பிடி கழன்று சரிந்தன. மழைநீர் வெள்ளமாய் கொட்டியது. தீக்கங்குகள் நீர்பட்டு கூசிக் குறுகின. வாகனத்தில் நின்றவன் ஓலமிட்டு எச்சிலை உமிழ்ந்தான். மீண்டும் வாகனம் முன்னோக்கி பிளறிப்பாய்ந்தது. மேடை உடைந்து தீக்குண்டம் சரிந்தது. ஜெயவேவா என்ற முழக்கம் எங்கும் எழுந்தது கடூரமாக.

இத்தனை வெறியும் வேகமும் எங்கிருந்து வந்தன. யாரால் நாம் சபிக்கப்பட்டோம். அந்த ஆரவாரச் சகதியில் அவன் தன்னைப்போல் ஒருவனைத் தேடினான். எல்லோருடைய கண்களும் குரூரத்தையே உமிழ்ந்து கொண்டிருந்தன. எல்லோரும் வெறிகொண்டு மானை விரட்டும் தேவநம்பியதீஸர்களாகவே தெரிந்தனர். மகிந்தரின் தத்துவ விசாரங்கள் எல்லாமே 'புழுக்கள் நெழியும் கொடூரச் சகதிக்கு மேல் பூசப்பட்ட புனுகுதானா?' அதுதான் எமது உண்மைச் சொரூபமா?

கெக்கலிப்பும், வெறியாட்டமும் உச்சத்தை தொட்டிருந்தன. நாராசமாய் எழுந்த கூச்சல்கள் அவனது மனதை அறைந்து மூசியது.எண்ணற்ற முட்களில் நிற்பதுபோல் வேதனை பிழிந்தது. அந்த அவலச்சகதிக்குள் இருந்து விடுபட வழிதேடினான்.... அவர்களது ஒவ்வொரு செயலும் நியாயமா.. நியாயமா... என கலைத்து கலைத்து எதிரொலிப்பதாக அவனுக்கு பிரமையேற்பட்டது. தறிபட்டுப்போக எஞ்சி நின்ற பனை மரங்கள் தங்களைப்பார்த்து வெட்கப்பட்டு கூசுவதுபோல் உணர்ந்தான். அவனது கால்கள் தள்ளாடின. பக்கத்தில் நின்ற தேமா மரத்தைப் பிடித்துக் கொண்டான். இங்கிருந்து அகன்றுவிட வேண்டும். இந்த இடத்தில் இருந்து இந்த குடாப்பரப்பில் இருந்து.. ஏன் இந்த.. உலகத்தில் இருந்தே... மீண்டும் விடை தேடமுடியாத கேள்விகளாக அவனைச் சூழ்ந்து எழுந்தன. தலையை மரத்தில் மோதலாமா என ஒரு கணம் நினைந்தான்... அந்த மரம் அவனை ஆதாரத்துடன் பார்ப்பதுபோல் இருந்தது.

ஓ... அது மரமல்ல.. போதிசத்துவர் வானளாவ உயர்ந்து அவனைக் கருணையுடன் நோக்குவதாக அவன் உணர்ந்தான். கண்ணீருடன் கால்களில் வீழ்ந்தான். மரவேர் முகத்தில் பட்டது.

....சுவாமி இங்கிருந்து செல்ல எனக்கு வழியே இல்லையே.... மீண்டும் மீண்டும் ... பிடிக்கப்பட்டு.... இந்த அவலத்துக்குள்தானே துரத்தப்படுகின்றேன். அரற்றியபடி மரத்துடன் முட்டினான். மரம் சற்று ஆடியது. சாத்திவைக்கப்பட்டிருந்த எஃகு குழல் ஆயுதம் சரிந்து காலில் வீழ்ந்தது. சட்டென அவனது அசைவுகள் நின்றன. மெல்ல அதனை நோக்கினான். அதன் மேல் தேமா மலர் ஒன்று விழுந்து கிடந்தது. அந்த ஒரு கணத்தில் அவன் தன் வழியை அறிந்து கொண்டான். அந்த கரிய ஆயுதத்தை நோக்கி அவனது கைகள் சென்றன.

அந்க எஃகு வாகனங்கள் அலறி எழுப்பிய ஓலங்களையும் மீறி, அந்த வீரர்கள் வெறிகொண்டெழுப்பிய கூச்சங்களையும் மீறி, சுழன்று விசியடித்த காற்றையும் மழையையும் மீறி..... மேலெழுந்தது.. அந்த ஒற்றையான எஃகுக் குழல் ஆயுதத்தில் இருந்து வெடி தீர்ந்த சத்தம். தேமா மரம் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது. சமரவைப் போல்.

அழிவடைந்த நகரத்திற்கு அப்பால் வனாந்தரங்களிலும், வெட்டைகளிலும் வேருடன் பிடுங்கப்பட்டவர்களாக குழுமிக்குழுமி சனங்கள் பல்லாயிரர் அரற்றிக்கொண்டிருந்தனர். இறுகிப்போயிருந்த அவர்களின் முகங்களில் வற்றிப்போன ஆழமான் குளங்களாக கண்கள் கிடந்தன. அங்கே ஆழத்தில் கல்லறை வனத்தில் அணைந்த செங்கழல்த்தீ பல்லாயிரம் கழல்களாக மூழத் தொடங்கியிருந்தது. எண்ணற்ற கண்ணகிகள் தெறித்துப் பரந்த பரல்போல் உடைந்த மனங்களுடன் தீ வளர்க்கத் தொடங்கியிருந்தனர். □

# 'மோகத்தின் மோகத்தட்ட" : பலவீனமான கதை !

**சினிமாக்கள்** யாரின் கைகளாலும் கையாளப்படாமல் வாளாவிருக்கின்றது. இது தமிழ் சினிமாக்களைப் பொறுத்த வரையில் அதிகமே. அதீத கற்பனையில் பறந்து கொண்டு பார்க்க வேண்டிய படங்கள். (சிலவிதி-விலக்குகளைத் தவிர்த்து) சிங்களப் படங்களைப் பொறுத்தவரை பல படங்கள் தரைபடவே வைக்கின்றன. ஏதோவொரு உள்ளுணர்வை உற்பத்தி பண்ணுகிறது. வாழ்முறையை வித்தியாசமாகக் கோணப்படுத்தி காட்டுவதாகவே உணர முடிகின்றது. வியாபார நோக்கத்துடன் கலந்துவரும் சில படங்களின் தாக்கத்துடன் இணைந்ததாக ஏனைய படைப்புக்களின் தாக்கம் இருந்தாலும் வியாபார நோக்கத்துக்கு அப்பாற்பட்ட ஒருவித அடித்தளக் கருவை கொண்டிருக்கிறது. இன்று பல்துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது 'பாலியல்' என்ற எண்ணக்கருவே. இது தமிழிலக்கியங்களைப் பொறுத்தவரை பாலியல் வல்லுறவுடனான கொலைகளைத் தொடர்ந்தும் அங்கு நடைபெறும் பாலுறவுடனான யுத்தத்திலிருந்து தோன்றியும், கமல் அத்தராராச்சியின் வல்லுறவு, மங்கள சமரவீரவினுடைய 'கிரடிட்காட்' நீலப்படம் பார்த்த விவகாரம் எனத் தொடங்கி... நீளும் பாலியல் விவகாரங்கள் மக்கள் தொடர்பூடகங்களைப் பாதித்திருப்பது பாரிய விடயமல்ல.

சிங்கள சினிமாக்களில் காலத்துக்குக் காலம் பாலியல் ரீதியான வல்லுறவு சித்திரிக்கப்படுகின்றது. இந்த வல்லுறவு ஒரு வித பாலியல் ஈர்ப்பைக் காட்ட முனைகின்றது. 'மீஹரக்கா'வில் சித்த சுவாதீனம் குறைந்த ஒருவனின் பாலுணர்வுத் தாக்கத்தினால் ஏற்பட்ட வல்லுறவும், 'எகே வைரய'வில் ஒரு கூட்டத்தினரின் பாலியல் வேட்டையும், 'அயோமா'வில் ஒருத்தி விபச்சாரியானதும் எனத் தொடர்ந்து 'துங்வெனி எஹ'வில் பாலுணர்வைத் தணிக்க ஏற்படும் தொடர்பு என நீண்டு சமூகத்தின் ஒரு அகப்பார்வைக்குள் நுழைந்து கொண்டது. 'மொகத்தின் மொகதட்ட' என்ற திரைப்படம் ஒவ்வாத ஒரு தொடர்பைக் காட்டுகின்றது. கணவன், மனைவி, குழந்தை வேலைக்காரப் பெண் என்றிருக்கும் ஒரு குடும்பம். வெளிப்புறத்தில் ஒரு ஆண். மனைவிக்கும், அந்த ஆணுக்கும் ஏற்படும் நெருக்கமான உறவு. பின்னர் கணவனால் அவ்விருவரும் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள் என்ற பாங்கில் கதை இருப்பினும் நகர்வுத்திறன் சில குறித்த எல்லைகளைத் தாண்டியிருக்கிறது. ஒரு சூத்திரத்தின் வியாக்கியானமாகவே இது விரிகிறது. அந்த வியாக்கியானப்படுத்தல் ஒரு வட்டமாக உள்நுழைக்கப்பட்டாலும் அதன் மையம் என்ன? எச்சுலோகத்தின் வியாக்கியானம் இது? எதனடிப்படையில் இது விளக்கப்படுகிறது? என்ற பல கேள்விகளைத் துண்டியிருக்கிறது.

திருமணமான பெண்ணே இத் தொடர்பில் ஈடுபடுகிறாள். இதற்குக் காரணம் என்ன? எதிர்ப்பாற்கவர்ச்சி தான் காரணம் எனின் அது உடற்புணர்ச்சிக்கானதா? அல்லது மனவயப்பட்டதா? உடற்புணர்ச்சிக்காகவெனின் கணவனால் அவளுக்குரித்தான பாலுணர்வுகள் தீர்க்கப்படவில்லையா? மனவயப்பட்டதெனின் கணவனிடத்திலான வெறுப்புணர்வு சித்திரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் வேலைப்பளுக்காரணமாக இணையமுடியாமையால் தான் மனைவி இவ்வகைத்தொடர்பு முறைக்கு ஆட்பட்டாளெனின், குடும்பம் பாலியல் தேவைகளை நிவர்த்தி செய்யும் நிறுவனம் மாத்திரம் தானா? அது மாத்திரம் அல்லாமல் ஒவ்வொரு பெண்ணுக்கும் தனது பாலுணர்வுகளை யாருடனாவது தீர்த்துக்கொள்ளும் உரிமை உண்டென சமூகக்கட்டுடைப்பைச் செய்கின்றதா? அல்லது மனைவியென்பவள் குடும்பவயப்பட்டவள். அவளால் ஏற்படுத்தப்பட்ட வெளித்தொடர்பு தவறு. அதனால்தான் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என எடுத்துக்கொண்டு சமூகக் கட்டமைப்பைப் பேணுகின்றதா? அல்லது எதையும் கூற வராமல் பாலுணர்ச்சியைத் துண்டும் சாதாரணப் படங்களுடன் இதையும் இணைத்து விடுவதா என்ற பல கேள்விகளை இப்படம் எழுப்புகிறது.

இதற்கெல்லாம் அடிப்படை உறுதியான நோக்குடன், தெளிவான கருத்தாடலுடன் இது எடுத்துக் கையாளப்படாமையே ஆகும். இத்தொடர்பு முறையாக சினிமாவில் சொல்லப்படவில்லை. இக் கதையைச் சொல்லவேண்டுமெனக் கருதி மக்களால் ஏற்கக்கூடியது மனைவியைச் சுட்டுக்கொல்லுதலே என மனைவியும், காதலனும் சுடவைக்கப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத்துாண்டுகிறது. வித்தியாசமான கதை தெளிவில்லாத முடிவால் அறையப்பட்டிருக்கிறது.

-தியாகசேகரன்


இலங்கையில் முதற் தடவையாக
ரூபா 1,01,000.00 பரிசு வழங்கும்
மாபெரும் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு: ரூபா 15,000.00
இரண்டாம் பரிசு: ரூபா 10,000.00 வீதம் 02 கதைகளுக்கு
மூன்றாம் பரிசு: ரூபா 7,000.00 வீதம் 03 கதைகளுக்கு
ஆறுதல் பரிசுகள்: ரூபா 5,000.00 வீதம் 09 கதைகளுக்கு

## மலையகத்து உலகத் தரக் கதைகள்:
# பள்ளத்தாக்கில் ?

**தலைகளை** மண்ணுக்குள் புதைத்துக் கொள்ளுங்கள். அவைகள் புதையுண்டு தான் இருக்கிறது. எந்தப் புதுமைகளையும் பார்க்க சகிக்க முடியாது. வித்தியாசங்களை ஏற்க மனம் இடந்தராது. எது நடப்பட்டது? எவ்வாறு நடப்பட்டதென்ற கேள்விகள் தேவையற்ற ஒன்று. யார் நட்டார் என்பதே முக்கியமானது. அவர் மிகச் சிறந்தவர். அனுபவம் வாய்ந்தவர். அவரின் நடுகைகள் பலன் தராவிட்டாலும் அவரினது நடுகைகள் சிறப்பாகத்தான் இருக்க வேண்டும். அதைத் தெரிவு செய்யாவிட்டாலும் எங்களுக்கு அவமானம். புதிதாக்கப்பட்ட பழமைக்கு இடம் கொடுப்போம் என்ற மேதாவிலாசத்தின் தெரிவுதான் இன்றைய போட்டிகளும் முடிவுகளும்.

ஆனால், பாவம் மலையகம் அரசியற் 'தனங்'களில் மட்டுமல்லாது கதைக்கருக்களும் கூட செக்கு மாடுகளாகச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றது. திரைப்படத் தயாரிப்புகளுக்கு கதைகள் எழுதிக்கொண்டு லட்சியக் குறிக்கோள்களுடன் உலாவித் திரிகின்றது. கற்பனைகளையெல்லாம் யதார்த்த தனங்களுக்குள் ஊடுருவி இருக்கின்றது. பிரத்தியட்சங்களை மீள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அதற்குள் இலட்சிய புருஷர்களை கொண்டு திணித்துக் கட்டியிருக்கின்றார்கள்.

இப்போது எங்களுடைய தேவைகள் இலட்சியங்கள் மேல் நோக்கி சுண்டி இழுத்துப்போக வேண்டிய ரஜனிகாந்த்தினுடைய கைச்சொடுக்குகளும், வசனங்களும் தான். ரஜனிகாந்த் இறந்து போவதையோ அடிவாங்குவதையோ தாங்கிக்கொள்ள முடியாது. (பூப்போன்ற மனசு). அடிக்க வேண்டும் பறந்து பறந்து: காலாலும், கையாலும் மாறி: மாறி பத்துக்கு மேற்பட்டோரை அடித்துத் துரத்த வேண்டும். இது மக்களுடைய எண்ணங்கள் மாத்திரமல்ல நடுவர்களது யோசனைகள் கூட இதாகத்தான் இருக்கிறது. அறிவிப்புக்களில் எல்லோரும் அம்மணமாக வரவேண்டும். அவ்வாறு வராவிட்டால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார் என இருந்தாலும் கோட்டு சூட்டுடன் வருபவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தினகரன் - துரைவி இணைந்து நடாத்திய பெருந்தொகைப் பணப்பரிசுக் கதைகளின் முடிவுகளும், அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் (கதைஞர்களின்) அறிவிப்பும் எங்கே கொண்டு போய் விட்டிருக்கின்றது? உலக அளவில் -எடுத்துக் காட்டக்கூடிய கதைகளைத் தெரிவு செய்திருக்கிறார். (கண்களை மூடிப் பால்குடித்த வண்ணம்) இதோ! உங்களுக்கு அற்புதமானதோர் இலட்சியக் கதை என போட்டா போட்டியின் மத்தியில் நாங்கள் சளைத்தவர்களல்ல, களைத்தவர்களுமல்ல என சிகரத்தைத் தொட்ட சிறுகதைகளின் அறிவிப்பு தினகரன் இதழில் . வெளியாகி இருக்கின்றது. நவம்பர் 22ம் திகதி 15,000 ரூபாக் கதையும், நவம்பர் 29ம் திகதியும் டிசம்பர் 6ம் திகதியும் 10,000 ரூபாக் கதைகளும் அதைத்தொடர்ந்து 7,000 ரூபா, ரூபா 5,000 ரூபாக் கதைகளும் தொடர்ந்து வெளியாகும். இவைகள் உலகத் தரத்துக் கதைகள் (நடுவர்களைப் பொறுத்தவரை) வாசியுங்கள். உலகத்தரம் மலையகத்தில் எவ்வாறு புகுந்து விளையாடி இருக்கிறது என புளகாங்கிதம் அடையுங்கள். முடிந்தால் சந்தோசத்தில் மாரடைத்துச் செத்துப் போங்கள். ஒவ்வொரு மேடைகளிலும் புகழுங்கள். எங்கள் கதைகள் உலகத்தரம் என எண்ணிக் கொண்டே புல்லரிப்பில் தலையை மண்ணுக்குள் புதையுங்கள். எங்களின் தேவைகள், சிந்தனைகள் எல்லாவற்றையும் மறந்து நாங்கள் சரியென மார் தட்டுங்கள். வாசிப்புக்களும் தேடல்களும் பலன் தராது தேவைப்படாது. 'பாவம்' மலையகம் குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டந்தான்.

இயல்பாகத் தெரிவதொன்றை அப்படியே சித்திரிப்பதன் மூலம் அதன் நிஜத்தை அறிவதாகாது. ஆனால், எங்கள் தேடல்கள் புலக்காட்சியைத்தேடி வரலாறு படைப்பதிலும், நாட்குறிப்புக்கள் வரைவதிலும் எங்கள் காலங்கள் போய்க்கொண்டிருக்கிறது. பின்தங்கியிருத்தலும், பழமையின் ஊறலும் கூட தெரியாத வண்ணம் எங்களை மெச்சிக் கொண்டிருக்கிறோம். புதுமையின் வடிகால்களை மறைத்து தேங்கி நிற்றலையே விரும்புகிறோம். இந்தக் கஷ்டங்களைத் தவிர்க்க குறித்த சில எழுத்தாளர்களிடம் மாத்திரம் கதைகளைப் பெற்று 'இலட்சியக் கதைஞர்கள்' என்ற தலையங்கத்தில் புகைப்படங்களையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கலாம். புதுத் தோன்றல்களை, சிந்தனையை மிதித்து அடக்கியது மாத்திரமல்லாமல் (உலகத்தரம் என்ற பெயரில்) எலும்புக் கூடுகளை குண்டு மனிதர்களாக (உலக அளவில்) பிரகடனப்படுத்த வேண்டி ஏற்பட்டிருக்காது. என்ன செய்வது? நாம் இருப்பது உயர்ந்த பள்ளத்தாக்கில் என்பதால் எங்களது எச்சங்களும் அப்படியே தான் இருப்பதாக முடிவுகள் அறியத்தருகின்றன. இந்த முடிவுகள் கூட திரைப்படக் கதைஞர்களை உருவாக்க முயலும் என்ற திருப்தியில் (இலட்சிய நாயகர்களையும், பொழுது போக்கு அம்சங்களையும் புசித்த சந்தோசத்தில்) கனவு காண வேண்டியிருக்கின்றது.

பி.கு:-

"இன்னவைதாம் கவியெழுத (கதையெழுத) ஏற்ற பொருள் என்று பிறர் சொன்னவற்றை நீர்திருப்பிச் சொல்லாதீர்"

-மஹாகவி

- பூச்சியத்தார்

நன்றி - நூலகத்திட்டம்



# சீன அச்சுறுத்தல் என்கிற பூச்சாண்டி

## -சில மேலதிக குறிப்புகள்

எஸ்.வி. ராஜதுரை

> "உலக வரலாற்றில் நடந்த மோதல்கள், சண்டைகள், போர்கள், சச்சரவுகள் ஆகியவற்றுக்கான பல்வேறு காரணிகளில் பண்பாட்டு, சமய, நாகரீக வேறுபாடுகளும் அடங்குமேயொழிய அவை மட்டுமே அவற்றுக்கான சர்வபொதுக் காரணிகளல்ல. சம்பந்தப்பட்ட நிலப்பகுதிகள், மூலவளங்கள், செல்வங்கள், சொத்துக்கள், அதிகாரம், அந்தஸ்து, குழுநலன்கள், வர்க்க நலன்கள் என்பன போன்ற காரணிகள் மட்டுமல்லாது தனிமனிதர்களின் ஆளுமைகளும் கூட போர்களுக்கும் வன்முறைகளுக்கும் காரணமாக இருந்திருக்கின்றன."

'சீன அச்சுறுத்தல் என்ற பூச்சாண்டி'என்ற கட்டுரையில் (சரிநிகர், நவ. 28, 1998) சர்வதேச விவகாரங்களில் மேற்கு நாடுகள் கடைப்பிடிக்கும் இரட்டை நிலைப்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. அக்கட்டுரையில் குறிப்பிடப்படும் பிரான்சிஸ் புகுயாமா *(Francis Fukuyama)* சாமுவேல் ஹன்டிங்டன் *(Samuel Huntington)* ஆகியோர் குறித்துக் கட்டுரையாளர் மேலதிகமாக எழுதியிருக்கலாமே என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சோவியத் முகாம் நாடுகள் சரிந்துவிழப போவதை உணர்ந்த புகுயர்மா உலக ஆன்மா தனது வளர்ச்சிப் போக்கின் இறுதியில் ரஷ்ய முடியாட்சி வடிவத்தை எய்தது என்ற ஹெகலியக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உலகின் வரலாறு மேற்கு நாட்டு தாராளவாத ஜனநாயகம், தடையற்ற சந்தை ஆகியவற்றுடன் முடிவடைந்து விட்டதாகவும் அவையிரண்டும் மறுக்க முடியாத, அழிக்க முடியாத வெற்றியை அடைந்துவிட்டதாகவும் எழுதினார்.

ஆனால், முன்னாள் சோவியத் நாடான யூகோஸ்லாவியாவின் தகர்வும் அதன் சிதைவும் அங்கு நடந்த இனப்படுகொலைகளும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளும், புகுயாமா போன்ற முதலாளித்துவ சிந்தனையாளர்கள் பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் மீறும் தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தையும் பற்றித் தீட்டி வந்த பிரகாசமான பண்ணைச் சித்திரங்களைக் கிழிந்து தொங்கும்படி செய்து விட்டன.

எனவே அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் மேன்மையைப் பற்றிய புதிய சித்திரங்கள் தேவைப்படலாயின. அச்சித்திரங்களைத் தீட்டுவதற்கும் அமெரிக்க, ஐரோப்பிய வல்லரசுகளின் மேலாதிக்கத்தை நியாயப் படுத்தவும் ஏகாதிபத்தியக் கருத்தியல் தளத்தில் செயல்படும் செல்லப் பிள்ளைகளில் ஒருவரான சாமுவேல் ஹன்டிங்டன் முன்வந்தார்.

வியட்நாம் யுத்தத்திற்கு எதிராக அமெரிக்காவில் மாணவர்கள், இளைஞர்கள், கறுப்பின மக்கள், புதிய இடதுசாரிகள் முதலியோர் 1970களில் போராட்டம் நடத்தி வந்த காலத்தில். அமெரிக்க ஆளும் வர்க்கங்களுக்காக ஒரு அறிக்கை தயாரித்து கொடுத்த ஹன்டிங்டன் "அமெரிக்காவில் அளவுக்கு அதிகமாக ஜனநாயகம் வழங்கப்பட்டு விட்டது" என்று குறை கூறியது நினைவு கூரத்தக்கது.

மேற்குலகின் ஜனநாயகம், தடையற்ற சந்தைப் பொருளாதாரம் ஆகியவற்றின் வெற்றிக்கான அறிகுறிகள் மானுடக் கண்களுக்குப் புலப்படாத வெகுதூரத்தில் இருப்பதால் புகுயாமாவின் அதீத நம்பிக்கைக் கோட்பாடுகளுக்கு மாற்றீடாக, ஹன்டிங்டன் 'அச்சுறுத்தல்கள்' என்ற புதிய புனைவுகளை உருவாக்கியுள்ளார். மேற்குலகம் புதிய அச்சுறுத்தல்களை எதிர் கொண்டுள்ளது என்றும், 'நாகரீகங்களின் மோதலை' எதிர் கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்றும் அமெரிக்க, ஐரோப்பிய வெள்ளை இன மக்களை எச்சரிக்கிறார்.

'நாகரீகங்களின் மோதல்' என்ற கட்டுரையில் அவர் கூறும் 'ஆய்வுரைகள்' கீழ்வருமாறு: இனி எதிர்வரும் காலத்தில் 'நாகரீகங்களின் மோதல்' தான் உலக அரசியலில் ஆதிக்கம் செலுத்தும். 'நாகரீகங்களுக்கிடையிலான பிரிவினைக் கோடுகள் தான் எதிர்காலத்தில் சண்டைக்களங்களாக இருக்கும்.

அதற்கான ஆறு காரணங்களை ஹன்டிங்டன் கூறுகிறார்:(1) 'நாகரீகங்களுக்கிடையிலான வேறுபாடுகள். அடிப்படையானவை. (2) பண்பாட்டுக் கூறுகள் எளிதில் விட்டுக் கொடுக்கப்படக்கூடியவை அல்ல. (3) வெவ்வேறு 'நாகரீகங்களைச் சேர்ந்த மக்களின் ஊடாட்டம் ஓர் எதிர்மறையான முறையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. (4) நவீனமயமாக்கல் என்பது மத அடிப்படைவாதத்திற்கு எரிச்சலுண்டாக்கிக் கொண்டிருக்கிறது. (5) மேற்குலகைச் சேராத சமுதாயத் தலைவர்கள் *(Non-Western Elites)* மேன்மேலும் சுதேசித்தன்மையைப் பெற்று வருகின்றனர். (6) பண்பாடு, மதம் ஆகியவற்றின் மூலமாக பொருளாதாரப் பிரதேச உணர்வு *(Economic)* மென்மேலும் வலுப்பட்டு வருகிறது.

தன் வாதங்களுக்கு வலுச் சேர்க்கும் பொருட்டு ஹன்டிங்டன் மற்றொரு 'அபூர்வமான' கண்டுபிடிப்பொன்றை வழங்குகிறார்: பல நூற்றாண்டுகளாகவே நாகரீகங்களுக்கிடையிலான வேறுபாடுகள் தான் மிக நீண்டகாலம் நீடித்த, மிகுந்த வன்முறை கொண்ட மோதல்களைத் தோற்றுவித்துள்ளன.' இந்தக் கூற்றை மெய்ப்பிப்பதற்கான அனுபவ உண்மைகளையோ, விபரங்களையோ ஹன்டிங்டன் தருவதில்லை. ஆயினும் இத்தகைய அபத்தமான கூற்று, இந்தியாவின் அணுகுண்டுச் சோதனை பற்றி ஐரோப்பாவிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகை வெளியிட்ட கட்டுரையொன்றுக்கு அடிப்படையாக இருந்தது. அணுகுண்டுகள் கிறிஸ்தவ, யூத, கண்பூசிய, இந்து. முஸ்லிம் மத நாகரீக அடிப்படையில் தயாரிக்கப்படுவதாக சைவ வேளாளர்களின் கண்ணோட்டத்துடனும் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன.

உலக வரலாற்றில் நடந்த மோதல்கள், சண்டைகள், போர்கள், சச்சரவுகள் ஆகியவற்றுக்கான பல்வேறு காரணிகளில் பண்பாட்டு, சமய, நாகரீக வேறுபாடுகளும் அடங்குமேயொழிய அவை மட்டுமே அவற்றுக்கான சர்வபொதுக் காரணிகளல்ல. சம்பந்தப்பட்ட நிலப்பகுதிகள், மூலவளங்கள், செல்வங்கள், சொத்துக்கள், அதிகாரம், அந்தஸ்து, குழுநலன்கள், வர்க்க நலன்கள் என்பன போன்ற காரணிகள் மட்டுமல்லாது தனிமனிதர்களின் ஆளுமைகளும் கூட போர்களுக்கும் வன்முறைகளுக்கும் காரணமாக இருந்திருக்கின்றன.

இரண்டு மதங்களுக்கு (நாகரீகங்களுக்கு) இடையில் நடந்த மோதல் என நாம் பள்ளிப்பாடங்களில் படித்த சிலுவைப் போர்களை எடுத்துக் கொள்வோம் மூர்களின் (முஸ்லிம்களின்) அதிகாரத்தை நசுக்கி, ஜெருசலத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற மத்தியகாலக் கிறிஸ்தவர்களின் கனவு, அன்று மத்திய கிழக்கு மீது நடத்தப்பட்ட பல்வேறு படையெடுப்புகளுக்கான ஒரு உந்துசக்தியாக இருந்தது உண்மை தான். ஆனால், அரபு நாடுகளின் அபரிதமான செல்வத்தைக் கைப்பற்றும் நோக்கம் அப்போர்களுக்கான முக்கியமான காரணமாகும் என்பதை மறந்து விடக் கூடாது. அதேபோல், தமது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக ஒருவரோடொருவர் கடும் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவ இனத்தவர்கள் அந்த சிலுவைப் போர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். அது மட்டுமல்ல, தமது அதிகாரத்திற்கு அடங்காத நிலப்பிரபுத்துவம் குறுகிய மன்னர்களின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்காக கிறிஸ்தவ திருச்சபை சிலுவைப் போர்களைப் பயன்படுத்தியது.

நாகரீகத்தின் அடையாளங்கள் என்று ஹன்டிங்டனால் குறிப்பிடப்படும் சமயம், பண்பாடு இதர குறியீடுகள், சின்னங்கள் ஆகியன அப்பட்டமான அதிகார வேட்டையையும், செல்வத்திரட்டையும், கொள்ளையடிப்புக்களையும் மூடி மறைக்கின்ற கவசங்களாக இருந்திருக்கின்றன. பிற நாட்டின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றுவதும், செல்வங்களைக் கொள்ளையடிப்பதுமே பெரும்பாலான மோதல்களுக்கான தூண்டு வரிசையாக இருந்திருக்கிறது. எந்தவொரு மோதலுக்கும், போரிற்கும் அடிப்படையாக உள்ள பல்வேறு காரணிகளைக் கருத்திற் கொள்ளாமல் அதனை 'நாகரிகங்களின் மோதல்' என்று ஹன்டிங்டன் வலியுறுத்துவதற்கான நோக்கத்தைப் புரிந்து கொள்வது கடினமான விஷயமல்ல.

மிக அண்மையில் பொஸ்னியா ஹர்சகொவினியாவில் நடந்த மோதல், ஆர்த்தடக்ஸ் *(Orthodex)* கிறிஸ்தவ செர்பியர்கள், கத்தோலிக்க குரோஷியர்கள், முஸ்லிம் பொஸ்னியர்கள் ஆகியோர் உலகம் முழுவதிலுமுள்ள தங்கள் சக மதத்தினரின் ஆதரவுடன் நடத்திய மதப் போர் தான் என்று நாம் முடிவுக்கு வரமுடியுமா? ஹன்டிங்டனின் 'தத்துவத்தை' ஏற்றுக் கொண்டால் இந்த முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியிருக்கும். அதற்கு அடிப்படையான காரணமாக இருந்தது, முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசின் அநீதியான அதிகாரக் கட்டமைப்புகளாகும். செர்பியர்கள் அரசியலிலும் இராணுவத்திலும் ஆதிக்கம் செலுத்தினர். ஆனால், அக்குடியரசின் பொருளாதார, தொழில், அறிவியல் வளத்தையும், பலத்தையும் வழங்கி வந்தவை ஸ்லோவேனியா, குரோசியா, பொஸ்னியா, ஹர்சகொவினியா ஆகியவை தான். கொசோவோ மாநிலத்தைச் சேர்ந்த அல்பேனியர்களுக் கோ அரசியல், பொருளாதார, சமூக வலிமை ஏதும் இருக்கவில்லை.

இதன் காரணமாக செர்பியரல்லாத பிற இனங்களிடையே அதிருப்தியும்,- பகையுணர்வும் தோன்றலாயிற்று.- செர்பியர்களை ஒப்பிடுகையில், நாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களே என்ற எண்ணம் அவர்களிடையே ஏற்பட்டது. 1980 களில் செர்பியப் பெருந்தேசிய வெறி உக்கிரமடைந்ததால் நிலைமைகள் இன்னும் சீர்கெட்டன. இது போன்ற காரணங்களால் தான் யூகோஸ்லாவியக் குடியரசு பிளவுபட்டு, பின்னர் இனப்படுகொலைகள் நிகழத் தொடங்கினவேயன்றி, 'நாகரீகங்களின் மோதலால்' அல்ல.

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகள் அங்கே தலையிட்டன. அதற்குக் காரணம் மத, நாகரீக உணர்வுகளல்ல. (பிரிட்டன் முதன்மையாக ஆங்கிலிக்கன் புரட்டஸ்ந்து நாடு, பிரான்ஸ் ஒரு கத்தோலிக்க நாடு, ஜெர்மனியில் பகேரியா தவிர மற்ற எல்லா மாநிலங்களும் புரட்டஸ்தாந்து தான். செர்பியக் கிறிஸ்தவம் இதில் எதனோடும் ஒட்டாதது. குரோஷியர்கள் மட்டுமே கத்தோலிக்கர்கள். புவிசார் அரசியல், புவிசார் பொருளியல் நலன்களின் அடிப்படையில் தான் பிரிட்டன் அங்கு தலையிட்டது. ஸ்லோவெனியாவுக்கு ஆதரவாக நின்ற ஜெர்மனி ஐரோப்பாவில் பலம்மிக்கதாக உருவாகாமல் தடுக்கும் பொருட்டு செர்பியாவைப் பலப்படுத்துவதற்கு பிரிட்டன் முயன்றது. ஏற்கெனவே கிழக்கு - மேற்கு ஜெர்மனிகள் ஐக்கியப்பட்டிருந்ததால், ஐரோப்பாவில் அதிகாரச் சமநிலையைப் பேணுவதற்காக பிரான்சும் கூட பிரிட்டனுடன் ஒத்துழைத்தது. பொஸ்னியா- ஹெர்சேகோவினாவில் அமெரிக்கா பெரிய அக்கறை ஏதும் காட்டவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. (1) பொஸ்னியா, குவைத் போல எண்ணெய் வளமுடைய நாடு அல்ல: (2) ஐரோப்பாவில் தனது நெருக்கமான கூட்டாளியாக உள்ள பிரிட்டனின் விருப்பத்திற்கு மாறாக அமெரிக்கா எதையும் செய்யாது.

தனது ஆக்கரமிப்பையும் தான் இழைத்த சில இனப் படுகொலைகளையும் நியாயப்படுத்துவதற்கு செர்பியத் தலைவர்கள் 'கிறிஸ்தவ வேடம்' பூண்டனர். இஸ்லாமிய அடிப்படைவாதத்திலிருந்து கிறிஸ்துவத்தை - குறிப்பாக ஆர்த்தடொக்ஸ் கிறிஸ்துவத்தை - காப்பதற்கான போரில் தாங்கள் ஈடுபடுவதாகவும் செர்பியா இஸ்லாத்திலிருந்தும், முஸ்லிம்களிடத்திலிருந்தும் ஐரோப்பாவைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார்கள். அதேபோல ஐரோப்பாவிலும் உலகில் சில பகுதிகளிலும் உள்ள முஸ்லிம்களில் பலர் பொஸ்னியாவில் நடப்பது மேற்கு நாடுகளுக்கும் இஸ்லாத்திற்கும் இடையிலான போர் என்று பிரச்சினையை எளிமைப்படுத்தி விளக்கி வந்தனர். ஹன்டிங்டனின் 'நாகரீகங்களின் மோதல்' என்ற கோட்பாட்டின் பலவீனம் பொஸ்னியப் பிரச்சினையில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

மேலும், 'நாகரீகங்களின் மோதல்', பண்பாட்டுக் கூறுகள் எழுதி விட்டுக் கொடுக்க முடியாதவை என்ற கருத்துக்கள் நாகரீகங்களுக்கிடையே ஆக்கபூர்வமான எதிர்கொள்ளல்கள், ஊடாட்டங்கள், ஒத்துழைப்புக்கள், ஊடுருவல்கள், விட்டுக்கொடுப்புக்கள் ஆகியன ஏற்பட்டுள்ளதையும், ஏற்பட்டு வருவதையும் ஒரு குறிப்பிட்ட நாகரீகம் பல்வேறு நாடுகளுக்குப் பரவும் போது அங்குள்ள சூழலுக்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்வதையும் மாற்றமடைவதையும் ஒரு நாகரீகத்தின் அம்சங்களை மற்றொரு நாகரீகம் உட்கிரகித்துக் கொள்வதையும், பார்க்கத் தவறுகின்றன.

சமய நாகரீகங்கள் சமாதான சக வாழ்வு நடத்தின. நடத்துகின்றன. 15ம் நூற்றாண்டு வரை ஸ்பெயினின் ஒரு பகுதியில், இஸ்லாமியர்களின் (மூர்கள்) ஆட்சி நிலவியது. அந்த ஆட்சி இஸ்லாம், கிறிஸ்தவம், யூதம் ஆகிய மூன்று மதங்களையும் சரிசமமாக நடத்தியது. மற்றொரு புறம் கிறிஸ்தவ நாடுகளுக்கிடையிலும், இஸ்லாமிய நாடுகளுக்கிடையிலும்.

எண்ணற்ற 'மோதல்களும் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. பன்னூறாண்டுகளாகவே இஸ்லாத்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே தொடர்பு இருந்து வந்துள்ளது. மத்தியகால ஐரோப்பாவில் கணிதம், அறிவியல், மருத்துவம், கைத்தொழில், கட்டிடக் கலை முதலிய பல்வேறு விஷயங்களின் வளர்ச்சிக்கான அத்திவாரங்களை அமைத்தது இஸ்லாம்தான். மேற்கத்திய இசைக்கு இஸ்லாம் வழங்கிய பங்களிப்புகள் கணிசமானவை. இந்தியாவில் இஸ்லாத்தின் வருகை தந்த பங்களிப்புகளை உணவு வகைகள், உடை வகைகளிலிருந்து கட்டிடக் கலை, இசைக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் ஆகியவற்றில் காணலாம். மிகச் செறிவான, இலக்கிய வளம் மிகுந்த உருதுமொழி, சூஃபி மார்க்கம் ஆகியனவும் கூட இஸ்லாத்தின் கொடைகள்தான். அதுமட்டுமல்லாமல் உலக மதங்கள் எல்லாமே அனைவர்க்கும் பொதுவான பல விழுமியங்களைக் கொண்டிருக்கின்றன.

வெவ்வேறு நாகரீகங்களையும், பண்பாடுகளையும் கொண்டுள்ள நாடுகள் பொதுவான நலன்கள், அக்கறைகள், ஆர்வங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன என்பதை ஹன்டிங்டன் பார்க்க மறுக்கிறார். 'ஒரு பொது நாகரீகத்தில் வேர் கொண்டிருந்தால் தான் பொருளாதாரப் பிரதேச உணர்வு *(Economic Regionalism)* வெற்றி பெறக்கூடும்' என்று கூறும் அவர் இதற்கு உதாரணமாக ஐரோப்பிய சமூகத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இந்த ஐரோப்பிய சமூகம் முழுவதும் ஒரு ஐரோப்பியப் பண்பாட்டையும், மேற்கத்திய கிறிஸ்துவத்தையும் பகிர்ந்து கொள்கின்றன என்கிறார். 'மேற்கத்திய கிறிஸ்தவ' பிரிட்டனும், ஜெர்மனியும் ஒன்றையொன்று அழிப்பதற்கான போரில் அரை நூற்றாண்டுக்கு முன் ஈடுபட்டதைக் கூட ஹன்டிங்டன் மறந்துவிட்டார் போலும்! அதுமட்டுமன்றி ஐரோப்பிய சமூகத்தை உதாரணம் காட்டும் அவர், ஒன்றுக்கொன்று வேறுபட்ட நாகரீகங்களைக் கொண்ட தென்கிழக்கு ஆசிய நாடுகள் சேர்ந்து உருவாக்கியுள்ள ஏசியான் *(Assciation of Southeast Asian)* என்ற அரசியல், பொருளாதார அமைப்பைப் பற்றி பேசுவதே இல்லை. ஹன்டிங்டனின் அளவுகோல்படி பார்த்தால் இந்த நாடுகளில் நான்கு 'நாகரீகங்கள்' உள்ளன: பௌத்தம், (தாய்லாந்து). கன்பூசியம் (சிங்கப்பூர்): கிறிஸ்தவம் (பிலிப்பைன்ஸ்): முஸ்லிம் (புரூனேய், இந்தோனேசியா, மலேசியா) இவற்றில் இரண்டு நாடுகள் (தாய்லாந்து, இந்தோனேசியா) பயங்கரமான பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கக் காரணம் ஒரு புறம் மேற்கு நாட்டு கிறிஸ்தவத்திற்கும், மற்றோர்புறம் பௌத்தம், இஸ்லாம் ஆகியவற்றுக்கும் இடையில் நடந்த 'நாகரீகங்களின் மோதல்' அல்ல. மாறாக, உலக மயமாகும் முதலாளித்துவத்தின் நிதிமூலதனமும் ஊக மூலதனமும் *(Speculatives Capitalism)* சேர்ந்து நடத்திய வர்த்தகச் சூதாட்டம்தான் காரணம். இந்த நாடுகளின் பொருளாதார சரிவுகளைத் தொடர்ந்தும் 'ஏசியான்' என்ற பிரதேச அமைப்பு நிலைத்து நிற்கிறது.

பொதுவான நாகரீகத்தில் வேர் கொண்டிருப்பதாலேயே ஐரோப்பிய சமூகம் என்ற பொருளாதாரப் பிரதேச அமைப்பு சாத்தியமாகியுள்ளது என்று கூறும் ஹன்டிங்டன், கிழக்கு ஆசியாவில் ஜப்பானில் அத்தகைய பொருளாதாரம், கூட்டமைப்பு ஏற்படுத்த முடியாமைக்கு ஒரு விளக்கம் சொல்கிறார் ஜப்பானின் சமுதாயமும், நாகரீகமும் அலாதியானவை: பிற கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஜப்பானின் வர்த்தக, முதலீட்டுத் தொடர்புகள் எவ்வளவு வலுவாக இருந்தபோதிலும் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியன போல ஒரு ஒன்றுபட்ட பிரதேச பொருளாதார அமைப்பை அதனால் உருவாக்க முடியவில்லை: அதற்குக் காரணம் மற்ற கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஜப்பானுக்கும் இடையே உள்ள காலாசார வேறுபாடுகள் தான். அவைதான் தடையாக விளங்குகின்றன.

உண்மைகளை அறியாமல் தான் ஹன்டிங்டன் இவ்வாறு எழுதுகிறாரா என்ற வியப்பு ஏற்படுகிறது நமக்கு. கிழக்கு ஆசியாவில் ஜப்பானால் ஒரு பிரதேச பொருளாதார அமைப்பு ஏற்படுத்த முடியாமைக்குக் கலாசாரத் தடைகள் அல்ல காரணம். அமெரிக்காவிற்கு ஆத்திரமும், கோபமும் காட்டும் எந்த நடவடிக்கையையும் ஜப்பானால் மேற்கொள்ள முடியாது என்பது ஹன்டிங்டனுக்குத் தெரியாதா? இரண்டாம் உலகப்போரில் அடைந்த தோல்வி, போருக்குப் பின் தனது பொருளாதாரத்தை மறுநிர்மாணம் செய்யவேண்டியிருந்தமை, அமெரிக்காவுடனான பாதுகாப்பு மற்றும் அரசியல் பிணைப்புக்கள் ஆகியவற்றின் காரணமாக ஜப்பான் பிரதேச, சர்வதேச விவகாரங்களில் அமெரிக்காவிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியுள்ளது. கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளுடன் சேர்ந்து ஒரு பிரதேச பொருளாதார அமைப்பை உருவாக்குவது, அப்பிரதேசத்தில் தனது ஆதிக்கத்திற்கு விடுக்கப்படும் சவால் என அமெரிக்கா கருதும் என்பதை ஜப்பான் அறியும். சில ஆண்டுகளுக்கு முன் கிழக்கு ஆசிய பொருளாதாரக் கூட்டமைப்பு *(East Asia Economic Councils)* என்ற அமைப்பு குறித்த ஆலோசனையை ஜப்பான் வெளியிட்டபோது அமெரிக்க அதை விரும்பவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

நன்றி - நூலகத்திட்டம்



## நூல் மதிப்பீடு

# தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள்:
# ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தில் அதன் 'இடம்' எது?



தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச்சிறுகதைகள்
- ஓர் ஆய்வு
மரீனா இல்யாஸ்
வெளியீடு:
தமிழ் மன்றம்
10, 4ம் ஒழுங்கை
கொஸ்வத்தை வீதி,
ராஜகிரிய

ஒரு பல்கலைக்கழக மாணவியின் தமிழ்ச் சிறப்புப் பாடத்திற்கான ஆய்வுக் கட்டுரையின் நூல் வடிவம் இது. முஸ்லிம் கவிஞையாக ஒரு கட்டத்தில் பரிணமித்த மரீனா இல்யாஸ் ஈழத்து தமிழ் இலக்கியத் துறைக்கு குறித்துச் சொல்லத்தக்க பங்களித்த தென்னிலங்கை முஸ்லிம்களது தமிழ்ச் சிறுகதைகளை ஆய்வுத் தலைப்பாக எடுத்துக் கொண்டது சிறப்பான விடயம்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியே தென்னிலங்கை என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடும் நூலாசிரியை, தலைப்புத்தந்த எதிர்பார்ப்பை உள்ளே தரவில்லை. இதை அவரே இவ்வாறு குறிப்பிடுகிறார். 'எனது ஆய்வில் இலக்கியவாதிகள் பற்றிய விபரங்கள்' பட்டியல் படுத்தப்பட்டுள்ளனவே தவிர அவர்களின் படைப்புக்கள் விரிவாக ஆராயப்படவில்லை' இது பெரும் குறையாகவே படுகிறது. அத்துடன் சிறுகதை இலக்கிய வரம்புகள் அல்லது இலக்கியத்தரமான சிறுகதைகள் இவை தான் என ஆசிரியரின் கணிப்பீட்டின்படி அடையாளம் காணப்பட்டு அவை பற்றிய ஆய்வு நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும். இலக்கியத் துறைகளில் எண்ணற்றோர் ஈடுபடினும் இலக்கியத் தரத்தின் அடிப்படையில் ஒரு சிலரே தேர்வாகின்றனர். இந்நூலிலும் கூட ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளென அடையாளம் காணப்பட்ட சிலரின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். இந்தத் தேர்வுப் பட்டியலில் தென்னிலங்கைச் சிறுகதையாளர்கள் இடம்பெற்றுப் போகாததன் நியாயமான காரணம் என்ன, என்பதைக் கேள்வியாக எழுப்பி, தலைப்புக்கேற்ப சிறுகதைகளை இலக்கியக் கணிப்பீட்டுடன் ஆய்ந்திருந்தால் விடை கண்டிருக்க முடியும்.

இது தவிர பொதுவாக பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் பாலாரது ஆய்வில் இருக்கும் முக்கிய குறைபாடு யாதெனில், தொடர்ந்து பார்வைக்கு உட்பட வேண்டிய இதுபோன்ற விடயங்கள் சமர்ப்பித்தலுடன் முடிந்து போவதும், ஏற்கனவே சொல்லப்பட்ட, எழுதப்பட்ட விடயங்களை தொகுப்பதுமாகும். இதில் ஆய்வாளருக்கென்று ஒரு பார்வை இருப்பதில்லை. இலக்கிய விமர்சன, ஆய்வில் இந்நிலை குறைபாடுகளையே தோற்றுவிக்கும். அது இதிலும் நிகழ்ந்திருக்கிறது.

நூலின் இரண்டாம், மூன்றாம் இயல்கள் ஒருவகை 'திருப்பிச் சொல்லல்களாக வேறுவேறு தலைப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்த, செய்து வருகின்ற தென்னிலங்கை முஸ்லிம்கள் பற்றிய பல தகவல்களை இந்நூல் தருகிறது. தமிழைத் தாய்மொழியாகவும், இஸ்லாத்தை மதமாகவும் கொண்ட தென்னிலங்கை முஸ்லிம்கள் அந்தத் தனித்துவங்களைப் பேணி கலை இலக்கியங்களில் ஈடுபடுவது ஒரு முக்கியமான குறிப்பான விடயம். இந்த விஷேட அம்சத்திற்காகக் கூட ஈழத்துத் தமிழிலக்கியத்தில் தென்னிலங்கை எழுத்தாளர்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள். நூலாசிரியை சொல்வது போல் 'இலங்கையின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை ஆராய்வோர் தென்னிலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பை ஒருபோதும் மறுத்துரைக்க முடியாது' இந்த வகையில் மேற்சொன்ன அவதானங்களுடன் இவர்கள் பற்றிய இந்த நூலையும் நாம் கருத்திற் கொள்ளத் தான் வேண்டும்.

-எம்.கே .எம். ஷகீப்.



நீங்கள் நலமாக..

டொக். எம்.கே. முருகானந்தன்

விலை ரூ 150/-

விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற அறிவியல் துறைசார்ந்த விடயங்களை தமிழில் எழுத முடியும் என்ற நம்பிக்கை இன்று வரை-தமிழ் மொழிமூலம் கல்வி ஆரம்பமாகி நான்கு தசாப்தங்கள் ஆகிவிட்ட பின்னும் - எம்மிடையே வலுப்பெறவில்லை. என்றே சொல்ல வேண்டும். அதிலும் மருத்துவ அறிவூட்டலுக்கான நூல்கள் தமிழில் எல்லோருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் எழுதப்பட முடியுமா என்ற கேள்வி மிகவும் பலமாகவே இருக்கிறது. ஆயினும் அதுமுடியும் என்று கூறி ஏனைய அறிவுத்துறை நூல்களை விட மிகவும் அவசியமானதும், மக்கள் மத்தியில் பெருமளவுக்கு பரவலாக்கப்பட வேண்டியதும் ஆன மருத்துவத்துறை சார் நூல்களை ஈழத்தில் எழுதத்-துணிந்தவர்கள் இருவர். ஒருவர் பேராசிரியர் நந்தி அவர்கள். மற்றவர் எம். கே முருகானந்தன்.

வைத்தியர்களின் தொகை, பொதுமக்களின் தேவைக்கேற்ப இல்லாத காரணத்தினால் மக்கள் தமது உடல்நலம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது. அது ஓரளவுக்கு உடல் நலம் தொடர்பான கவலைகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்று கூறும் டொக்டர் முருகானந்தன் அவர்கள் இப்போது 'நீங்கள் நலமாக' என்ற நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். 'சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர், தாயாகப்போகும் உங்களுக்கு, எயிட்ஸ், பாலியல் நோய்கள், வைத்திய கலகம், போதையைத் தவிருங்கள் போன்ற மருத்துவ அறிவூட்டல் நூல்களை எழுதி வெளியிட்ட டொக்டர் முருகானந்தனின் இப்போது வெளிவந்துள்ள 'நீங்கள் நலமாக' அவரின் இன்னொரு அருமையான நூல்.

கேள்வி பதில் வடிவிலமைந்த, கையடக்கமான இந்நூல் காய்ச்சல், வலிப்பு, பாலகர்களின் உணவு முதல் புற்றுநோய் நீரிழிவு உட்பட வெளித்தொடை விரைப்பு, தசைச்சோர்வு நோய் வரையாக 45 நோய்கள் பற்றிய பயனுள்ள தகவல்களைக் கொண்டதாக அழகுற அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

டொக்டர் முருகானந்தனுக்கே உரிய எளிய அழகிய தமிழில் சுவைபட எழுதப்பட்ட இந்நூல் ஒவ்வொருவரும் படிக்க வேண்டி ஒரு நூல் என்பதில் ஐயமில்லை.

தனது இந்த நூலை 'நலவியல்' நூல் என்று குறிப்பிடும் அவரின் 'நலவியல்' என்ற சொல்லாக்கமும் நயக்கத்தக்கது.

-சுவா



'நாடோடிகள்'
வெளியீடு
புதிய பண்பாட்டு அமைப்பு
தொடர்புகளுக்கு
அ. கனகராஜா
எலிப்படை மே.பி
பொகவந்தலாவ.

'மலையகம் சூழ் கொள்ளும் வரலாற்று நெருக்கடிகளை எதிர்-கொள்ள எமது 'நாடோடிகள்' ஒரு துளி பங்களிப்பை வழங்குமென நம்புகின்றோம் என்ற ஆசிரியர் குழுவின் எதிர்பார்ப்புமிகு நம்பிக்-கையோடு மலையகத்திலிருந்து புறப்பட்டுள்ளார்கள். 'நாடோடிகள்'. இது இவர்களின் இரண்டாவது புறப்பாடு. "மலையகம் முன்னொரு போதும் இல்லாத அரசியல், பொருளாதார, பண்பாட்டு நெருக்க-டியை நோக்கிச் சென்று கொண்டி-ருக்கிறது. என்று குறிப்பிட்டுள்ள ஆசி-ரியர்கள், அதன்பால் தங்கள் கவனத்தைச் செலுத்தி ஆக்கங்களைத் தொகுத்திருப்பது சிறப்புக்குரியது.

புறப்பட்டுள்ள இவர்கள் அடைய வேண்டி இலக்குகளையும், கடக்க வேண்டிய துாரங்களையும் எட்டும் போது மலையகத்தில் கலை, இலக்-கிய, அரசியல், பண்பாட்டுத் தளத்தில் பங்காற்றிய பெருமையைப் பெறுவர் என எதிர்வு கூறலாம்.

-நில்ஷா

## கவிதை!

### நீர்ப்பாம்புகள் மீன்களுக்குப் பதிலாக

பாலத்தின் மதகருகில் வட்டமாகக் கிடந்த
பெற்றோல்மக்ஸ் வெளிச்சத்தில்
புரண்டு ஓடியது கறுப்புத் தண்ணீர்,
வலைகளுக்குள் நீர்ப்பாம்புகள் மட்டுமாய்
வலைஞர்களின்
மீன் கனவுகளை சிதறடித்து

அந்த வெளிச்ச வட்டத்தில்
நீர்ப்பாம்புகளின் மீது பாய்ந்தது
வலைஞர்களின் கோப இருட்டு

ஆற்றங்கரை கற்களில்
நீர்ப்பாம்புகளின் தலைகள்
அடிக்கப்பட்ட பொழுதில்
அந்த இரவு அமைதியிழந்தது

ஆற்றின் கரையில் பங்கர் மின்மினிகள்
வெளிச்சத்துடன்
வெடியொலி எழுப்பத் தொடங்கின

எதிரி மீன்கள்
வலையில் சிக்காமல் போக
வலைஞர்கள் நீர்ப்பாம்பானார்கள்
துப்பாக்கிகள் கற்களாகின

ஆரி. முரளீஸ்வரன்

### இன்னும் எழுதாத அந்தக் கவிதை

முட்டை பொரித்து
குஞ்சு பெருத்து
தொன்னூறிலேயே
நிறையுடலியாகிட்டு கவிதை!

கண்ணாடி ஜன்னலுக்குள்
அடைபட்டு
வெளிவர எத்தனிக்கும்
ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
அவ்வப்போது வந்து
முட்டிச் செல்கிறது அது!

ஈன்றெடுக்கவே
ஒவ்வொரு முறையும்
காகிதத்தில்
பேனாவை நட்டாலும்
வேறொன்றையே
எழுதி முடிக்கிறேன்!

பிரசவத்தில்-
குழந்தையைப் பிறக்கவிடாது
இறுக்கிப்பிடிப்பதான வலி!

கூப்பிடு துாரத்தில் அவர்கள்!
இடையில் -
காவலரணை மட்டும் நம்பி
எப்படிக் கவிதை எழுதுவது?

அவர்கள் தண்டிப்பதற்கு
நான் தொப்பியணிந்திருப்பதொன்றே
போதுமென்றிருக்கையில்:
அவர்களின்-
துன்புறுத்தலுக்காய்
நான் வாய்விட்டு அழுவது கூட
குற்றமாகாதா?

ஆக
அந்தக் கவிதை
எனக்குள்ளேயே செத்துப்போகட்டும்!

எஸ். நஸீம்

### உலக அதிசயம்

உதிர்ந்த பிரமிட்டையோ
நீங்கள் நீக்கி விட்டு
எனது தேசத்தை
உலக அதிசயமாக்குங்கள்!

நாயாய் -
மனிதனை அடைப்பதும்
மனிதனை மாடாய் மேய்ப்பதும்
இங்குதான் நடக்கிறது.

துப்பாக்கி முனையில்
நீ புலி
இவன் பயங்கரவாதி
அவன் போராளி எனப் பிரிப்பதும்
இங்குதான் நிகழ்கிறது.

கண்தோண்டிய சவங்களையும்
கழுத்து வெட்டிய
முண்டங்களையும்
நீங்கள் இங்கே காணலாம்!

களனி கங்கையில்
மண்டை ஓட்டையும்
பாழ் கிணற்றில்
எலும்புக் கூண்டையும்
நீங்கள் இங்கே
தரிசிக்கலாம்!

வீடு இழந்து.....
ஊர் இழந்து....
தாய், தந்தையை இழந்து
புக்காரா விமானத்துக்கு
பயந்து நடுங்கி
கண்ணீரோடு வாழும்
ஓர் இனத்தைப் படம் பிடிக்கலாம்!

பட்ட மர நிழலில்
உணவு இல்லாமல்
உணர்வு இல்லாமல்
எலும்பும் தோலும் கொண்ட
வளர்ந்து வரும் ஒரு
சோமாலியத் தீவை
சுற்றுலா பார்க்கலாம்!

போதாக் குறைக்கு
சீனப் பெருஞ் சுவரையும்
இடித்துத் தள்ளிவிட்டு
செம்மணியில் புதைந்திருக்கும்
எனது சகோதரர்களின்
மண்டை ஓட்டையும் அடுக்கி
அழகும் பார்க்கலாம்.

தோழர்களே!
நண்பர்களே!!
ப்ரியமான எதிரிகளே!!!
உதிர்ந்தது பிரமிட் அல்ல....
சாய்ந்தது பைசாக் கோபுரம் அல்ல....

எனது இனத்தின் கண்ணீர்
எனது இனத்தின் விடுதலை.

1998.10.15

சுதாகர்

நன்றி - நூலகத்திட்டம்



# மு.தவும் தேசிய இனப்பிரச்சினையும்:
# எழுதப்படாத குறிப்புகள்!

-மு.பொ.

*சரிநிகர்* 159வது இதழில் சாந்தன் அவர்கள் மு.த.வின் நோக்குப் பற்றியும் அவரால் 1960ல் எழுதப்பட்ட 'ஒரு தனிவீடு' நாவல் பற்றியும் 10 கேள்விகள் எழுப்பியிருந்தார். இவைபற்றி மு.த.வின் கருத்தரங்கில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் பொதுவாக அங்கு வராத ஏனையோருக்கும் அறியத் தருவது நல்லதே.

சாந்தனின் 10 கேள்விகளில் ஒரே கேள்வியே வெவ்வேறு சில வித்தியாசங்களோடு கேட்கப்பட்டிருந்தன. அவரின் கேள்விகளில் முக்கியமானவையாக உள்ளவை:


1. முக்கியமான கருத்தை முன்வைப்பதாகக் கூறப்படும் இந்நாவல் ஏன் அவர் உயிரோடு இருக்கும்போதே வெளியிடப்படாமல் ஏன் 25 வருடகாலம் எடுத்தது?

2. மு.த. இந்நாவலின் சிந்தனைத்தளத்தை (சாந்தன் கூறுவதுபோல) கைவிட்டாரா?

3. மு.த. வால் 'ஒருதனி வீடு'- எழுதப்பட்ட அதேவடிவில் அது வெளியாயிற்றா? என்பன உள்ளன.

இவற்றுக்குப் பதில் அளிப்பதன் மூலம் ஏனையவற்றுக்குமான பதில்களை நாம் கோடி காட்டலாம் என நினைக்கிறோம்.

1. 1960இல் கலைச்செல்வி நாவல் போட்டிக்கு அனுப்பப்பட்ட இந்நாவல் மத்தியஸ்தர்கள் தெரிவுக்காக தமிழ்நாடு வரை (அகிலனிடம்) சென்று, முடிவு வெளிவர கணிசமான காலம் எடுத்தது. முடிவு வெளிவந்தும் கலைச்செல்வியிலே அது வெளிவரவேண்டும் என்ற காரணத்தையிட்டு அது கலைச்செல்வி ஆசிரியர் சிற்பியிடம் கனகாலம் கிடந்தது. பின்னர் கலைச்செல்வி ஒழுங்காக வெளிவ்ராததால் அதை அதற்குரிய பரிசான 500/- ரூபாவை முதலாகப் போட்டு நூலை வெளியிடும்படியும் மேலதிகச் செலவுகளை தான் பொறுப்பதாக மு.த கூறியும் சிற்பி அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. பின்னர் அது கலைச்செல்வியில் 'பிரசுரத்திற்காக அங்கே விடப்பட்டு, கலைச்செல்வி வெளிவராத கட்டத்தில் திருப்பி அனுப்பிவிடும்படி மு.த கேட்க, மனஸ்தாபப்பட்டுக்கொண்டே சிற்பி திருப்பி அனுப்பினார். முதல் பரிசுத் தொகை ரூபா 500/-மு.தவுக்கு கொடுபடவில்லை.(இவை ஏற்கனவே ஈழநாட்டில் எழுதப்பட்டவை) மு.த.முற்போக்கு இலக்கியம் என்ற கட்டுரைத் தொடரை 1962ல் கலைச்செல்வியில் எழுதிய போதுகூட அவர் கைக்கு ஒருதனிவீடு வந்து சேரவில்லை. அவர் கைக்கு வந்த போது மு.த. ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி(1963) எழுதிமுடித்து 'புதுயுகம் பிறக்கிறது'(1965)- தொகுதிக்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இக்காலப் பகுதியில் மு.த.வின் எழுத்துநடை பாரிய முதிர்ச்சி பெற்றிருந்ததால் தனது ஆரம்பகால எழுத்து நடையில் இருந்த ஒருதனி வீட்டை திருப்பி எழுத முயன்றார். முதல் மூன்று அத்தியாயங்கள் திருப்பி எழுதப்பட்டு ரைப் செய்யப்பட்டன. நாவலை திருப்பி எழுதும் முயற்சி, கூடவே அவர் பார்த்து வந்த சமூக வேலைகள், பிற எழுத்து வேலைகள் ஆகியவை அவரை நாவலை உடனேயே வெளியிட விடவில்லை. அவர் இறந்ததற்குப்பின் நிதிப்பிரச்சினை காரணமாக வெளியிடப்படாது கிடந்த அவரது எழுத்துக்களை பத்மநாப ஐயர் வெளியிட முன்வந்தார். அவரது தூண்டுதலின் பேரில் சுவடிகள் திணைக்களத்தில் மு.த. வின் '*ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியை*' பிரதி எடுத்துக் கொடுத்த இ. ஜீவகாருண்யம் அவர்களே ஏனைய அவரது நூல்களான '*யாத்திரை*', '*கல்கி புராணம்*', '*ஒரு தனி வீடு*' ஆகியவற்றையும் மூலத்திலிருந்து பிரதி எடுத்துக் கொடுத்தார். ஏற்கனவே மு. த.வால் தட்டச்சுப்பிரதி எடுக்கப்பட்டிருந்த முதல் மூன்று அத்தியாயங்களோடு ஏனையவை அவரால் பிரதி எடுத்துக் கொடுக்கப்பட்டன. 'யாத்திரை', 'கல்கிபுராணம்' ஆகியவை தமிழ்நாட்டில் 'சமுதாயம்' அச்சகத்தில் தொலைந்து போயின. ஒரு தனிவீடு மட்டுமே வெளியாயிற்று. பத்மநாப ஐயர் லண்டனிலும் ஜீவகாருண்யம் வட்டுக்கோட்டையிலும் இருக்கின்றனர்.



மு.த.

2. 'அன்பு, அறிவு, உண்மை அவையே எம் முன் இறைவன் பிரபஞ்சமே எமது கோயில் பொது வாழ்க்கையே எமது தொழுகை' என்பது மு.த.வால் எழுதப்பட்ட அவருக்கு மிக விருப்பமான MOTTO. இந்தப் பரந்த கருத்தியல் அவருக்கு உவப்பாக இருந்த அளவுக்கு தனிமனித சமூக, இன, தேசியம் ஆகிய பிரச்சினைகளும் அதே அளவுக்கு அதே ஒளியில் பார்க்கவே பட்டன. இதனால் தான் அவர் 1968ல் எழுதிய முற்போக்கு இலக்கியத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். '1956ல் இருந்து இன்று வரை அநேமாக ஒவ்வொரு தமிழரது மனத்தையும் அரித்துக் கொண்டிருக்கும் அந்த மொழிப்பிரச்சினையை, பிரதேச நிர்ணயப் பிரச்சினையை எத்தனை எழுத்தாளர்கள் சீரியஸ்ஸாக அணுகியிருக்கிறார்கள். ஒருவருமில்லை. தேசியம் என்றால் இங்கு ஓர் இனத்தேசியம், ஐக்கியம் என்றால் இங்கு ஓர் இனத்தின் ஆதிக்கம். என்னைப் பொறுத்தவரையில் மொழியுரிமை சமஷ்டி ஆட்சி எல்லாம் என் ஆன்மீக வளர்ச்சிக்கும் என் இனத்தின் ஆத்மீக வளர்ச்சிக்கும் தேவையான அடிப்படை. எனக்கு வகுப்புவாதம் பிடிப்பதில்லை. ஆனால் அதற்காக அடிமைத் தனத்தைஆதரிப்பவனும் அல்ல. சமஷ்டிக் கட்சியின்அங்கத்தவனாய் என்னால் இருக்க முடியாது. எந்தக் கட்சியும் கூடாது என்ற கொள்கையோடு அதன் [illegible] அரைமனச் சீர்திருத்தம், மத்தியதர வகுப்பு பிற்போக்குத்தனம் எல்லாம் பிடிக்காது. ஆனால் சமஷ்டி வாதத்தை மறுக்க முடியாது'

இதுதான் அவர் நோக்கு. அவர் முதன் முதலில் 1957ல் எழுதிய 'தியாகம்' என்ற சிறுகதை சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு அடிப்பட்டுச் சாகும் இளைஞனைப் பற்றியது. 1959ல் எழுதிய 'பெப்ரவரி 4' என்ற சிறுகதை சிங்கள - தமிழ் பேசும் இனங்கள் ஒருங்கிணைந்து வாழ்வது எவ்வளவுதூரம் சாத்தியமற்றுப் போய்விட்டது என்பதைக் காட்டுவது. 1960ல் எழுதிய ஒரு தனி வீடு 58 இனக்கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டு, தம் உரிமைக்காக தமிழர் போராடவே வேண்டும் என்பது பற்றிக் கூறுவதோடு அப்போராட்டத்தில் அப்பிரதான பாத்திரம் இறந்து போவதாகக் கூறாமல் கூறிக்கதை முடிகிறது. 1963ல் எழுதப்பட்ட ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில் என்னென்ன உணர்ச்சிகளாலும் என்னென்ன தேவைகளாலும் முழுத்தமிழ்ச் சமூகமே உந்தப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அதே உணர்ச்சிகளும் தேவைகளும் பொதுவுடைமைக் கட்சியைப் பக்கபலமாகக் கொண்ட முற்போக்கு இலக்கியப் போக்கால் வலுக்கட்டாயமாக அமுக்கி மறைக்கப்பட்டபோது திமிறலும் வெடிப்பும் எங்கிருந்தாவது வரத்தான் செய்யும். மு.தளையசிங்கத்தின் எதிர்ப்பும் போக்கும் அந்தப் பொதுப் பின்னணியின் உடனடித் தேவையை ஓரம்சமாகப் பிரதிபலிக்காமல் இல்லை. என்று கூறும் போதும் இதைத்தான் காட்டுகிறார். அடுத்து 1965ல் வெளியான 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுதியில் உள்ள 'இரத்தம்' என்ற கதை தமிழ்பேசும் இனம் தமது உரிமைகளைப் பெறுவதற்காக இரத்தம் சிந்தவே வேண்டும் என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறது. மேலும் 1970களில் அவர் வெளியிட்ட முக்கிய 'போர்ப்பறை' நூலில் ஒரு தனி வீடு பற்றிக் குறிப்பிடும் போது, அதில் ஒரு தீர்க்கதரிசனம் இருக்கிறது என்றே நம்புகிறேன். அது 'நாமும் வீடும்' என்று திருத்தி எழுதப்படவுள்ளது' என்று மிகத்துல்லியமாகக் கூறுகிறார். இது அவர் தேசிய இனப்பிரச்சினை பற்றி ஓர் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார் என்பதோடு 'ஒரு தனி வீடு' காட்டும் நோக்கை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையும் காட்டும்.


3. இப்படிக் கூறிய மு.த. தனது நோக்கை செயல் வடிவம் பெறச் செய்ய வேண்டும் என்றும் வேட்கை கொண்டார். எழுத்தில் வெளிவராத இவைபற்றியும் சிறிது சொல்லவேண்டும். பிற்போக்குச் சாய்வும் அரைகுறைப்போராட்ட அமைப்பாகவும் இருந்த தமிழரசுக்கட்சியில் நம்பிக்கை இழந்த மு.த. தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளுக்காகப் போராடும் ஓர் அமைப்பை உருவாக்க முனைந்தார். அதனால் பல பிரமுகர்களிடம் சென்று, தான் அமைத்த சர்வோதய அரசியல் முன்னணி' என்னும் அமைப்புக்குத் தலைமை தாங்கும்படி கேட்டார். தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ. இரத்தினம், சுயாட்சிக்கழகத்தலைவர் நவரத்தினம், நேசையா ஆகியோரிடம் சென்று தனது கருத்தைத் தெரிவித்தார். அவர்கள் எவரும் அதற்கு ஆதரவு தரவில்லை. ஈற்றில் ஹன்டி பேரின்பநாயகத்திடம் சென்றார். அவர் ஒருவர்தான் அவரை ஆதரித்தார். அவர் தனக்கு அதிக உடல் நலம் இல்லாததால் தான் தலைமை தாங்க முடியாத நிலையைச் சொன்னதோடு மு.த. வையே தலைமை தாங்கும்படி கூறினார். பின்னர் புங்குடுதீவிலுள்ள பிரமுகர் ஒருவரை சர்வோதய அரசியல் முன்னணியின் அபேட்சகராகப் போட்டு 1970ல் தேர்தலில் மு.த நிற்க வைத்தார். இவர் சுயாட்சிக்கழக நவரத்தினத்தைத் தோற்கடித்து இரண்டாவதாக வந்தார். இவரைச் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் சேரவைத்து, அதன் மத்திய குழுவில் தம்போன்ற ஒருவருக்குப் பதில் உறுப்பினர் பதவியைப் பெற்றுத் தரும்படி கேட்டார். உள்ளிருந்து தமிழ்மக்களுக்காகக் குரல்கொடுப்பது, அவர்கள் மறுக்கும் போது விலகுவது வித்தியாசமான பரிமாணத்தைக் கொடுக்கும் என நம்பினார். (இதன் அருட்டலாக மாத்தறையில் நடந்த சிறிலங்கா சுதந்திக் கட்சி மாநாட்டில் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகவும் தரப்படுத்தலுக்கு எதிராகவும் சு. வில்வரத்தினம் குரல்கொடுத்தது அங்கு இருந்த சிங்கள தமிழ் ஆதரவாளர்களுக்கு பெரும் வியப்பையும் அசௌகரியத்தையும் அளித்தது) ஆனால் மத்திய குழு உறுப்பினர் பதவி மறுக்கப்பட்டதால் ஏழுமாதகால ஆதரவுக்குப் பின்னர், தனது சர்வோதய அரசியல் முன்னணியை அதிலிருந்து விலக்கிக் கொண்டார். தனது சத்தியம் பத்திரிகையில் அது பற்றி அறிவித்தார். (இக்காலத்தில் இவர் 'வடக்கில் வளரும் சுதந்திரக் கட்சி' என்று சத்தியம் பத்திரிகையில் எழுதிவந்த தொடர் சமூக அரசியல் வரலாற்றுக்கட்டுரை மிக முக்கியமானது. அதில் அவர் பழைய தமிழ் தலைமையின் தீர்க்கதரிசன மற்ற போக்கையும் இனி அவர்கள் எவ்வாறு போராட வேண்டும் என்பதையும் திட்டமிட்டு எழுதினார். இடையில் பத்திரிகை நின்றதால் அது பூரணம் பெறவில்லை.

இதன் பின்னர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் கூறியதற்கொப்ப, தன்தலைமையிலேயே சர்வோதய அரசியல் முன்னணியை' ஒரு போராட்ட அமைப்பாக இயக்க முன் வ்ந்தார். அதன் ஆரம்ப வெளிக்காட்டலாகவே சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்தார். இச்சந்தர்ப்பத்தை, இவரால் ஏற்கெனவே கைவிடப்பட்டதோடு கண்டிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீவுப்பகுதி முக்கியஸ்தர்களும் பயன்படுத்தினர். கா. பொ. இரத்தினம் இவரைப் பழிவாங்கிய குழுவுக்குத் தலைமை தாங்கினார். இவ்விஷயத்தில் தீவுப்பகுதி சிறிலங்கா கட்சியினர் ஆதரவு வழங்கினர். பின்னர் நடந்தது தெரிந்ததே.

> மு. த வை சதா அரித்துக்கொண்டிருந்த விஷயம் தமிழ்மக்களின் உரிமைப்பிரச்சினைதான். வேறு எந்தத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்திலும் இல்லாத அளவுக்கு இவரது ஒவ்வொரு நூலிலும் அதுபற்றிய பிரஸ்தாபம் இருப்பதைக் காணலாம்.

மு.த. குவிமையப்படுத்தும் விஷயங்களுக்கு ஏற்ப சில விஷயங்கள் அழுத்தப்படும். சில அழுத்தப்படாமல் போவதுண்டு. ஆனால் அதற்காக அவர் அதை விட்டுவிட்டார் என்பதல்ல. மு. த வை சதா அரித்துக்கொண்டிருந்த விஷயம் தமிழ்மக்களின் உரிமைப்பிரச்சினை தான். வேறு எந்தத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்திலும் இல்லாத அளவுக்கு இவரது ஒவ்வொரு நூலிலும் அதுபற்றிய பிரஸ்தாபம் இருப்பதைக் காணலாம். அதைச் செயல்படுத்தும் அரசியல் வடிவமே சர்வோதய அரசியல் முன்னணி. அதுவே அவரது உயிரையும் குடித்தது.

'போர்க்கோலம்' என்ற செ. கணேசலிங்கனின் நாவலை முற்போக்காளர்களின் போராட்டத்தின் குறியீடாகவும் 'போராட்டம்' என்ற கோஷத்தை தமிழ் மக்களுக்காக போராடுவதாகச் சொல்லிக் கொள்வோரின் குறியீடாகவும் 'போர்ப்பறை' என்ற தனது நூலை முன்னைய இரண்டையும் உள்ளடக்கிய போராட்டத்தின் குறியீடாகவும் கண்டார். உண்மையான பொதுவுடைமை நோக்கில் - சமஷ்டிக் கட்சியினரின் சாதீய, பிற்போக்கு வர்க்கச் சாய்வுகளற்ற - தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அதேநேரத்தில் சிங்கள மக்களின் பயங்களைத் தொலைத்து அவர்களுக்கும் விளங்கிக்கொண்டு ஈர்க்கப்படுகின்ற உண்மையான சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்க அவர் நினைத்தார். இதுமெய்யுள் நூலில் கூறப்படுகிறது. □



# வரலாற்று வஞ்சகம் வேண்டாம்!

சரிநிகர் இதழ் 161இல் பக்கம் 6இல் வெளியான மத்துகம பாத்திமா பர்ஹானா என்பவரால் எழுதப்பட்ட 'எங்கே சுதந்திரம், யாருடைய கதை?' என்ற தலைப்பிடப்பட்ட குறிப்பு தொடர்பாக இதனை எழுதுகின்றேன்.

பர்ஹானாவின் விமர்சனங்களில் பெரும்பகுதியை நானும் பொறுப்புடன் ஒப்புக் கொள்கின்றேன். இவ்வாறான கலை, அறிவியல் அயோக்கியத்தனங்கள் பல தடங்களில் நடக்கவே செய்கின்றது. மீண்டும் மீண்டும் தமிழ்த்தினப் போட்டிகள், சாகித்திய விழா, மாகாண தமிழ் தின விழாக்கள், எல்லாவற்றிலும் மேலோங்கிப்போயுள்ள இந்தப் போக்கினை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும். நிச்சயமாக இவை அம்பலப்படுத்தப்பட வேண்டியவையே!

எனது கரிசனைக்குரிய அம்சம் நாடகம் பற்றியோ, அதன் கதைக் கரு திருட்டுப் பற்றியதோ, விமர்சனம் பற்றியதோ அல்ல. மாறாக, மலையகத் தமிழரின் 174 ஆண்டுகால வாழ்வியல் துயரங்களைப் புரிந்து கொள்ளாமல் வரலாற்றுப் பாடங்கள் குறித்த பிரக்ஞை ஏதுமின்றி ஆளும் வர்க்கத்தின், அதிகாரத்தரப்பின் சீரழிந்து போன நிர்வாக அமைப்பின் ஏக பிரதிநிதியாக நின்று பர்ஹானா சாட்சியமளித்திருக்கிறார். 'தோட்டங்களில் பிரசவ வேதனையில் எவருக்காவது கேற்றை மூடுவது நிச்சயமாக நடந்திருக்காது. அப்படி இது வரைக்கும் முழு மலையகத்தை எடுத்துப்பார்த்தாலும் எங்குமே நிகழ்ந்திருக்க முடியாது' என்று கூறுகிறார்.

இதன் அரசியல் என்ன? அதனைக் குறிப்பிட்ட அவர் யாருடைய பிரதிநிதியாக இருக்கிறார்? எந்தச் சான்றாதாரங்களின் பின்புலத்தில் நின்று இதனை வெளியிடுகிறார்? என்பதை வினாவாமல் இருக்க முடியவில்லை.

நாடகத்தில் பிரசவத் தாய்க்கு கேற்றை மூடுவது ஒரு குறியீடாகக் கூடப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்

எப்படியாயினும், வாகன வசதி மறுக்கப்பட்டு பிரசவத்தின் போது மடியும் பெண்கள் சிசுக்கள், மருத்துவமனைக் கொண்டாட்டங்களுக்காக வீட்டுக்கு விரட்டப்பட்டு மரணிக்கும் நோயாளர், பெண்கள், தாய்மார் தோட்ட வைத்தியசாலைகளின் கேற் திறக்காததால் மரணிப்போர், புலியைப் பெற்றவள் என சிகிச்சை அளிக்கப்படாமல் மரணித்த தாய்மாரும், சிசுக்களும் குறித்த செய்திகள் ஆண்டுதோறும் நூற்றுக்கும் மேற்பட்டவை அங்கொன்றும் இங்கொன்றுமாக பத்திரிகை அறிக்கைகளில் பதிவிடப்பட்டிருக்கின்றன. சரிநிகரில் கூட பல கட்டுரைகள் இது குறித்து வெளியாகின. டெல்மன் வைத்தியசாலையில் பிரசவ தாய் கடுமையான வேதனையுடன் 3 தினம் அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டமையால் சிகிச்சையுமின்றி சுகப்பிரசவமுமின்றி அபாயகரமான சத்திரசிகிச்சைக்கு உள்ளாகி சிசுமரணிக்க நேர்ந்தமையும், டிக்கோயா வைத்தியசாலையில் கர்ப்பிணிகள் நோயாளர் மீதான தாக்குதல்களும், மத்துகம மருத்துவ மனைகளில் புலி க்குட்டியைப் பெற்றதாகக் கூறி கர்ப்பிணிகள் தாக்கப்பட்டமையும் சிசுக்கள் கொல்லப்பட்டமையும் குறித்த செய்திகளையும் இருட்டடிப்புச் செய்து விட்டு முழு 'மலையகத்திலும் இவ்வாறு நடந்திருக்க முடியாது' என சான்று அளிக்க முயல்வது அப்பட்டமாக வரலாற்றை மண்மூடிப் புதைப்பதாகாதா?

தோட்ட அரச மருத்துவர்கள், ஆய்வாளர்கள், திட்டமிடலாளர்கள் பொய் கூறுகிறார்கள். பொய்த் தகவல்கள் தருகிறார்கள், தோட்ட நிர்வாகங்கள் பொய்த் தகவல்கள் கூறுகின்றன. அரசாங்கப் புள்ளி விபரங்கள் நகைப்புக்கு இடமானவையாக இருக்கின்றன.

மலையத் தமிழர்கள் தோட்டப் புறத்தவர்) கேட்பாறின்றி எல்லோராலும் அடிமைப்படுத்தப்படவும், வஞ்சிக்கப்படவும், சுரண்டப்படவும், அடக்கு முறைக்கு உள்ளாக்கவும் கூடியவர்கள் என்ற ஐதீகத்தை ஆதாரமாகக் கொண்டோ என்னவோ பர்ஹானா தரும் அக்கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதே எனது அபிப்பிராயம்

சிலவேளை ஒரு மலையக நாடகம் பரிசு பெற்றமையைப் பொறுக்க முடியாமையை இவ்வாறான ஒரு ஆதாரமற்ற கூற்றை வெளியிடத் துாண்டியதோ என்னவோ. ஒரு நாடகத்தை விமர்சிப்பதற்காக ஒரு சமூகத்தின் வரலாற்றை வஞ்சிக்கத் தேவையில்லை.

பொன்பிரபாகரன்
பொகவந்தலாவ

6 —

## வவுனியா — தேசிய இளைஞர் சேவை...

களஞ்சிய அறையில் கறையானுக்குத் தீனாகப் பயன்படட்டும் என்பது போல போட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த நூல்களில் அரைவாசிக்கு மேலாக கறையான் அரித்து விட்டதாகத் தகவல்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பங்குகள் என்பன உரிய முறையில் அரசாங்கங்களினால் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் மலிந்துள்ள அதே வேளையில், தமிழ்ப் பகுதிகளுக்கென வழங்கப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்கான நிதி மற்றும் வளங்கள் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் தமிழ் அதிகாரிகளினாலேயே அலட்சியப்படுத்தப்படுவது மன்னிக்கப்பட முடியாத குற்றமாகும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து குறிப்பிட்ட அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்க முன்வருவார்களா?

- தவநேசன்

# விழுந்த லிங்கம் திரும்ப ஒட்டியதா? அறிய ஆவல்!

### கடிதம்–1

சரிநிகர் (158) இதழில் செல்வி திருச்சந்திரன் "ஒரு பாலுறவு" என்ற சொல்லாக்கம் தொடர்பாக எழுதியது மிகச் சரியானது. இவ்வாறான சொல்லாக்கங்கள் ஆங்கிலப் பதங்களை நேரடியாக ஒத்த தமிழ்ச் சொற்களை ஆக்குகின்ற ஒரு அவசரத்தின் விளைவுகளே. பாலுறவு என்பது Sexual Relationship / Intercourse என்பதன் தமிழாக்கம். புணர்ச்சி , கலவி என்பன நல்ல தமிழ்ச் சொற்கள். Homo என்ற பதம் ஒரே வகையான, ஒத்த வகையான என்ற பொருளுடையது. இவ்வாறான பதங்களைப் பயன்படுத்தும் போது சிலவேளை அலங்கோலமான சொல்லாக்கங்கட்கும் இடமுண்டு. சம என்ற சொல் தன்னின என்பதை விடச் சிக்கனமானதும் தெளிவானதுமாகும்.

தன்னினச்சேர்க்கை, ஒருபாற் சேர்க்கை, தன்னினப் பாலுறவு ஆகியவற்றை விட சமபாற்கலவி எளிமையும், தெளிவுமுடையது. இவ்வாறே வன்கலவி, வன்புணர்ச்சி, சமபாற்காமம் போன்ற பதங்கள் பரிந்துரைக்க உகந்தன. தமிழில் நிறைய எழுதுவோர் பலர் சொல்லாக்கம் பற்றிப் போதிய கவனமின்றிச் செயற்படுவது வருந்தத்தக்கது. தமிழகத்து நவீனத்துவவாதிகளுக்கு இவ்வாறான சொற் குழப்பத்தில் பெரிய பங்கு உண்டு.

லிங்கம் எப்படி வழிபாட்டுக்குரியதாக வந்தது என்பது பற்றி ஆசிரியரது குறிப்பு ஒரே ஒரு புராணக் கதையை முழு ஆதாரமாகக் கொண்டுள்ளது.

லிங்க வழிபாடு பல்வேறு தொல்குடிகளிடை இருந்துள்ளது. லிங்கமும் யோனியும் இணைந்த வடிவாக அமையும் போது அது ஆணாதிக்கம் என்பதை விடப் புணர்ச்சி, புனர் உற்பத்தி என்பனவற்றின் குறியீடாகவே முதன்மை பெறுகிறது.

சக்தி வழிபாடோ, அர்த்தநாரீஸ்வர மூர்த்தமோ சமுதாயத்தின் அடிப்படையிலான ஆணாதிக்கப் பண்பை மறுதலிப்பன அல்ல. அவை ஆணாதிக்கப் பண்பை மறுதலிப்பன அல்ல. அவை ஆணாதிக்கம் எவ்வாறு பண்டைய மரபொன்றில் இருந்த பெண்ணின் உயர் நிலையைத் தனது தேவைகட்கு அமைய உள்வாங்கியது என்பதையே கூறுவன.

சிவனும் விஷ்ணுவும் ஆரியக் கடவுளரல்லர். அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் பழைய இறைவடிவங்களின் பிராமணிய வடிவங்களாகவே நமக்கு வழங்கப்பட்டு வருகின்றனர். விநாயகர் காலத்தால் பிற்பட்டு உள்வாங்கப்பட்ட ஒரு இறைவன். சைவ - வைணவ மோதலாலும் தமதல்லாத கடவுளரை இழிவு செய்யும் தேவை கருதியும் விநாயகர், திருமால், சிவன், காளி போன்ற பல்வேறு தெய்வங்கள் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வொரு விதமாக இழிவு செய்யப்படுவதை நாம் காணலாம்.

இவ்வாறான இழிவுபடுத்தல்கட்குச் சமூகக் காரணிகளும் உண்டு. இவை பற்றிய நிதானமான, விரிவான ஆய்வுகள் இந்திய ஆய்வாளர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றே நம்புகிறேன்.

கட்டுரையாசிரியரது ' லிங்க வழிபாடு பற்றிய குறிப்பு, பழைய திராவிட இயக்கப் பாணியில் உள்ளதே ஒழிய கட்டுரைக்குரிய கனதி உடையதாக இல்லை. எனவே அது ஒரு வகையிற் பொருத்தமானது தான்.

புராணங்களை எல்லாம் வாசித்தறியாததால் எனக்குள் ஒரு ஐயம் எழுகிறது. சிவனின் லிங்கம் பிறகு அவரது உடலில் ஒட்டியதா இல்லையா என்று அறிய ஆவலாக உள்ளேன். சிவனின் சிற்பங்களில் ஆணுறுப்பு உள்ள இடம் மறைக்கப்பட்டுள்ளதால் என்னால் இதை ஊகிக்க முடியாதுள்ளது. சிவன் காளியுடன் போட்டியிட்டு நடனமாடிய போது செவியில் தோடு விழுந்ததாக மாயங்காட்டிக் காலை உயரத் தூக்கி நடனமாடு முன்பா பின்பா அந்த விபத்து நேர்ந்தது எனவும் விஞ்ஞானபூர்வமாகக் கட்டுடைத்து அவர் எழுதி அருளுவாரென எதிர்பார்க்கிறேன்.

### கடிதம்–2

சுதந்திர இலக்கிய விழாக் குழுவினர்க்கு நானெழுதிய மடல் தொடர்பாக மு. பொன்னம்பலம் சரிநிகர் 162ல் கூறியுள்ள சில தனிப்பட்ட எண்ணங்கள் பற்றி நான் அலட்டிக் கொள்ள அவசியமில்லை. என் கூற்றுக்கு அவரது வியாக்கியானங்கள் பற்றிச் சிறிது கூற வேண்டியுள்ளது.

எனது கடிதத்தில் ஆத்மாவின் பேரை நான் குறிப்பிடாமைக்கான ஒரே காரணம், பிரச்சினைக்குரியவர் அவரல்லர் என்பதே. அவ் வருடத்துத் தொகுதிகளுள் வில்வரத்தினத்தினது தொகுதி தவிர்ந்த எதுவும் போரின் முகங்களுடன் பரிசைப் பகிர்வது மிகவும் அபத்தமாகவே இருந்திருக்கும்.

எனது ஆட்சேபம் தெரிவுக் குழுவின் எந்த உறுப்பினரதும் மதிப்பீடு பற்றியதல்ல. நடுவர் எவரதும் விழுமியங்கள் சார்ந்து அமையும் முடிவுகளை இறுதியாகச் சீர்துாக்கி, அப்பட்டமான குற்றம் ஏதேனும் இருப்பின் அதைச் சரி செய்வது சு.இ.வி. குழுவின் பொறுப்பு. அதை நிறைவேற்றத் தவறிப் பரிசு பற்றிய இறுதி முடிவை எடுத்தோர் எவராயினும், குறைந்த பட்சம், அவர்கள் தவறாக வழி நடத்தப்பட்டோரென்பேன். குழறுபடியான ஒரு தீர்ப்பை வழங்கியதற்கு வேறு விளக்கம் இருப்பின், அது சு.இ.வி. குழுவுக்கு இலக்கியப்பரிசு வழங்கும் தகுதியையே கேள்விக்கு உட்படுத்தி விடும்.

சில வருடங்கள் முன்பு 'பணிதல் மறந்தவர்' என்ற எனது தமிழாக்கத் தொகுதிக்குப் பரிசளிக்காமல் கே.கணேஸின் தமிழாக்கத்திற்குப் பரிசு வழங்கப்பட்ட போது சிறிது சலசலப்பு ஏற்பட்டதாக அறிந்தேன். அது பற்றி எனக்குக் கூறிய நண்பரிடம் கணேஷுடைய தமிழாக்கப் பிரிவு கௌரவிக்கப்படுவது பற்றிய எனது மகிழ்ச்சியைக் கூறி அவரது நூல் பற்றிய முடிவு எனக்கு முற்றிலும் ஏற்புடையதே என விளக்கினேன். அது போன்ற சில நல்ல தீர்ப்புக்கள் முன்னர் எடுக்கப்பட்டதாலேயே இவ்வருடம் நடந்த விழாவுக்கு நான் போனேன். பரிசு அறிவிக்கப்பட்ட பின்பு, அங்கு எனது நியாயத்தை விளக்காமல் அதை மறுத்து விடுவது அங்கு வருகை தந்த மற்றோரைப் புண்படுத்தும் என்பதால், அவ்வாறு செய்யாது வீடு திரும்பியதும் முதல் வேலையாக எனது மறுப்பைத் தெரிவிக்கும் கடிதத்தை எழுதினேன். இரு தினங்களுள் அதன் பிரதியைச் சரிநிகருக்கு அனுப்பினேன்.

ஆத்மாவின் கவிதைகளின் அரசியல் காரணமாக அவை எனது கவிதைகட்கு அருகாக வைத்துக் கருதப்படுவதை என்னால் ஏற்க இயலாது என்ற வாதம் மு.பொவுக்கு உடன்பாடானதாயின், அவ்வாதம் சு. வில்வரத்தினத்தின் கவிதைகள் பற்றிய எனது குறிப்புடன் முரண்படுமென்பதை அவர் கவனிக்கத் தவறிவிட்டார் என்றே தோன்றுகிறது.

ஆத்மாவிடம் மு.பொ. காணுகின்ற 'இஸ்லாமிய அடிப்படைவாதப்' பண்புகளை நான் காணவில்லை என்பது போக, நாட்டில் உள்ள தமிழ்த் தேசியவாதக் குழுக்களது குறுகிய மனோபாவம் காரணமாக உருவான தீவிர முஸ்லிம் இன உணர்வைச் சிறிது அனுதாபத்துடனேயே நான் இன்னமும் நோக்குகிறேன்.

நிற்க, மற்றோருக்கு நோக்கங்கற்பித்து வியாக்கியானங்கள் செய்வது அதிகாரத்துவஞ் சார்ந்த ஒன்றல்ல என நம்புவோமாக.

சிவசேகரம்,
கொழும்பு

3 —

## வடமேல்..

சாப்பிட்டு வந்தால் மூச்சுப் பிரச்சினை ஏற்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக இறந்து விடுவார்களென வைத்தியர்களும் தெரிவித்திருந்தார்கள். திறந்த பொருளாதாரத்துக்கு மனித முகம் கொடுப்பதாகக் கூறிய பொ.ஐ.மு. தனது மக்களுக்கு குதிரைக்கு கொடுக்கும் தீவனத்தையே கொடுத்து வந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பயன்பாட்டுக்கு உதவாத சேலைன்களை அரச வைத்தியசாலைகளில் வழங்கப்பட்ட செய்தியும் எம் எல்லோருக்கும் தெரியும். இந்தத் தேர்தல் வருடத்தில் மீண்டும் எம்மெல்லோரிடமும் வரப்போகிறார்கள். குதிரைத் தீவனத்தை வழங்கியவர்கள் நாளை மாட்டுக்கு கொடுக்கும் புண்ணாக்கையும் கொடுக்க உத்தரவு கேட்டு வருபவர்களுக்கு நல்ல பாடம் மக்கள் வழங்கும் தீர்ப்பிலேயே தங்கியுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.19/4, நாவல வீதி, நுகேகொட


## பெரியர் வாழ்க!

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வன்முறைகள் மலிந்துவிட்டிருக்கின்றன.

பொ.ஐ.மு.வின் அமைச்சர் பரிவாரங்கள் தமது வாகன இலக்கத்தகடுகளின் இலக்கங்களை மறைத்துக்கொண்டும் மாற்றிக் கொண்டும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு துணை செய்ய அனுப்பி வைத்திருக்கின்றன. இந்தத் தேர்தல் ஆளும் பொ.ஐ.மு.வினதும் ஐ.தே.க.வினதும் பலத்தை-அதுவும் பாராளுமன்ற தேர்தல் நடக்கப்போகிற அடுத்த ஆண்டின் முடிவைக் காட்டுவதற்கான ஒரு ஒத்திகைத்தேர்தலாக இரு கட்சிகளாலும் கருதப்படுகிறது. இதனால் இரண்டு கட்சிகளும் தமது குண்டர் பலத்தில் நம்பிக்கை வைத்து களத்தில் இறங்கியுள்ளன.

ஆளுங்கட்சியான பொ.ஐ.மு அதிகார ஆயுத பலத்துடன் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

தேர்தலையொட்டி நடந்த வன்முறைச் சம்பவங்களில் பெருமளவுக்கு வன்முறையில் ஈடுபட்டவர்கள் பொ.ஐ.மு.வினரே என்று தகவல்கள் கூறுகின்றன.

அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற ஆயுதம் தூக்கியவர்களை பயங்கரவாதிகளெனக் கூறும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சட்டங்கள் இவர்களை எப்படி அழைக்கப்போகின்றன என்று தெரியவில்லை. நிச்சயமாக இவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. இவர்களது நடவடிக்கைகளும் பயங்கரவாதமல்ல. இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவோ விசாரிக்கப்படப்போவதில்லை என்பது மட்டும் இப்போதைக்குத் தெரிகிறது.

எந்த 17 வருடகால படுகொலை ஆட்சிக்கு மாற்றாக ஒரு பொ.ஐ.மு. ஆட்சியை மக்கள் விரும்பிக் கொண்டு வந்தார்களோ அந்தப் பதினேழு வருடகால ஆட்சியை, அதன் அனைத்துப் பரிமாணங்களிலும் பொ.ஐ.மு. நடாத்தி வருகின்றன.

ஆனால் நாட்டில் ஒரு ஜனநாயகத் தேர்தல் நடாத்த விருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை பொ.ஐ.மு. பிராண்ட் ஜனநாயகமென்றால் இப்படித்தான் இருக்கும் போலும்!

யுத்தம் மூலம் சமாதானம் காண முடியும் என்று தத்துவம்தந்த பொ.ஐ.மு., படுகொலை நடவடிக்கைகளாலும் வன்முறைத் தாக்குதல்களாலும் ஜனநாயகத்தை மீட்டெடுத்து விடலாம் என்று இன்னொரு தத்துவத்தையும் கொண்டிருக்கிறதோ என்னவோ?

பொ.ஐ.மு., தனது கடந்த நான்கு ஆண்டுகால வரலாற்றில் சாதித்த சாதனைகளை காட்டி மக்களிடம் வாக்கு பெற்று விடமுடியாது என்பதால் துப்பாக்கிகளைக் காட்டி எதிராளிகளை மிரட்டுவதன் மூலம் தேர்தலில் வெற்றிபற்றுவிடமுடியும் என நம்புகிறது.

அது பதவிக்கு வரமுதல் தெரிவித்த 300க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில் 10க்கும் குறைவான வாக்குறுதிகளையே நிறைவேற்றியுள்ளது என்று தெரிவிக்கின்றன புள்ளிவிபரங்கள்.

சொன்னதைச் செய்யாதவர்களை கயவர்கள் என்று சொன்னார் அவ்வையார். ஆனால் பொ.ஐ.மு.வினரை நாம் கயவர்கள் என்று சொல்லாமா? அப்படிச் சொல்வது அழகல்ல. சொல்லாமலமே பெரியர் என்றும் அதே அவ்வையார் கூறியிருக்கிறாரே. அவர்களை பெரியோர் என்று அழைப்போம்.

ஆம், அவர்கள் சொல்லாததைச் செய்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் யுத்தத்தை தொடர்கிறார்கள்.

அகதி மக்களுக்கான நிவாரணத்தை வெட்டிக் குறைத்து பட்டினிப் போடுகிறார்கள்.

அரசியல் எதிரிகளை, தொழிற்சங்கப் போராட்டங்களை துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டுகிறார்கள்.

இப்படிப் பலசெய்யப்பட்டவை சொல்லாமல்.

ஆகவே அவர்கள் பெரியோர். பெரியோர் வாழ்க!

## வவுனியா:
## வரி வசூலிக்கும் நகர சபை உறுப்பினர்கள்?

சர்வதேச மன்னிப்புச் சபை வவுனியாவில் எட்டு நபர்கள் காணாமல் போயுள்ளதாகவும், இவர்கள் புளொட் அமைப்பினாலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதாகவும், தமது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. மேலும் காணாமல் போனவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அது தனது அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஜனவரி 11ம் திகதி அறிக்கையில் கிளிநொச்சியைச் சேர்ந்தவரும், வேப்பங்குளத்தை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னுத்துரை ரவீந்திரன் காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளது.

நவம்பர் 26ம் திகதி வவுனியா, குருமண்காடு, ஸ்டேசன் வீதியில் உள்ள புளொட் அலுவலகத்தில் அவர் இறுதியாக காணப்பட்டார் எனவும் இவர் அடிக்கடி புளொட் அலுவலகத்துக்கு அடையாள அட்டை பெறுவதற்காகச் சென்றுவந்தார்என்றும் இவர் காணாமல் போனது பற்றி இவரின் உறவினர் புளொட் அலுவலகத்தில் விசாரித்த போது, அவர் அங்கில்லை எனப் புளொட் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அவரது விருப்பத்திற்கு மாறாக, புளொட்டினரால் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், கொழும்பிலிருந்து சி.ஐ.டியினர் வவுனியாவுக்குச் சென்று காணாமல் போன 8 நபர்கள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போன எண்மரின் விபரங்கள் வருமாறு: பாக்கியரத்தினம் யோகேஸ்வரன் (16), சுப்பிரமணியம் அற்புதராசா (17), செல்வராசா தமிழ்ச்செல்வம் (16), மயில்வாகனம் ஜயசீலன் (23), லக்ஷ்மன் கதீஸ்வரன் (22), நடராசா ராஜரத்தினம் (30), வீரய்யா உதயகுமார் (30), குணராசா தனுஷன் (17) என்போராவர்.

வவுனியாவில் ஆட்கள் காணாமல் போவது தொடர்பாகவும், வவுனியாவில் புளொட்டினர் கப்பம் அறவிடுவது தொடர்பாகவும் புளொட்டின் உப தலைவர் நா. மாணிக்க தாசனிடம் பி.பி.சி. பேட்டி கண்டது.

இப்பேட்டியின் போது ஆட்கள் காணாமல் போவதற்கு தமது அமைப்புக் காரணமல்ல என்று மறுத்த மாணிக்கதாசன், வவுனியா மாநகர சபையில் புளொட்டின் வசம் இருப்பதால் அவர்கள் வரி அறவிடச் சென்றிருப்பார்கள். புளொட் மீது களங்கம் கற்பிக்க விரும்புபவர்கள் அதனை புளொட் கப்பம் வாங்குவதாகச் சொல்லியிருப்பார்கள் என்று தெரிவித்தார்.

அதுசரி நகரசபை உறுப்பினர்களே நேரடியாக இப்போது வசூலில் இறங்கி விட்டார்களோ? ஏற்கெனவே வவுனியாவுக்குப் பொறுப்பாக இருந்த பார்த்திபன் என்பவர் வசூலித்த 25 இலட்சத்துடன் லண்டனுக்குக் குடும்பமாகவே கம்பி நீட்டி விட்டார் என்று ஒரு தகவல் சொல்கிறது.

அடுத்தவர் யாரோ?

## "அஷ்ரஃப்பின் எதேச்சதிகாரத்தை சகித்துக்கொள்ள முடியாது"

### முன்னாள் மு.கா. தேசிய அமைப்பாளர் முஸ்தபா

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுள் அண்மையில் இடம்பெற்ற கட்சித்தாவல்கள் யாவரும் அறிந்ததே. இலங்கையின் தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய நூற்றுக்கணக்கானோர் முஸ்லிம் காங்கிரசில் உள்வாங்கப்பட்டனர். இந்த உள்நுழைவுபோல் ஒருசில வெளிப்பாய்ச்சல்களும் இடம்பெற்றன. இதில் குறிப்பிடத்தக்கவர் மையோன் முஸ்தபா. ஐ.தே.க. முஸ்தபா உள்நுழைய இவர் வெளியேறியிருந்தார். முதலில் இவரை வெளியேற்றியதாகத்தான் செய்தி வந்தது. ஆனால் அவரோ 'அஷ்ரஃப்பின் எதேச்சதிகார தனத்தை சீரிய சிந்தனையுள்ள எந்த மனிதனாலும் பொறுத்துக்கொள்ள முடியாது, என அறிக்கைவிட்டு தான், தான் ராஜினாமாச் செய்ததாக தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரசின் தேசிய அமைப்பாளராகச் செயற்பட்ட இவர், அஷ்ரஃப் தன் அதிகாரத்தால் குடும்ப அங்கத்தவர்களுக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும் மட்டும் தொழில்களை வழங்கி கட்சியை வளர்க்கிறார். இது ஏனைய சமூகங்களிடையே முஸ்லிம் சமூகம் பற்றிய தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார். அத்துடன் அவர் அஷ்ரஃப் தன்னைவிட எவரும் முன்னுக்கு வந்து பிரபலம் பெற்றுவிடக்கூடாதென்ற மனப்பயப்பிராந்தியுடன் இருக்கிறார் எனவும் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

"ஐ.தே.க. ஆட்சியில் முஸ்லிம் கலாசார அமைச்சு இருந்தது. ஹஜ் பொது விடுமுறை தினமாக இருந்தது. எல்லாவற்றையும் விட ஒரு முஸ்லிம் கவர்ணராக இருந்தார், என்று குறிப்பிட்டுள்ள முஸ்தபா, இந்த ஆட்சியில் முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெறுவதில் அஷ்ரஃப்பின் பங்களிப்பு குறைந்ததே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வாக்கு எண்ணிக்கை கணிப்பீட்டில் இவரின் வெளியேற்றம் மு.காவுக்கு பாதகமில்லையாயினும் கட்சிக்கு கரும்புள்ளி இட்டுள்ளது என்ற வகையில் முக்கியமானது.

இது தவிரவும், கட்சிக் கீதத்துக்கு எழுந்து மரியாதை செய்ய மறுத்த ஒரு மௌலவியும் கட்சியால் நீக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

–சர்தார்

## அகதி வாழ்க்கையில்..

— 3

குடிசைகளை உள்ளே வந்து பாருங்கள். வானம் தெரிகிறது. இந்த அடைமழைக்கு நாங்கள் படும்பாட்டை அதிகாரிகள் உணர்வதாகத் தெரியவில்லை என்றார். இவருக்கு ஏழு குழந்தைகள் இருக்கிறார்கள். மூத்த பெண்ணின் வயது 19. கணவர் கூலி வேலை செய்கிறார். வாரத்தில் மூன்று நாட்கள் வேலை கிடைப்பதே கஷ்டம். இந்த நிலையில் நிவாரணங்களும் நிறுத்தப்பட்டால் சாப்பிட்ட நாட்களை விட பட்டினி கிடந்த நாட்களே இவர்களுக்கு அதிகம். இது ஒரு உதாரணம். எல்லாக் குடும்பங்களின் நிலையும் ஏறத்தாழ இது தான்.

ஆரம்ப நாட்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் இவர்களுக்குக் கிடைத்துள்ளன. தற்போது அவையும் குறைந்து விட்டன. அரசும் நிவாரணத்தை நிறுத்தி விட்டது. பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் அவர்கள்தான் அடிக்கடி வந்து பார்வையிட்டு அவ்வப்போது ஏற்படும் கஷ்டத்தை நீக்கி வைக்கிறார். முஸ்லிம் காங்கிரஸ் பிரதி அமைப்பாளர் என்.எப்.எம். நிசாம், பா.உ.ரவூப் ஹக்கீம் ஆகியோரும் அவ்வப்போது கரிசனை செலுத்தி வருகிறார்கள். மறைந்த பா.உ. தங்கத்துரையும் தன்னாலான உதவிகளைச் செய்திருக்கிறார்.

35 வருடப் பழமைவாய்ந்த இக்பால் நகர் முஸ்லிம் கலவன் பாடசாலையும் அகதியாகி லவ்லேனில் இயங்குகிறது. 300 பிள்ளைகளுடன் அகதியான இப்பாடசாலையில் சூழ்நிலை காரணமாக தற்போது 175 பிள்ளைகளே படிக்கிறார்கள். ஆண்டு எட்டுவரை இயங்குகிறது. அதிபர் எஸ். ஏ. அனீஸ் அவர்களுக்கு உதவியாக 12 ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

சமூகக்கல்வி ஆசிரியர் நாகூர்பிச்சை அப்துல்லாஹ் கூறும்போது "எதிரொலிப்பு நிறைந்த களஞ்சியம் ஒன்றிலேயே எங்கள் பாடசாலை இயங்குகிறது. பெற்றோர்களின் உதவியால் கொட்டில் ஒன்றும் போட்டிருக்கிறோம். இவ்வாண்டு பாலர் வகுப்புக்கு சுமார் நாற்பது பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள். கல்வித் திணைக்களம் சற்றுக்கரிசனை காட்டினால் எங்கள் குழந்தைகள் மேலும் முன்னேற்றம் அடைவார்கள்" என்று தெரிவிக்கின்றார்.

இக்பால் நகர் மக்கள் மட்டுமல்ல அதனை அண்டியுள்ள கோணேசபுரி, ஆத்திமோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் எப்போது சொந்த இடத்தில் வாழ்வோம் என்ற ஏக்கத்தில் தான் இருக்கிறார்கள். அடிப்படை வசதிகளேனும் செய்து கொடுத்து அவர்களை மீளக்குடியேற்றுவது அரசின் கடமை. கடமை நிறைவேறுமா? □

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு பிறின்ற் இன். இல. 07. கெசுடிய இடம், சிறிமல் உயன. இரத்மலானை. 990112